
மண்ணில்
தெரியுதொரு
தோற்றம்
எஸ். அகஸ்தியர்
ஸ்ரீசக்தி
பிரசுரம்

3699
7
3706

SITHY VI... Y.G
...ALALAI WEST
...UNNAKAM
LIBRARY

SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM
Ef/61

HY VIR
KARIALAI
CHUNNAKA

வீரகேசரி பிரசுரம்: 63

# மண்ணில் தெரியுதொரு தோற்றம்

எஸ். அகஸ்தியர்

VINAYAGAR LIBRARY
CHUNNAKAM

வெளியீடு
வீரகேசரி
த.பெட்டி 160,
கொழும்பு.

# MANNIL THERIYUTHORU THOTRAM

By
S. AGASTHIAR.

FIRST EDITION

FEBRUARY 1978

COPYRIGHTS
RESERVED WITH
THE PUBLISHERS

PRICE Rs. 4-90

VIRAKESARI
PIRASURAM 63

Published by

VIRAKESARI
P. O. Box 160, COLOMBO.

Sole Distributors:
Express Newspapers (Ceylon) Ltd.
185, GRANDPASS ROAD,
COLOMBO-14.

# ஆசிரியர் உரை

மோகலாகிரியிலாழ்த்தும் நச்சு இலக்கியங்களும், காதற்கதைகளும், 'திகி' லூட்டும் மர்மக்கதைகளும் 'பொழுதுபோக்குக்கலை இலக்கியங்கள்' என்ற 'பவுசு'டன் பத்தினிவேஷந்தாங்கி, வெறுங் 'கத்தை'களாகக் குவிந்து, சமூகத்தில் நடமாடி, கொலை—கொள்ளை—கற்பழிப்புப் போன்ற சீரழிவுகளுக்கே தூபமிடுகின்றன.

மனிதகுலத்தின் சமதர்ம வாழ்வுக்கான மாநிலத்தினை இவ்விலக்கியங்கள் திசை திருப்பி, சமுதாய வாழ்வு பற்றிய மக்களின் அறிவையும், போராட்ட உணர்வுகளையும் மழுங்கடித்து, குறிப்பாக நமது கண்மணிகளான இளஞ்சந்ததியினரைச் 'சித்தப்பிரமி'களாக்கிவிடுகின்றன. சமூகத்தின் யதார்த்த நிலையையும், வாழ்க்கையையும் இவை மக்கள் கண்களிற் புலனுக்காமல் 'திரை'யிட்டு விடுகின்றன. இதன் பேருக ஒருவித கற்பனு உலகமும், போலியான வாழ்வுமுறையும் அவர்களிற் கருவூலங்களாகி அவர்களை 'அந்தராத்மா'க்களாக்கி விடுகின்றன. தாம் சந்திக்கும் தோல்விகளை இவர்கள் புரியாது 'விரக்தி' கொண்டு தம்மைத் தாமே வஞ்சித்துக் கொள்வதால் தற்கொலைகளே இவர்களின் 'விடிவு' ஆகின்றன. மக்களின் அவல வாழ்க்கை, நச்சு எழுத்தாளர்களுக்கு 'விநோத' மாகவிருக்கலாம். என்னைப் பொறுத்தவரை 'வாழ்க்கையே ஆன்மாவின் நாதம்' என்பேன்.

இந்த வாழ்க்கையின் ஆன்மாவைச் சரியாகப் புரியாமலே, புரிந்துகொண்டதான பாசாங்கில், சமுதாயக் கண்ணேட்டமின்றி எழுதும் எழுத்தாளனுல் ஒரு போதும் உண்மையான கலை இலக்கியம் படைக்கமுடியாது.

முரண்பட்ட சமூக அமைப்பிற் சிக்குண்டு தவிக்கும் மக்களின் துன்ப—துயர—ஆசா—பாசங்களையும், கொடுமைகள் — கயமைத்தனங்களையுமே 'சித்திரித்து' விட்டு, அதே சமுதாய அமைப்பையோ அதன் சூத்திரதாரிகளையோ தொட்டும் பார்க்காமல்—தெரியாமல் படைக்கப்படுகின்ற இலக்கியங்கள் உயிரற்ற சடலங்களே.

சமுதாயத்தில் புரையோடிக்கிடக்கின்ற நோய்க்கு எழுத்தாளன் மருத்துவம் பார்க்கின்ற கலைஞன். நோய்க்கான காரணத்தைக் கண்டு நோயைக் குணப்படுத்துவதும், மீண்டும் அந்நோய் அணுகாமல் நிவாரணம் அளிப்பதிலுமே எழுத்தாளன் உண்மைக் கலைஞனாகின்றான். இந்த எழுத்தாளன் படைப்பே ஜீவனுள்ள மக்கள் இலக்கியம். கடந்த காலச் சேகரிப்பாகவும், நிகழ்காலவிமர்சனமாகவும், எதிர்கால வழிகாட்டலுமாக அமைவதே உண்மையான படைப்பிலக்கியத்தின் இலக்கணம்.

'மண்ணில் தெரியுதொரு தோற்றம்' கதையில் இவ்விலக்கணப் பண்பினை வாசகர்கள் தரிசிக்கலாம்.

எனது ஒன்பது நாவல்களில் இது ஆறுவது படைப்பு. இதனிற் கையாண்ட உத்திகள் ஏனைய எனது நாவல்களினின்று மாறுபட்டவை. இது நான் தேர்ந்த மையக் கருவின் களத்திலே எழுந்த சிறு பொறியின் ஒரு தோற்றம்.

இக்கதையில் பாத்திரங்களின் குணவியல்புகள்—சித்திரிப்புகள்—சம்பவங்களை ஒறுப்பாக்கி, இதன் உயிர் மூச்சான கருத்துருவத்தை இயல்பாக இழையோட விட்டிருப்பதை வாசகர்கள் அவதானிப்பார்களாக.

இரு தடவை இதனை அடித்துச்சுருக்க நேர்ந்தபோது என் வேதனைச் சுமையிறக்க நகல் பண்ணியுதவியவர் எனது மூத்த புதல்வி நவஜோதி.

நவீன இலக்கிய வாசகர் கூட்டத்தை ஈழத்திற் பரவலாக்கியதில் இன்று முதலிடம் வகிக்கும் 'வீரகேசரி' ஸ்தாபனம், 1970 ல் 'செய்தி'யில் பிரசுரமான இந்நாவலை இப்போது புத்தமாக வெளியிடுகின்றது. இதன் மூலம் இலக்கிய வெளியீட்டுப் பணியைத் திறம்படப் புரிந்து வரும் நிர்வாகி திரு. சி. பாலச்சந்திரன் பி. ஏ. அவர்களுக்கும், ஊழியர்களுக்கும், நாவலைப்பிரசுரித்த 'செய்தி நிறுவகர் திரு. ரா. மு. நாகலிங்கம் அவர்கள், ஆசிரியர் கே. ஜி. மகாதேவா அவர்கள் அனைவருக்கும் நன்றி.

அன்பன்,

எஸ். அகஸ்தியர்.

'அன்னை இல்லம்'
சந்தானபுலம், கீரிமலை.
18—11—1977.

# ஆசிரியரைப் பற்றி

ஈழத்தின் முதிய எழுத்தாளர்களில் ஒருவரான எஸ். அகஸ்தியர், ஈழத்து இலக்கிய உலகிற்கு நன்கு பரிச்சய மானவர். அநேகமாக ஈழத்து பத்திரிகைகள் யாவற்றிலுமே இவர் படைப்புகள் வெளிவந்துள்ளன. பதின்மூன்றுக்கு மேற்பட்ட புனை பெயர்களில் எழுதிவரும் 52 வய தான அகஸ்தியர் தமது 28வது வயதிலிருந்து இது வரை 250 சிறுகதைகளையும் 9 குறுநாவல்களையும், 8 நாவல்களையும், பல கட்டு ரைத் தொடர்களையும் படைத்துள்ளார். இவை மட்டுமன்றி 40 க்கு மேற் பட்ட நாடகங்களையும் எழுதியுள்ளார்.



இவர் எழுதிய 'மண் ணில் தெரியுதொரு தோற் றம்' என்ற நாவல் சிங்கள மொழியில் மொழிபெயர்க் கப்பட்டு சிங்கள இலக்கி யத்திலும் ஓரிடத்தைப் பிடித்துக்கொள்ள இருக்கிறது. அம்மட்டோடு அமையாது சோவியத் ஒன்றியத்திலிருந்து ருஷ்ஷிய மொழியில் வெளிவரவிருக்கும் தமிழ்ச் சிறு கதைத் தொகுதியிலும் இவர் எழுதிய 'வட்டி' என்ற சிறு கதை இடம்பெற இருப்பதாகத் தெரிகிறது.

கடந்த 25 வருட காலமாக சோர்வின்றி எழுத்துப் பணியாற்றும் அகஸ்தியருக்கு நாடகத்திலும், கர்னாடக சங்கீதத்திலும் நல்ல ஈடுபாடுண்டு.

அவள் ஒரு பள்ளி ஆசிரியை; கன்னிப் பெண். கல்யாணம் நிச்சயிக்கப்பட்டு, குழம்பிய பின் இன்னொரு காதல் வலையில் சிக்கு வாளா? அதுவும் அவளின் காதலன்......? முன்னர் நிச்சயிக்கப்பட்டு கைவிட்டவனென் ருல்......!

சுவையான பல நிகழ்ச்சிகள்; உள்ளத்தை நெகிழவைக்கும் உணர்ச்சிமயமான கட்டங்கள் நிறைந்த சமூக நாவல்

# "இதயத் தந்திகள் மீட்டப்படுகின்றன"

எழுதியவர்:

வே. தில்லைநாதன்

## வீரகேசரி பிரசுரம் - 64

படிக்கத் தவறுதீர்கள்!

# மண்ணில் தெரியுதொரு தோற்றம்

**மா**லைப் பொழுது, பூமிக்குள் உறைந்து கொண்டு போகின்ற வேளை.

மீளாத மையல் கொண்ட இளங் குமரிகளின் முகங்கள் போல் பூமி எங்கும் இருள் கவிந்து கறுத்து வருகிறது.

ஊருக்குள்ளே சந்தடி ஓயவில்லை; சமர்க்களம் போல் அப்பலோதிப்பட்டுக் கொண்டிருக்கிறது கிராமம்.

எங்கோ தொலை தூரத்துக்கப்பால் ஜன சந்தடியின் இரைச்சல் ஆர்ப்பரித்துக் கேட்டது.

ஜானகி எட்டிப் பார்த்தாள்.

ஜனந் திரண்ட பெரு நீள ஓர் ஊர்வல அணி.

அண்ட கோளங்களும் பூமண்டலமும் அதிர்ந்து நொறுங்குவனபோல், அந்த ஊர்வலம் சுலோகங்களை ஏந்திக் கோஷித்துக் கொண்டு, ஜானகி வீட்டுக்கு எதிர் கொண்ட வீதி வழியே வந்து கொண்டிருந்தது.

கொடிகள் வானளாவ அசைந்தாடி முன்னேறிக் கொண்டிருக்க, ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கிய வண்ணம் வந்து கொண்டிருந்தான் பொன்ராசா.

அவன் வீராவேசமாக முஷ்டிகளை உயர்த்திக் கொண்டு சுலோகங்களைப் பிரகடனஞ் செய்ய, அவனைத் தொடர்ந்து தொழிலாளர்களும் விவசாயிகளும் வீறுக அந்தச் சுலோகங்களைக் கோஷித்தபடி வந்தார்கள்.

ஊர்வலம் வீதியை அடைத்துக் கொண்டு சமீபித்து விட்டது. கோஷத்தின் எதிரொலிகள் நிலமதிர்ந்து தெறிக்கின்றன:

''பொது மக்கள் போரணி?''

''பொங்கி எழுந்தது!''

''சீர் திருத்த வாதம்?''

''சுரண்டுவோனின் கீதம்!''

''தரிசு நிலங்களை?''

''பகிர்ந்து கொடு!''

''வேலையற்றோருக்கு?''

''வேலை கொடு!''

''ஜாதி பேதச் சகுனிகள்?''

''நாசமாகி ஒழிக!''

வீதியை நெருக்கி அடைத்துக் கொண்டு ஜனத்திரள் விரைகின்றது. அந்த வேளையிலே...

ஒரு சந்தியின் வேலி மறைப்பிற்குள்ளிருந்து, எறிகுண்டுகள், 'திடீ'ரென அந்த ஊர்வலத்தில் வந்து விழுகின்ற அதிர்வொலிகள், 'டோம் டோம்' என்று கேட்டன.

ஊர்வலம் திகறுண்டு அல்லோல கல்லோலப்பட்டு நாற்திசையும் கலைந்தது.

ஒரு பெண், அபயக் குரல் எழுப்பினாள்.

''ஐயோ, அம்மா!''

பொன்ராசாவின் மார்பு ரணகளமாகப் பிளந்து விட்டது.

அவன் மார்பை அழுத்திப் பிடித்துக் கொண்டு நிலத்தில் அடிசாய்ந்து குற்றுயிராக விழுந்தான்.

''ஆ, ஐயோ!''

அறை அதிர, வீரிட்டுக் கத்திக்கொண்டு துடித்து எழுந்தாள் ஜானகி.

நெஞ்சு திடுக்கிட்ட பொன்னையர் 'சடா' ரென்று எழுந்து சென்று கதவைத் திறந்து, நடுங்குங் கரங்களால் கதவு நிலையைத் தாவிப் பிடித்தபடி, ஜானகியின் படுக்கையை எட்டிப் பார்த்தார். அறை ஏகலும் ஒரே 'கும்' மிருட்டாகக் கிடந்தது.

''பிள்ளை ஜானகி, என்னது சத்தம்; வாய் புலம்பினியா?'' என்று கேட்டுக்கொண்டே. -சுவரைத் தடவிச் 'சுவிற்'சைத் தட்டினார்.

ஜானகி நெஞ்சு துடிக்க, தேகம் பதற, கண்கள் மிரண்டு விழிக்க, கட்டிலிலிருந்து அழுது கொண்டிருந்தாள்.

''ஏன் சத்தம் போட்டாய்; ஏதும் கெட்ட கனவு கண்டியா?''

அவரின் உடற் பதட்டம் திரவில்லை.

ஜானகி 'திக்'கிட்டுப்போய், வாய்பேசாமல் விழித்துக் கொண்டிருந்தாள்.

அவருக்கு 'விஷயம்' புரிந்து விட்டது.

'கனவு என்பது நினைவின் பிரதிபலிப்பு' என்று ஜானகி ஒரு தடவை சொன்னது அவருக்கு நினைவு வந்தது. ஆனால், அவர் அதை இன்னும் ஒப்புவதாகவில்லை. தந்தைக்கும் மகளுக்கும் இந்த விவகாரத்தில் பெரிய வாக்குவாதமே மூண்டுவிட்டது. அவள் ஒரு தத்துவ ஆசான்

போல் பொன்னையருக்கு எடுத்துச் சொன்ன அழகையும், நயத்தையும் நினைத்துப் புளகித்து ஒரு கணம் வியக்கலானார்.

'புத்திர பாக்கியங்கள் அறிவின் சிகரத்தை எட்டிப் பிடிக்கும் போது பெற்றவர்களுக்கு அழியாத சித்திரங்களாய்த் தெரிகின்றன. என் ஜானகியும் என் அழியாத ஒவியம். அவள் கண் கலங்குவதென்றால், என் நெஞ்சின் ஊனம் குமுறுவது போலத்தான்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு ஜானகியை வாஞ்சையோடு பார்த்தார்.

''புள்ள ஜானகி, கனவு கண்டு பயந்திட்டியா?''

''ஓம்''

''என்ன கனவு''

அதற்கு அவள் மௌனமாயிருந்தாள். ஒருபெருமூச்சு அவள் நெஞ்சைக் குதறி எழுந்தது.

'திருமணம் புரிந்த காலத்தில் இளங் கன்னிகள், தமது கணவர்களைப் பற்றிய நினைவுகளில்தான் மூழ்கியிருப்பார்கள். அப்படித்தான் அவளும் தனது கணவனைப் பற்றி ஏதோ கனவு கண்டிருப்பாள். கெட்ட கனவுகள் நல்ல சகுனம் தானே?'

பொன்னையர் முகத்தில் புன் சிரிப்பு மலர்ந்தது.

''புள்ள ஜானகி, அவருக்கு இன்று என்ன டியூட்டி?''

''நைட் டியூட்டி''

அவர் உடனே சுவரைப் பார்த்தார். கட்டிலுக்குப் பக்கத்தே புதுமணத் தம்பதிகளாக, சிவலிங்கமும் ஜானகியும் நின்று எடுத்த படம், சுவரிலே கம்பீரித்துக் கொண்டு கிடந்தது.

ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டரின் மனைவியான ஜானகிக்கு, இவ்வளவு பயந்தாங் கொள்ளித்தனம் இன்னும் இருக்கிறதா? வீரம் இருந்தென்ன, நெப்போலியன் கூட பயங்கரக் கனவு கண்டு பதறித்துடித்தவன் தானே?

"ஜானகி, நல்லாப் பயந்திட்டியா?"

அவள் ஒன்றும் பேசாமல் அப்பாவைப் பார்த்தாள். அவளின் கண்கள் அப்பவும் தேம்பிக் கிடந்தன.

அவர் சிரித்துக்கொண்டு, 'பாவாடை சட்டை போட்டுத் திரிந்த நாட்களிலே புலிபோல் துள்ளித் திரிந்த நீ ஊரையே உலுப்பி வைக்கிற ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கு மனைவியான பிறகும் பூனைபோல் பதுங்கி 'நடுநடு'ங்கிறியே. இது உன் கணவருக்கே அவமானமல்லவா?' என்று அவளைக் கிண்டல் பண்ண நினைத்தார். மனசு ஏவவில்லை. கேலிப் பேச்சை அதிகம் ரசிக்கிற பெண்கள், அதைப் புரியாவிட்டால் அதுவே அவர்கள் இதயங்களை ரணகளமாக்கி விடாதா?

ஜானகிக்கு இன்னும் பயம் தெளியவில்லை என்பது அவருக்குப் புலனாயிற்று. அவர் மெதுவாகப் போய் ஜானகியின் முகத்தில் 'துப்-துப்-துப்' என்று மூன்று தடவை துப்பிவிட்டு, "எழுந்து போய், முகத்தை அலம்பிப்போட்டு வந்து தூங்கு" என்று அவள் தோளில் மெல்லத் தட்டினார்.

ஜானகி எழுந்து குசினிப் பக்கம் சென்று முகங் கழுவி வருமட்டும் பொன்னையர் வாசலில் நின்று அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அவர் மனசில் ஒரு சம்பவம் கிளர்ந்தது.

பொன்ராசா தொழிலாளர் விவசாயிகளைத் திரட்டி, நாடு பரவ அடிக்கடி கிளர்ச்சிப் போராட்டங்கள் புரிந்து வருகின்றான். அவை யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் தலை நீட்டிவிட்டன. இதனால் 'பொலிஸ் டிப்பாட்மென்ட்'டுக்கு ஓயாத வேலை. ஊரோ ஒரே கொந்தளிப்பாகவிருக்கின்றது. கிளர்ச்சி செய்கின்ற இந்த இயக்கம் நடை செய்யப் படலாம். அதில் முக்கிய பங்கு வகிக்கின்ற பொன்ராசன் எந்த நேரத்திலும் பொலிஸாரால் கைது செய்யப்பட

லாம். பொலிஸ் வலை போட்டுத் தேடும் படலம் ஆரம்பித்துவிட்டது...

பொன்னையர் மனக்கண்ணில் பூதாகாரமாக விரிந்த இந்தக் கற்பனைகள் இத்துடன் தரித்துக் கொண்டன.

நாட்டில் உண்டான கிளர்ச்சிகளால் தமது ஜானகியின் கணவர்—இன்ஸ்பெக்டர் சிவலிங்கத்துக்கு ஓயாத சோலிகளும் ஆபத்துக்களும் நேர்வது சாதாரண விஷயம் தான்.

'பிரிட்டிஷ்காரன் இலங்கையை ஆண்ட போது இலங்கை எவ்வளவு 'அமைதி'யாயிருந்தது. அவன் என்று சுதந்திரம் கொடுத்துப்போனனே, அன்றே அமைதியும் குலைந்து விட்டது' என்று மனஞ் சலித்தவர், "வெள்ளைக் காரனுக்குத்தான் 'டிஸிபிளின்' தெரியும்" என்று வாய் விட்டே முணுமுணுத்தார்.

பொன்னையர் சிங்கப்பூரில் உத்தியோகம் புரிந்த காலத்தில் அவர் வெள்ளைக்காரன் கீழ் 'டிஸிபிளின்'க வாழ்ந்தவர். ஜானகி அங்கேதான் பிறந்தாள். அவள் பிறந்து ஐந்து வருஷத்துக்குள்ளே உள்ளூர் விடுதலைப் போராட்டவாதிகளின் 'தொல்லை'கள் தாங்காமல் 'பென்சன்' எழுதிக் கொடுத்துவிட்டு ஊரோடு—யாழ்ப்பாணம் வந்துவிட்டார். அந்தத் 'தொல்லைக்காரர்' இங்கேயும் விட்டபாடாயில்லை.

சிங்கப்பூர் மலேசியாவில் பிரிட்டிஷ் அதிகாரத்தை எதிர்த்து ஜனங்கள் போராட்டம் நடத்தினர்கள். அந்தப் போராட்ட அணிகளுக்குத் தலைமை தாங்கிய கம்யூனிஸ்டுகளை வெள்ளைக்காரன் நாய்களைச் சுடுவதுபோல் சுட்டுத் தள்ளிய காட்சிகள்—அந்த நிகழ்ச்சிகள் பொன்னையரின் மனசில் நிழலாடின. அவற்றையெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்த பொன்னையருக்கு இந்த இலங்கை அரசாங்கத்தின் 'கையாலாகாத்தனம்', 'சட்'டென்று பளிச்சிட்டது.

'இந்த நேரம் அந்த வெள்ளைக்காரன் ஆட்சி நிலைத்திருக்குமானால், பொன்ராசனையும் அவன் கட்சிக்காரன்களையும் ஒழித்துக்கட்டி அமைதியை நிலைநாட்டியிருக்கும். இந்த அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதால் பொலிஸ் டிப்பாட்மெண்டுக்குத்தான் தொல்லையாய்விட்டது'

பொன்னையர் ஜானகியைப் பார்த்தார்.

'நாட்டிலே அமைதி குலைந்தால் சனங்கள் தூங்க மாட்டார்கள். இதனால்தான் ஜானகியும் பயத்தில் விழித்துக் கொண்டே கூச்சல் போட்டிருப்பாள்'

பொன்னையரின் இந்தக் கற்பனைகள் பின்பு அவருக்கே நகைப்பிற்கிடமாயின.

''கெட்ட கனவு என்று சொன்னியே, அது என்ன?'' என்று மகளைக் கேட்டார்.

''நாட்டில் இப்போ நடந்து கொண்டிருக்குதே, அது'' என்றாள் அவள்.

பொன்னையா வீட்டுக்குள் அடைந்து கிடக்கின்ற கிணற்றுத் தவளையல்லர். புதினத்தாள்களும் அரசியல் செய்திகளுமே அவரின் ஆத்ம சாதனங்கள். காலை எழுந்தவுடன் பத்திரிகை விரிப்பது நித்திய கடன். அப்பேர்ப்பட்டவருக்கு ஊரின் சமாச்சாரங்களை வீட்டுக்குள் அடைந்து கிடக்கும் ஜானகியா விஸ்தரிக்க வேண்டும்? இப்போது கிராமங்கள் தோறும் நகரங்கள் ஈறாக இலங்கையடங்கலும் என்ன போராட்டம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்று அவருக்குத் தெரியும்.

அந்நிய வங்கிகள், கம்பனிகள், தோட்டங்களைத் தேச உடைமையாக்கு, இலங்கையைக் குடியரசாக்கிச் சுயராஜ்யம் நடத்து என்று பொதுவுடைமை வாதிகள் கிளர்ச்சி பண்ணுகிறார்கள் என்பதை அவர் சிங்கப்பூரில் வாழ்ந்த காலத்திலேயே அறிந்தவர். இதனால் எழுந்த போராட்டம் உச்சக்கட்டத்தையடைந்து, நாடு பூராவும் பரவிச்

கொண்டது. புரட்சிப் போராட்டம் எந்த வேளையிலும் வெடிக்கலாம்.

பொன்னையருக்கு இதுகூடக் கவலையில்லை. யாழ்ப்பாணம், மலைநாடு, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய தமிழ்ப் பிரதேசங்களில் பொதுவுடமை இயக்கத்தினரின் அரசியற் போராட்டம் புதுக்கோஷங்களை உள்ளடக்கியிருப்பதுதான் அவருக்குப் பிடிக்காத சங்கதி.

நிலமற்றோர்க்கு நிலங்களைப் பகிர்தல், தோட்டங்களைத் தேச உடமையாக்கி அவற்றைத் தொழிலாளர்களுக்குக் கொடுத்தல், தீண்டாமை ஒழிப்பு, தேசிய மொழிகளுக்குச் சமத்துவம்—இவைபோன்ற கோரிக்கைகளை வைத்தே பொன்ராசா போராட்டத்தில் குதித்திருக்கிறான். இது பொலிஸ் டிப்பாட்மெண்டுக்கு மட்டுமல்ல, அரசாங்கத்துக்கே 'பெருந்தலையிடி'யைக் கொடுத்து வருகிறது.

'பழைய அமைப்புகள், ஜாதிமுறைகள் ஒழிந்தால், அனுபவித்த சம்பிரதாய மரபுகள் என்னவது? வேணுமானால் 'சீர்திருத்தம்' செய்யட்டுமே. அதைவிட்டு ஏதோ 'புதிய மாற்று அமைப்பு' வேண்டும் என்று கத்துகிறானே. இதெல்லாம் வெறும் கண்டங்காய்ப் போராட்டம். வெள்ளைக்காரனைப் போல் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டினால் எல்லாம் தானாக அடங்கிவிடும்'

பொன்னையர் மனசு உண்மையில் கொதித்தது. இருந்தும் அவர் சிரித்துக் கொண்டே, "நாட்டிலே நடக்கிற கிளர்ச்சிகளைப் பற்றித்தானே சொன்னாய்?" என்று ஜானகியிடம் அமைதியாகக் கேட்டார்.

'அது வெறுங் கிளர்ச்சியல்ல; பெரும் போர்க்களம்' என்று சொல்ல வாயெடுத்த ஜானகி, அதே கருத்தைவேறு ஒரு தினுசாக ஒப்புவித்தாள்:

"கிளர்ச்சி என்பது மணப்பந்தலில் வாசிக்கும் மேளமல்ல; கத்தி விளிம்பில் நடக்கும் பந்தய வேள்வி"

ஜானகியின் அரசியல் ஞான வியூகங் கண்டு அவர் நெஞ்சு பெருமையில் பூரித்தது. ஆனால், அவளின் அழுத்தமான வார்த்தைகள் அவள் கிளர்ச்சிகளை வரவேற்பதாகப்பட்டதைக் கண்டபோது அவருக்கு வியப்பு மேலிட்டது. கோபம் கூட எழுந்தது.

அதை அவர் அவளுக்குக் காண்பியாமல், "அது உண்மைதான். இதைத் தெரியாதவர்களே முட்டாள்தனமாகக் கிளர்ச்சிகளில் இறங்கிவிடுகின்றார்கள். பொன்ராசன் நடத்துகின்ற கிளர்ச்சியால் நமது இன்ஸ்பெக்டருக்கே ஓய்வற்ற வேலைப் பளுவாய்விட்டது. அவருக்கு மட்டுமா? உனக்குக் கூட உன் பஞ்சுமெத்தை நெருப்புக் கோளமாகிவிட்டது பார்த்தாயா?" என்றார்.

அவள் முகம் அதைத்து விம்மிற்று. அதை அவர் கவனிக்கவேயில்லை.

'பயங்கரக் கனவு கண்டு ஜானகி தியங்கியிருக்கிற போது, போராட்டம்—கிளர்ச்சி பற்றி அவளுக்கு நினைவூட்டியிருக்கக்கூடாது' என்பதை அவர் பின் சிந்திக்கலானார்.

புரியாத விஷயங்களில் மனிதனுக்கு அடிமைத்தனம் உண்டாகி அவன் பலவீனப்படுவதால் அவன் கற்பனைகள் அதீதமாகி அர்த்தமற்று விடுகின்றனவா?

பொன்னையர் தனக்குள் குமுறிக் கொண்டே சுவர் மணிக் கூண்டைப் பார்த்தார்.

மணி ஐந்தே முக்கால்.

மெல்ல வெளியே நகர்ந்தார்.

காகங்கள் கோலாகலித்துஇரைந்து வானத்தில் பறந்து கொண்டிருந்தன.

'பறவைகள் எவ்வளவு சுதந்திரமாக வாழ்கின்றன. 'புத்தி' படைத்த மனிதனால் முடியவில்லையே? விபர புத்தி சர்வ நாசம்'—

மனசுள் சலித்தவாறு அடுத்த அறைக்குள் பிரவேசித் தார்.

'சடா'ரென்று பல்லி ஒன்று எச்சமிட்டது.

'திடுக்'கிட்டு நின்று அண்ணாந்து பார்த்தார்.

'சிறு பூச்சியின் சத்தத்திற்கே காரணம் புரியாமல் வாகடம் பார்க்கின்ற 'மேதை'கள், சுதந்திரப் பறவைகளை பார்த்துப் பெருமூச்சு விடுவதில் அர்த்தமுண்டா?' என்று அவரிடம் அது கேட்பது போலிருந்தது.

அப்போது தெருவிலே ஒரு கூச்சல் கேட்டது:

''பொன்ராசாவைப் பொலிஸார் கைது செய்து விட்டார்கள்!''

பொன்னையரின் நெஞ்சு ஒரு கணம் அதிருண்டது.

அவர் தரிக்கவில்லை. சால்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டு, ஜானகியின் அறையை மெதுவாக எட்டிப் பார்த்தார்.

அவள் கோழி உறக்கத்தில் கண்ணயர்ந்து கிடந்தாள். அவர் உடனே வெளியேறி, வீதியினூடாக 'விறு விறு' வென்று நடக்கலானார்.

'இனி ஏதோ பிரளயம்தான் நடக்கப்போகிறது. நல்லவனாயிருந்தவன் வேண்டாத கிளர்ச்சிகளில் இறங்கி வீணாக மாட்டிக் கொண்டானே. இந்தப் போக்கு இவனுக்கு ஏன் வந்தது?'

மனந்தாளாமல் நொந்து தனக்குள் குமைந்துகொண்டார் பொன்னையர்.

## 2.

பொன்னையர் திரும்பி வரும் போது ஜானகியின் அறைக் கதவுகள் திறந்து கிடந்தன.

'டியூட்டி முடிந்து அவர் வந்திருப்பார்' என்ற நினைப்பில் விறுந்தையில் நின்று யன்னலுக்கூடாக மெல்ல எட்டிப் பார்த்தார். அசுமாற்றத்தைக் காணவில்லை. வெளியே வந்து கதவோரமாக நிலை குத்தி நின்று தலையை உள்ளே நீட்டிக் கண்களை அகலத் திறந்து துளாவினார்.

ஜானகியைக் காணவில்லை.

அவர் நெஞ்சு துருத்திற்று. படுக்கையில் துணிமணிகள் அலங்கோலமாகக் கிடந்தன. அவருக்கு ஒன்றுமாகப் பிடிபடவில்லை.

'கிணற்றடிப் பக்கம் போயிருப்பாளோ?'

சற்றுச் சினந்து கொண்டார்.

'குளிக்க வென்று கிளம்பியவள் கதவுகளை'ஓ'வென்று திறந்து விட்டா போக வேண்டும்? இளம் பெண்கள் வாழ்க்கை நடைமுறைகளைத் தெரியாமலே புதுமை நாகரிகம் பற்றி மணிக்கணக்காக வெளுத்து வாங்குவார்கள். அதனால் அவர்கள் புரிகின்ற புது நாகரிகங்கூட ஆபாசமாகி விடுகின்றது. இல்லாவிட்டால் வெளியே சென்ற ஜானகி கதவுகளைத் திறந்து விட்டு அசட்டுத்தனமாகக் கிளம்பியிருப்பாளா?'

தடுமாற்றத்தின் போதும் அவளை நினைக்க அவருக்குச் சிரிப்பே வந்தது. சிறு பெண்ணுயிருக்கும் போது ஒரு தடவை அவர் ஜானகிமேல் இப்படித்தான் குற்றம் சுமத்தியிருந்தார்.

குசினிக்குள் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஜானகி உணவு ஆனதும் கதவைச் சாத்தாமலே போய் விட்

டாள். அன்று நாயும் பூனையும் தோழமைபூண்டு ஒன்றை யும் விட்டு வைக்காமல் தீர்த்துவிட்டன.

தாய் சின்னம்மாவுக்குத் தலைகால் தெரியாமல் கோபம் பொங்கிவிட்டது. அகப்பைக் காம்பை நெரிடிப் பிடித்து, உதடுகளைக் கடித்துக் கொண்டு, ''புத்தியறிகிற வயசாகப் போகுது. இன்னும் குழந்தை யாட்டம் பொருள் பண்டத்தில கவனமில்லாமலிருக்கே. கழுதைக்கு ரண்டு குடுத்தால்தான் அறிவு வரும்'' என்று கூறி விளாச ஓடினுள்.

ஜானகியிடம் தாயின் வாலாட்டம் கொஞ்சமும் பலிக்கவில்லை. அவள் 'குடுகுடு'த் தோடிப்போய் அப்பா வின் நெஞ்சோடு அணைந்து அவரைக் கட்டிப்பிடித்துக் கொண்டு, 'அப்பா, அம்மா அடிக்க வாறு' என்று கூவி அடைக்கலம் தேடிக் கொண்டாள்.

பொன்னையர் சிரித்துக் கொண்டு, ''நீ என்ன குழப் படி செய்தாய்?'' என்று செல்லமாகக் கேட்டார்.

ஜானகி நிகழ்ந்ததைச் சொன்னுள்.

''குசினிக் கதவைத் திறந்து விட்டது உனது குற்றம் தானே?''

''அது சரிதானப்பா. அப்படித்திறந்திருக்காவிட்டால் நாய்க்கும் பூனைக்கும் எங்கிருந்து வயிறு நிறையச் சாப் பாடு கிடைக்கும்?''

தான் செய்த தவறை மழுப்பி, சுட்டித்தனமாகச் சாட்டுச் சொன்ன புத்திரியை அவர் வாஞ்சையுடன் தூக்கி அணைத்துக் கொண்டு, ''சரியான கள்ளக் குஞ்சு. அம்மா வையும் என்னையும் சேர்த்து நன்ருக வெருட்டுறியே?'' என்ருர் கொஞ்சலாக.

அந்தக் காட்சியைக் கண்ட தாயின் இதயம் ஒரு தடவை ஆனந்த பரவசத்தில் திணறியது. அதை வெளிக் குக் காண்பியாமல் பொன்னையரைப் பார்த்துச் செல்ல மாகக் கண்டித்தாள்.

"அவ இன்னும் சின்னக் கிளிக்குஞ்சு. இப்பவும் மடிக்கை தூக்கி வைச்சுச் செல்லங் குடுங்கோ"

"ஓ, ஜானகி எந்தக் காலமும் என் செல்லக் கிளி தான்."

அவர் தன்னை மறந்த லாகிரியில் அப்படிச் சொல்லிக் கொண்டே ஜானகியைத் தூக்கி அரவணைத்துக் கொஞ்சினார்.

அதைப் பார்த்த சின்னம்மா ஆவேசமாக எடுத்துக் கொண்டுவந்த அகப்பை, அவளை அறியாமலே அவளின் கையைவிட்டு நழுவிக் கீழே விழுந்தது.

'தாயின் பாசம் சகல குற்றத்தையும் மன்னிக்கும் ஊற்றுக்கண்; அவளின் அன்புச் சுரங்கம் என்றுமே வற்ருத ஜீவ நதி'

பொன்னையரின் நினைவலைகள் நூல் அறுந்தமாதிரி 'டக்' கென்று விடுபட்டன. கண்கள் கலங்கின. சின்னம்மாவின் நினைவில் மனசு குலுங்குண்டுவிட்டது. சற்று வேளையால் சுய நினைவிற்கு வந்தார்.

அலங்கோலமாகக் கிடந்த ஜானகியின் புடவைகளை எடுத்து ஒரு பக்கத்தே வைத்துவிட்டு வெளியே வந்தார்.

'கிணற்றடிக்குப் போன உனக்கு கதவைத் தாழிடாமல்விட, அப்படி என்ன கெடுபிடி வந்தது? என்று கேட்டால், அவள், அன்று நிகழ்ந்த அந்த நாய் பூனைக் கதை போலவே அளந்து கொட்டுவாள்...'

கிணற்றடிப் பக்கம் எட்டிப் பார்த்தார். அங்கேயும் ஜானகியின் தலைக்கறுப்புத் தெரியவில்லை.

'இரவு ஜானகியின் கண்கள் ஏன் அப்படிக் கலங்கி இருந்தன?' என்ற ஓர் விசித்திரமான கேள்வி அப்போது அவர் மனசைக் குடைந்தது. அதற்கு விடைகாண முடியாமல் சற்று வேளை தவித்துக் கொண்டிருந்த பொன்னையரின் மனசில் 'தற்கொலை' நிகழ்ச்சிகள் பாம்புபோல் தலைவிரித் தாடின.

'ஜானகி தற்கொலை செய்து கொள்ள, அவளுக்கு வாழ்க்கையில் அப்படி என்ன குறை நேர்ந்தது?'

அவர் மனதைச் சமாளித்துக் கொண்டபோதும், இதயம் அந்த நெகிழ்விலிருந்து மீளாமல் அடித்துக் கொண்டது.

எத்தனையோ இளங் கன்னிகள் தாயின் சிறு கண்டிப்புகளைக் கூடத் தாங்காமல் ரகளைப்பட்டுக் கொண்டு, தற்கொலை புரிந்து வாழ்வை அநியாயமாக நாசப்படுத்துகின்ற பரிதாப நிகழ்ச்சிகளை அன்றாடம் பத்திரிகைகளில் வாசித்திருக்கிறார். 'அப்படி ஏதாவது மன விரக்தி—பலவீனம் ஜானகியைப் பீடித்திருக்குமோ?' என்று யோசித்த போது, அந்த அதிகாலையிலே கூட அவர் உடல்வியர்த்துக் கொண்டு வந்தது.

அவரின் தொண்டை கரகரத்தது. அவரால் அமைதியாக நிற்க முடியவில்லை. ஆயிரம் யோசனைகள் சிரசு முட்ட வந்து போயின. கிணற்றுப்பக்கம் கற்பனை தாவிற்று. அந்தகாரித்த மனதை அடக்கி, நடுங்கும் தேகத்தில் வலுவையூட்டி, இதயத்துள் அழுது கொண்டு கிணற்றை மெதுவாக எட்டிப் பார்த்தார்.

கிணற்று நீர் தளம்பாமல் அமைதியாகவே கிடந்தது.

நெஞ்சு குல்லிட ஒரு பெரு மூச்சு விட்டார். அவர் மனசு தளம்பி ஆட்டங்கண்டது.

'ஐயோ, நான் இனி என்ன செய்ய. அவர் டியூட்டியால் வந்து, 'ஜானகி எங்கே?' என்று கேட்டால் என்ன பதில் சொல்வது?'

இவற்றையெல்லாம் நினைக்க அவருக்கு குளறி அழ வேண்டும் போல் தோன்றியது.

'ஒருவேளை இவளே அவரைத் தேடி பொலிஸ் ஸ்டேஷனுக்குப் போயிருப்பாளோ?'

சந்தேகம் புதுசாக தலையெடுக்க, விறாந்தையில் ஏறி நின்று கதவுகளை இழுத்துச் சாத்தினார்.

அறைக்குள்ளே அகஸ்மாத்தாகச் சிணுங்கல் ஒலி கேட்டது.

மலாரடித்து, நின்று, தாழிட்ட கதவுகளை மெல்ல நீக்கிப் பார்த்தார்.

அறையின் மூலைப்பாடாக, அலுமாரி மறைவிலே குந்தியிருந்து, ஜானகி முனகி அழுது கொண்டிருந்தாள்.

ஒரு கணம் பொன்னையர் சிலையாக நின்ருர்.

''புள்ள ஜானகி, ஏன் ராசாத்தி அழுகிருய்?''

தொண்டை கரகரக்க, கேருந் தொனியில், அன்பு ததும்பக் கேட்டார் பொன்னையர். கேட்கும்போதே மகளின் கோலங்கண்டு அவரின் இதயம்சிறுகுழந்தைபோல் தேம்பியது. ஜானகி இப்படி அழுததை அவர் ஒரு போதும் பார்த்ததில்லை. அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. குடும்பத்தில் ஏதோ பூகம்பம் அடித்திருக்க வேண்டும்?

''ஜானகி, உனக்கு இப்போ என்ன குறை வந்து விட்டது? ஏன் இப்படி அர்த்தமில்லாமல் அழுகிருய்? உனக்கும் அவருக்கும் ஏதும் தகராறு உண்டா?''

கேள்விமேல் கேள்வி கேட்டுத் தன்னுள் திணறி அவளைப் பார்த்தார்.

ஜானகியிடமிருந்து பதில் வரவில்லை.

''சரி இப்படி எழுந்து வா''

கைத்தாவாகத் தூக்கிவிட்டு ஜானகியை ஏற இறங்கப் பார்த்தார். அவள் துவண்டு போயிருந்தாள்.

''ஏதோ உன் மனசுக்குள் இருக்கு. என்ன வந்தாலும் பாதகமில்லை. துணிந்து உள்ளதைச் சொல்லு''

அப்பவும் ஜானகி வாய் திறக்கவில்லை.

'குடும்பத்துக்குள்தான் ஏதோ பிணக்கு முளைத்திருக்கிறது. தந்தையென்ருலும் தன் புருஷனைப்பற்றி எந்தப் பெண் முறையிடுவாள்?'

''யோசியாமல் உள்ளதைச் சொல்லு; அவர் ஏதும் 'முரண்டு'த்தனமாக நடந்தாரா?''

'இல்லை' என்று தலையசைத்தாள் ஜானகி.

"அவருக்கு ஏதும் தகராறு உண்டா?"

"இல்லை"

ஜானகி இப்போதுதான் வாய் திறந்தாள்.

"அப்ப, ஏன் அழுதனி?"

"காலைப் பத்திரிகையில் வந்ததே செய்தி, அது தான்"

"ஓ, அதுவா?"

பொன்னையர் அவளின் பேதமையை நினைத்துக் 'கல கல'த்துச் சிரித்தார்.

'பொன்ராசன் பொலிஸாரால் கைது செய்யப்பட் டால் சிவலிங்கத்துக்கு என்ன பங்கம்? அவர் அரசாங்கத் தின் சட்டத்துக்குள்ளே பாதுகாப்பாக இருந்து கொண்டு நச்சுப் பாம்புகளைக் கொல்லும் ஓர் அதிகாரி. அவருக்கு ஆபத்து விளையுமென்று இந்தப் பேதைப் பெண் நினைத்துப் புலம்புகிறாளே'

இப்போது ஜானகியின் 'சுட்டித்தனத்'திலும் பொன் னையருக்கு சந்தேகம் கிளம்பியது. இருந்தும் தனதுபுதல்வி தன் கணவரில் கொண்ட பாசத்தையும்,பண்பையும்கண்ட போது, அவர் தனக்குள்ளே இனங்காணாத பெருமிதத்தில் திளைத்தார்.

"அது பொன்ராசனைப் பற்றி வந்த செய்தி; உன் கணவரைப் பற்றியல்ல"

"அதுதான் எனக்கும்..."

"அடி பயித்தியக்காரப் பிள்ளை. சட்டமும் அதிகார மும் அவர் கையிலிருக்கும் போது நீ ஏன் அவரை நினைத்து மனசை அலட்டிக் கொள்கிறாய்? வேண்டுமானால் சொல்லு, 'போன்' பண்ணி அடுத்த நிமிஷமே அவரை வீட்டுக்கு வரச் சொல்கிறேன். என்ன, 'வரவழைப்பதா?"

"அதெல்லாம் வேண்டாம். நான் சொல்வது இவ ரைப் பற்றியல்ல"

"அப்போ, யாரைப்பற்றி?"

"பாவம், அந்தப் பொன்ராசனைப் பற்றித்தான்!"

மின்சாரம் அடித்த நிலை. பொன்னையரின் தலை 'கிறு கிறு'த்தது.

பெண்கள் எப்போதும் இளகிய மனமுள்ளவர்கள் என்று பொன்னையர் கேள்விப்பட்டிருக்கிறார். அவர்கள் இதயம் சிலவேளை இரும்புத் துண்டு என்பதை இப்போது தான் நேரில் கண்டார். சற்று வேளைக்குமுன் ஞானகியை நினைத்துப் பெருமைப் பட்டுக் கொண்டிருந்த அவரின் நெஞ்சு அவள் கூறிய வார்த்தைகளால் நொடிக்குள் சுக்கு நூறாக வெடித்தது. அவள் வாயில் துணிவாக வந்த 'அசிங்க'மான வார்த்தைகள்...?

'பாவம், அந்தப் பொன்ராசா...'

'ஊருக்குள்ளே பிரளயம் நடக்கப்போகிறது' என்று காலையில் தான் வாய்விட்டுக் கூறியிருந்தார். அதுஇப்போ அவர் வீட்டுக்குள்ளேயே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இவளுக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா?

ஒரு பாட்டம் தன்னுள் திட்டிக் கொண்டு அவளைத் தின்று கக்குவதுபோல் கோபாவேசமாக பார்வையை வீசினார்.

''நீ ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டரின் மனைவி. அப்படி இருக்க, கேவலம் ஒரு பஞ்சத்தாண்டிப் பரதேசியின் பெயர் சொல்ல உனக்கு வெட்கமில்லையா?''

அவர் உரத்துக் கேட்ட தொனி அவளுக்குக் கடுகடுப்பாக உறைத்தது. ஆனல், தாய்க்குத் தாயாக தன்னைக் கண்மணிபோல் பேணி வளர்த்த அப்பாவின் மனம்நோகப் பேச அவள் விரும்பவில்லை. மௌனமாயிருந்தாள். தனது மனச் சுமை இங்கே இறக்கப்பட்டால் வீடே போர்க்களமாகிவிடும் என்று அவள் உணர்ந்தபோதும், மனசில் தோன்றியதை அவள் அழுத்திச் சொன்னள்.

''வெட்கம் என்பது மனசுகற்பிக்கிற மாயவார்த்தை. இதை வைத்துக் கொண்டு அப்பாவிகள் மீது அதிகார ஆணவம் புரிகின்ற கொடுமை இருக்கிறதே, அதுதான் வெட்கம்; அதுதான் மானக்கேடு''

உடைப் பெடுத்த வெள்ளம் போல் எதிர்பாராமல் அவள் வாயில் வெடித்த இந்த வார்த்தைகளைக் கேட்ட பொன்னையர் அப்படியே சமைந்து போய் நின்றார். அவ ரின் சிந்தனை அடம்பன் கொடிபோல் சிக்கிவிட்டது.

வெறித்த கண்களை அவர் எடுக்கவில்லை.

அப்போது இன்ஸ்பெக்டர் சிவலிங்கம் அவசரமாக வீட்டுக்கு வந்து கொண்டிருப்பதை அவளும் தந்தையும் அந்தகார மௌனத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார் கள்.

பொன்னையரின் தேகம் பதறத் தொடங்கியது.

## 3

ஜானகி உணவு பரிமாறிக்கொண்டிருந்தாள். இன்று அவள் போக்கும் கோலமும் சிவலிங்கத்துக்குப் புதிராகவிருந்தன. அவளின் முகம் அதைத்து தேகம் இளைத்துப்போயிருந்ததை அவர் கவனித்துக்கொண்டார். பொலிஸ் நிலையத்தில் புலனாகாத வழக்குகளைத் துருவி ஆராய்ந்து கண்டுபிடிக்கும் சிவலிங்கம், தமது வீட்டுக் குள்ளே கிடக்கின்ற, புரியாதசிக்கலைச் சும்மாவிட்டு வைப் பாரா?

''என்ன சமாச்சாரம், முகம் 'ஒரு மாதிரி' இருக்கே?''

''ராத்திரி உடல் அசதி; நித்திரையே வரவில்லை.''

''உண்மையாகவா.'' ஓ!

சிவலிங்கத்தின் மனசு 'கிளுகிளு'த்தது.

திருமணம் புரிந்து இரண்டு வருஷங்கள். இத்தனை காலமாக ஒரு குழந்தைச் செல்வத்துக்காக அவர் தவிப் பது உண்மையில் ஜானகிக்கே தெரியாது.

'இப்போ 'ஏதாவது' ஆகியிருக்கும். அதுதான் ஜானகிக்கு உடம்பில் சோர்வு தட்டுகிறது......'

கண்கள் வெறி துவள சுழற்றிப் பார்த்த அவர் ஜானகியின் கரத்தை அப்பிப் பிடித்து இன்பம் ததும்பச் சிரித்துக்கொண்டு கொஞ்சலாகக் கேட்டார்:

"ஏன், இந்தத் தடவை குளிக்கவில்லையா?"

ஜானகி நாணிக்கொண்டு பொய்ச் சினப்புடன் சரஸங் காட்டிச் சிரித்துவிட்டுச் சொன்னாள்:

"சாப்பிடுகிறபோதும் இந்தக் கதையா? அப்படியெல்லாம் ஒன்றுமில்லே."

சாப்பாட்டு அறை 'கலகல'த்துக்கொண்டே இருந்தது.

அதைக் கவனித்த பொன்னேயர் புளகித்தவண்ணம் விருந்தையில் கிடந்த சார்மனையில் உட்கார்ந்து புதினப் பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார்.

'குழந்தைச் செல்வம் இல்லாத வீடு, புஷ்பங்களில்லாத வனந்திரக் காடு' என்ற அவரின் தவிப்பு ஒரு கவிதையாக எழுந்தது.

பென்சன் காலத்தின்போது பேரக் குழந்தைக்காகத் தாவிய அவா அவர் முகத்தில் புரைவிட்டது.

'கொஞ்ச நேரத்துக்குமுன் வீடே நெருப்புப்பற்றி எரிவதுபோல் ரகளைப்பட்டுக்கொண்டிருந்தது. அவர் வந்ததும் அது அணைந்துபோய்விட்டதே! அவரிடம் ஏதோ மந்திரசக்தி இருக்கவேண்டும். அதிலே ஜானகி கட்டுண்டுவிட்டாள்.'

பொன்னையர் இவ்வாறு தனக்குள் வியந்து மகிழ்ந்தார்.

ஜானகிக்கு 'அப்படி ஒன்றுமில்லே' என்றதும் சிவலிங்கத்தின் உற்சாகம் குன்றியது என்னவோ உண்மைதான். ஆயினும், அவர் சிரித்துக்கொண்டே மனைவியைப் பார்த்து

"நீ எனக்கு மகிழ்ச்சியான செய்தி சொல்வாயென்று எதிர்பார்த்தேன். அது இன்னும் ஆகவில்லை. சரி, இப்பொழுது நானே உனக்கு ஒரு நல்ல செய்தி சொல்லப் போகிறேன்" என்றார்.

ஜானகி ஆவலுடன் முறுவலித்துக்கொண்டே கேட்டாள்:

"அப்படியா, என்னது?"

"முதலாளித்துவ ஆட்சியிலே பொலிஸார் 'வெறும் அடிமைப் பொம்மைகள்' என்று நாடு முழுக்க வேகமாகப் பிரசாரம் செய்துவரும் கோஷ்டியை உனக்குத் தெரியுமா?"

'முற்றும் உண்மை. பொலிஸார் சட்டத்துக்கு விஸ்வாசிகளல்ல; அடிமையானவர்கள். அவர்கள் சுதந்திர வீரர்களல்ல; கூலிப் பட்டாளங்கள்' என்று கூற வாய் உன்னினாள் ஜானகி. ஆனால், அவரின் உற்சாகத்தைக் குழப்பாமல் விஷயத்தைப் பூராவும் தெரிந்துகொள்ளவென்று, "நாள் முழுதும் வீட்டுக்குள் அடைந்துகிடக்கின்ற பெண் ஜென்மங்களுக்கு ஊர் விவகாரம் எப்படித் தெரியும்?" என்று ஒன்றும் தெரியாதவள் போல் நகைத்துக்கொண்டே கேட்டாள்.

ஜானகி கூற்றில் அவருக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. அவருக்கு அந்தச் சம்பவம் நினைவுக்கு வந்தது.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் தரிசனத்திற்காகச் சென்ற 'தாழ்த்தப்பட்டவர்கள்' என்ற பிரிவுத் தமிழர் அங்கே தடுக்கப்பட்டார்கள். அதனால் யாழ்ப்பாணமே போர்க்களமாகிவிட்டது.

பொன்ராசா ஸ்தாபன ரீதியாகத் திரண்டு அவர்களுக்காகக் குரல் வைத்து, அவர்களின் உரிமைப் போராட்டத்தில் இறங்கித் தீவிரமாக இயங்கினான்.

அவனின் போராட்டத்துக்குச் 'சாதிமான்கள்' எனப்பட்ட யாழ்ப்பாணப் பொதுமக்கள் மத்தியிலிருந்தும் பேராதரவு கிடைத்தது.

மலைநாடு, மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய பகுதிகளில் வாழும் சகல மக்களும் ஆதரவு கொடுத்தார்கள். முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும், பௌத்தர்களும் கொடுத்த ஆதரவு பத்திரிகைச் செய்தியாகவும் பரவியது.

மேகம் பிளந்து பூலோகத்தில் இறங்கிய தூதர்களாக நின்ற சிலர் 'தீண்டாமை' என்னும் 'புனித' கைங்கரியத்தில் இறங்கித் தமக்கு மவுசு தேடிய விந்தைதான் பொன்ராசாவுக்குச் சிரிப்பாகவிருந்தது.

தேநீர்க் கடைப் பிரவேசம், கோயில் பிரவேசம்— இந்த உரிமைப் போராட்டங்களுக்கு நாள் குறித்தாயிற்று.

அதற்கான பொதுக்கூட்டம் மைதானத்தில் நடந்துகொண்டிருக்கவே, 'திடீ'ரென்று பிரவேசித்த பொலிஸ் கோஷ்டி ஒன்று இன்ஸ்பெக்டர் சிவலிங்கம் தலைமையில் வந்து கூட்டத்தை முற்றுகையிட்டது.

இந்தப் பொலிஸ் கோஷ்டி பாதுகாப்பளித்துக் கண்காணிக்க வரவில்லை; 'அடக்குமுறை'க்காகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட படை என்பதைப் பொன்ராசா தெரிந்துகொண்டான்.

அவன் தன் மேடைப் பேச்சில், "சமாதானத்தைப் பாதுகாக்கின்றோம் என்ற போர்வையில், மனிதாபிமானம் இன்றித் திமிர்கொண்டு மனிதர்களைக் கொடுமைப்படுத்துகின்றவர்கள் பாதுகாப்பாளர்களாகப் பொலிஸார் நடந்துகொள்வதைக் காண வேடிக்கையாக இருக்கிறது. இதுதான் சட்டமும் ஒழுங்குமென்றால், இந்தச் சட்டத்தையும் ஒழுங்கையும் தொழிலாளவர்க்கமும், அடக்கப்பட்ட—ஒடுக்கப்பட்ட ஏழைப் பொதுமக்களும் நொறுக்கித் தவிடுபொடியாக்குவார்கள்......" என்று வீராவேசமாகக் கர்ஜித்தான்.

அடுத்த கணமே இன்ஸ்பெக்டர் சிவலிங்கம், சட்டத்தையும் ஒழுங்கையும் பொலிஸையும் 'அவமதித்த' தற்காக, பொன்ராசனைக் கைதுசெய்ய அவன்மீது புலிபோல் பாய்ந்தார். எங்கிருந்தோ 'தடா'ரென அவர் தலையில் கல் ஒன்று சுவீரமாகி வந்து விழுந்தது.

இன்ஸ்பெக்டர் சிவலிங்கம் அந்தக் கல்வீச்சோடு தலை சுற்றி, அறிவு மயங்கி, கீழே விழுந்தார்.

விழுந்த இன்ஸ்பெக்டரை பொன்ராசா அலாக்காகத் தூக்கி வைத்துக்கொண்டே பலமாகக் கத்தினன்:

"தோழர்களே! நாங்கள் பலாத்கார வாதிகளல்ல; பலாத்காரம் பாவித்தால் மட்டுமே பலாத்காரர்களாக மாறுவோம். கைது செய்வது வெறும் மிரட்டல். இதனுல் போராட்டத்தை அடக்கவும் முடியாது. இதற்கெல்லாம் அஞ்சவேண்டாம்."

கூட்டம் அல்லோலகல்லோலப்பட்டது.

மயக்கம் தெளிந்த இன்ஸ்பெக்டர் உடனே பிரதியுபகாரமாகப் பொன்ராசாவைக் கைதுசெய்தார்.

ஊருக்குத் தெரியாத இந்தச் செய்தி, சிவலிங்கம் வீட்டுக்குத் திரும்பமுன்னமே வீட்டில் அடைந்து கிடந்த ஜானகிக்கு எட்டிவிட்டது. அவருக்கு அதிர்ச்சி. அதைவிட, ஜானகி அவர் மீது பெரிய குற்றமொன்றைச் சுமத்தினுள். அதுவே அவருக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது.

"கொடுமைக்குள்ளானவர்களுக்காகப் போராடிய ஒரு வீரனை, வெறும் சட்டத்துணுக்கைக் கவசமாக்கிக் கொண்டு, அநியாயம் செய்வோர்க்குத் துணை நின்று பொலிஸ் கோழைத்தனமாக நடந்துவிட்டது."

ஜானகி ஆவேசமாகத்தான் பேசினுள். அந்த வார்த்தைகள் அவர் நெஞ்சை மனசாரக் குத்திக் கிழித்துக் கொண்டிருந்தன. தாக்கல் செய்த அந்த வழக்கை முன்

னெடுத்துச் செல்ல, அவளின் பேச்சு அவருக்கு எச்சரிக்கை செய்வதுபோல் தெரிந்தது. எனவே, அந்தக் கேஸை அவர் மெல்ல 'அமத்தி'விட்டார்.

''போராட்ட வீரர்களைப் பெண்கள் வாழ்த்தும்போது தான் அவை வீறுகொள்கின்றன. பெண்கள் பங்குகொள்ளாத எந்த இயக்கமும் பூரணம் அடைவதில்லை. ஆதலால், இந்த உரிமைப் போராட்டத்தில் இளம் பெண்கள், தாய்மார்கள் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்......''

அந்தக் கூட்டத்தில் பொன்ராசா ஒரு கட்டத்தில் அறைகூவியது அவர் நினைவுக்கு வந்தது.

'உண்மைதான். பெண்களில்லையேல் மனித விருத்தியோ, வாழ்க்கையோ சோபிப்பதில்லை' என்று சொல்லிக்கொண்டார் சிவலிங்கம்.

'ஒரு வருஷத்துக்கு முந்தி எப்பவோ நிகழ்ந்து முடிந்த சம்பவம் அது. ஆனல், இன்று நடந்திருப்பது ராஜ துரோகமல்லவா?'

மனசுள் புழுங்கிக்கொண்டே சிவலிங்கம் ஜானகியை அநாயாசமாகப் பார்த்தார். ஜானகி அப்பவும் தனக்கு எதுவுமே தெரியாதவள் போல் பேசாமலிருந்தாள்.

நிலமற்ற விவசாயிகள் பொதுமக்களைத் தவருன வழியில் தூண்டி, 'முடிக்குரிய' நிலங்களில் அத்துமீறிக் குடியேற ஒரு பக்கத்தால் உசிப்பிவிட்டு, மறுபக்கத்தால் தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தில் தாழ்த்தப்பட்டவர்களை அணி சேர்த்து அரசாங்கத் திட்டங்கள், கட்டுப்பாடுகள், ஒழுங்குகளை மீறி பொன்ராசா நடத்தும் இயக்கங்களை ஆதியோடந்தமாக விஸ்தரித்துவிட்டு, ஜானகியைப் பெருமிதத்துடன் நோக்கினர்.

''ஆசாமியைக் கைது செய்து கூட்டுக்குள் போடத் தெண்டிக்கிறேம். எ ப் ப டி யு ம் இ ர ண் டு மூன்று தினங்களில் பிடித்துவிடலாம். அந்தப் பொறுப்பு என்னிடமே விடப்பட்டிருக்கிறது.''

அவர் அக்களிப்பில் விஷமச் சிரிப்பு மிளிர்வதை ஜானகி அவதானித்தாள். முகம் சுண்டியது. கறுத்து வரும் முகபாவத்தைச் சிரமத்துடன் மறைக்க முயன்ற போது அவள் நெஞ்சில் அடங்காத பெருமூச்சு அம்மியது.

தனது மௌனமும், சஞ்சலமும், தவிப்பும் சிவலிங்கத்துக்கு விபரீத சந்தேகத்தைத் தூண்டக்கூடும் என்று பதகளித்த ஜானகி மெதுவாக வாயசைத்தாள்:

''ஏழைகளுக்காகப் போராடுவதும், வழிகாட்டுவதும் தர்மமல்லவா?''

அவருக்குச் சிரிப்பு வந்தது; கூடவே சினப்பும் தட்டிற்று.

''ஏழைகளுக்காகப் போராடுவது தர்மமாகவிருக்கலாம். ஆனால், அது கையாலாகாத சோம்பேறிகளுக்கு ஒரு நாகரிகமாகிவிட்டது தெரியுமா?''

சிவலிங்கம் அழுத்தமாகச் சொல்லி ஏளனமாகச் சிரித்தார். அவளுக்குச் 'சுருக்'கென்று தைத்தது.

'இந்தக் கையாலாகாத சோம்பேறிகளின் போராட்டத்தைக் கண்டுதான் சட்டக் கவசத்துக்குள்ளே ஒளிந்துகொண்டு பொலிஸார் தொடை நடுங்கிச் சாகிறார்கள், இது தெரியுமா?'

இப்படிப் பதில் அளிக்க முனைந்த ஜானகி, 'இந்தப் பதிலே தன்னைக் காட்டிக்கொடுத்துவிடும்' என்று கருதி, அதே கருத்தை, வேறு வார்த்தைகளில் ஊசி ஏற்றுவது போல் கூறினாள்:

''கையாலாகாத சோம்பேறிகளுக்காக பொலிஸ் இப்படியான கடும் நடவடிக்கைகளில் ஏன் இறங்கவேண்டும்! சும்மா விட்டுவிடலாமே?''

இந்தப் பதிலடியில் திணறி நிதானமிழந்த இன்ஸ்பெக்டர் சொற்பவேளை வாயடைத்தே கிடந்தார்.

'பெண் ஒருவளுக்கு ஆண்பிள்ளை இளக்காரமாவதா? சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதில் பெண்கள் வெகு சாமர்த்தியசாலிகள்தாம்.'

''நான் உனக்குச் சொல்லவந்தது அதுவல்ல.''

''அப்போ, என்ன?''

''அந்தப் பொறுப்பை நான் நிறைவேற்றினால் நிச்சயம் பதவி உயர்வு கிடைக்கும். பிறகு உன் புருஷன் இந்த மாகாணத்துக்கே பெரிய அதிகாரி— பொலிஸ் சுப்ரிண்டன்ற்.''

சிவலிங்கத்தின் கண்கள் பிரகாசித்தன. இதயம் பூரிக்க ஜானகியை நுணுவிப்பார்த்துச் சிரித்தார். ஆனால், அவள் முகம் வாடித் தேம்பிக்கொண்டிருந்தது.

'மரித்த பிணங்களை எதிர்பார்த்தே சவப்பெட்டிக் கடைக்காரனின் வாழ்க்கை கழிகின்றது.'

தன்னுள் யூகித்த வியாக்கியானத்தில் தானே ஆசுவாசமடைந்தாள் ஜானகி. அவள் முகத்தில் வெறுப்பின் சுவடு பதிந்தது.

ஒரு கணவரின் உயர்விலே மகிழாத மனைவியின் மனசைப் புரியக்கூட அவரின் அதிகார ஆனந்த வெறி தடுத்ததோ?

அவள், 'எந்தப் பொறுப்பு' என்று கூட அவரிடம் வினவவில்லை. 'பொன்ராசாவைக் கைது செய்து சிறைக்குள் தள்ளும் வெற்றி விழா' என்று தானே அதற்குப்பதிலும் சொல்லிக்கொண்டாள். அப்போது அவள் நெஞ்சில் ஊற்றுக்கண்ணெடுத்த விரிவுரையாளரின் வாக்கியங்கள் அர்த்தமுள்ளதாகப் பட்டன.

'சிறந்த சொத்தையேனும் தவறான வழிகளில் பெற ஒருவன் எத்தனிப்பானாயின், அதைவிட வெட்கக்கேடானது ஒன்றுமில்லை. இரந்து பெறுவது பிச்சைப் பண்டங்கள்; போராடிப் பெறுபவையே மதிப்பு வாய்ந்தவை.'

காத்திரமான—உண்மையான வாக்கியம்தான். அவள் நெஞ்சு விரிவுரையாளர் இராமசாமியை ஆரத்தழுவிக் குருதரிசனம் செய்தது. இதே கருத்தை பொன்ராசா எங்கோ பத்திரிகையிலும் எழுதியிருந்தான். அவளுக்கு வாசித்தது ஞாபகம்:

'உரிமைகளைப் பறித்தவனிடம் இரந்து கேட்பது அடிமைத்தனம்; போராட்டத்தின் மூலம் பெற்ருல்தான் அவை என்றும் ஆதர்ஸமாகத் திகழும்.'

'ஜானகி, உனக்குச் சரியானது நீதியானது என்று உன் மனசு எதைச்சொல்லுகிறதோ அதற்காகப்போராடு. இல்லாவிடின் ஆத்தும சுத்தியிராது. எனவே, கலங்காதே-பயப்படாதே.'

பொன்ராசனே ஜானகிக்குக் கூறுவதுபோல் அவள் காதில் இப்படிக் 'கிண்'ணரம் போட்டது.

மௌனமாக நின்ற ஜானகி தலையைக் கவிழ்த்துக் கொண்டு குசினிப் பக்கம் நகர்ந்தாள்.

பொன்னையர் சார்மனையில் இருந்து மகளை வைத்த கண் எடுக்காமல் பார்த்தார். அவள் கோலம் அவருக்குச் சஞ்சலத்தை மூட்டிற்று.

'மீண்டும் ஏதோ புயல் அடித்திருக்கிறது. அதுதான் ஜானகி முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு போகிருள்.'

அவர் மெல்ல எழுந்து குசினிக்குள் சென்று,

"பிள்ளை, என்ன நடந்தது?" என்று கேருந் தொனியில் கேட்டார்.

நெஞ்சு துருத்திப் பீறிய அழுகையை ஜானகி அடக்கித் திமிறிக்கொண்டே கதறினள்:

"அப்பா, எனக்கேன் இந்த வெள்ளீடி விழுந்தது?"

உண்மையாக அவரின் நெஞ்சுப் பெட்டகம் இடியுண்டு கொலுக்கழன்றேவிட்டது. நடுங்கும் கரத்தால்

புதல்வியின் முகத்தைத் தடவிக்கொண்டே நாக்குழறலானார்:

''ஜானகி, அழாதே! விபரத்தைக் கூருமல் உனக்குள் மாய்ந்து உன்பாட்டில் அழுதால் நான் என்ன செய்வது?''

இருந்தாற்போல் வாசற்பக்கம் மணி அடித்துக் கேட்டது.

'தந்தி!'

பொன்னையர் 'குடு குடு'வென்று ஓடிப்போய் தந்தியை வாங்கிப் பார்த்தார்.

'உன் கணவரோடு கண்டிக்கு நாளை புறப்பட்டு வரவும்.'

திருமதி சரஸ்வதி சிவபாலன்தான் தந்தி கொடுத்திருக்கிருள்—அவசரத் தந்தி.

சரஸ்வதி ஜானகியின் சர்வகலாசாலைத் தோழி. கண்டியில் குடும்பமாக இருக்கிருள். விபரம் குறிக்காமல் திடீரென்று அவசரத் தந்தி கொடுத்திருக்கிருளே!

'அவளுக்கென்ன, மகராசி. நான்தான் பெரும் கறுமக்காறி.'

அறைக்குள் சென்று சிவலிங்கத்திடம் தந்தியை நீட்டினுள் ஜானகி.

அவர் தந்தியைப் பார்த்துவிட்டு, சற்று யோசித்த பின் சிரிப்போடு, ஒரு பாணம் விட்டார்:

''சரஸ்வதி விரிவுரையாளர் இராமசாமியின் மகள் மட்டுமல்ல, ஒரு பிரதம எஞ்சினியரின் மனைவி. தெரிந்ததா?''

அவர் வார்த்தையை விட, அவர் நோக்கம் அவளுக்கு நன்ருகப் பளிச்சிட்டது.

'அவள் பிரதம எஞ்சினியர் சிவபாலனின் மனைவி என்பதாலல்ல, ஓர் இலட்சியவாதியான விரிவுரையாளரின் புத்திரி என்பதில்தான் அவளுக்கு மவுசு.'

ஜானகி அவருக்கு இப்படித் திருப்பிக் கூற நினைத்தாள். ஆனால், மனசு ஏவவில்லை. கண்டிக்குப் பயணம் வைக்க வேண்டுமே!

அதிக நாட்களுக்குப் பின் சரஸ்வதியைச் சந்திக்கப் போகின்ற குதூகலத்தில் ஜானகியின் இதயம் அப்போது நைந்துபோய்க் கிடந்தது.

## 4.

கொழும்புக்குச் செல்லும் 'உத்தரதேவி' அன்றும் வழக்கம் போல் குறிப்பிட்ட நேரத்திற்குப் பின்பே கிளம்பியது. ஜன நெரிசலுக்கும் குறைவில்லை.

இரண்டாம் வகுப்புப் பெட்டியில் சிவலிங்கம்—ஜானகி தம்பதிகள் ஏறி ஒருவாறு இடம் பிடித்துக் கொண்டார்கள். புகையிரதம் இரைச்சலிட்டுக் கிளம்பியது.

ஜானகி யன்னலுக் கூடாக இயற்கைக் காட்சிகளையும் அவற்றின் வளங்களையும் பார்த்துப் பரவசமடைந்துகொண்டிருந்தாள்.

மனிதர்களின் கரங்கள் தொட்டுக் கூடப் பார்க்காத எத்தனையோ ஏக்கர் கொண்ட தரிசு நிலங்கள் வாழ்விழந்த கைம் பெண்கள் போல் வரண்டுகிடந்தன. சில பகுதிகளில் தென்னந் தோப்புகளும், பனங்கூடல்களும், நெல்வயல்களும் நிரவலாகக் கிடந்தன. நெற்கதிர்கள் கொத்துக் கோர்வையாகச் சேர்ந்து காற்று வீச்சில் தலை சாய்ந்து கடலலைகள் விழுந்து மீள்வது போல் திகழும் பசுமைக் கோலங்கள் அவள் மனசில் 'குளுகுளு' த்தன. அடர்ந்த சோலைத் தென்னம் வட்டுக்களில் குலைகளாகப்

பெயர்ந்து தள்ளிக் கிடக்கின்ற குரும்பைகள், தேங்காய்கள், கன்னி கழியாத இளங் குமரிகளின் வலிடு பிரித்த நெஞ்சின் முனைப்பாடுகள் போல் அவள் மனக் கண்ணில் விழுந்தன. 'ஈழத்து இளநீர்கள் யாழ்ப்பாணத்துப் பெண்கள் போல் ரம்மிய மானவை' என்று அவன் சொன்னது உண்மையா?

கண் இமைக்காமல் ஜானகி தென்னந் தோப்புகளைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, பொன்ராசா வேறு அர்த்தத்திலும் பத்திரிகையில் எழுதிய வாசகம் அவள் மனதில் ஊர்ந்தது.

'மனிதர்களின் திறமைகள் எங்கே சுதந்திரமாகப் பிரயோகம் செய்யப்படுகின்றனவோ, அங்கேதான் அழகும், புத்துணர்வும், கலையும் முழுமையாகப் பிறக்கின்றன'

'உண்மைதான். அவன் இந்தத் தத்துவ அறிவுகளையெல்லாம் எங்கே பயின்முன்? ஓ, அவன் விரிவுரையாளர் இராமசாமியின் பழைய மாணவனல்லவா? ஆனல், அவன் என்னைப் போல் பல்கலைக்கழகப் பட்டம் தானும் பெறவில்லையே?'

கன்னுகத்திலே ஒரு சாதாரணக் கலவன் பாடசாலையிலே சரஸ்வதி, பொன்ராசா இவர்களோடு தான் ஜானகியும் கல்வி பயின்முள். சரஸ்வதியும் ஜானகியும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கலைப்பட்டதாரிகளாக வெளியேறிவிட்டார்கள். பொன்ராசாவுக்கு அந்தப் 'பொசிப்பு'க் கிட்டவில்லை.

இரு தோழிகளுக்கும் பட்டங்கள் கிட்டியதுதான் மிச்சம். உத்தியோகம்தான் கிடைக்கவில்லை. 'வேலையில்லாத் திண்டாட்டம்' என்ற பூதத்தின் முன்னே இந்தப் பெண்களின் பட்டப் படிப்புகள் எம்மாத்திரம்? கொஞ்சமும் பலிதமாகவில்லை.

ஜானகி ஆசிரியத் தொழிலுக்கு மனுப்போட்டதை இன்ஸ்பெக்டர் சிவலிங்கம் விரும்பவில்லை. 'பெண்ணின் உழைப்பு ஆணுக்கு இழுக்கு' என்பது அவர் அபிப்பிரா

யம். மனைவி வெளியில் தொழில் புரிவது இன்ஸ்பெக்டரின் அந்தஸ்துக்கும் பொல்லாப்பு என்ற அவர் எண்ணம் ஜானகியின் ஆவலுக்கு வேட்டுவைத்தது.

விரிவுரையாளர் இராமசாமியின் மகள் சரஸ்வதி பட்டதாரியாக இருந்தும், உத்தியோகம் பார்க்காமல் இருக்கும் போது சாதாரண ஓர் பெண்ணான தனக்குத் தொழில் இல்லாதது ஜானகிக்குப் பெரிதாகவும் படவில்லை.

'பொன்ராசா வாழ்க்கையில் நொந்து இடிந்துபோனவன். சாதாரண தொழிலாளர் குடும்பத்தில் பிறந்து எவ்வளவோ துயரங்களுக்கு முகங் கொடுத்து முன்னுக்கு வந்தவன். அவன் மட்டும் அன்று பேராதனைப் பல்கலைக் கழகத்தில் ரகளை பண்ணமலிருந்தால்...?

இன்று அவன் ஓர் வைத்திய கலாநிதியாக— கல்லூரி அதிபராக வந்திருப்பான். அடுத்த வகுப்பு மாணவர்களுக்காக நியாயம் கேட்டுப் போராடி அவர்களை உயர்த்தி வைத்து விட்டு அவன் தன் வாழ்க்கையில் பெரும் மண்ணை வாரிக் கொட்டிய மனிதாபிமானி...'

இவ்விதம் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள் ஜானகி. மாணவர்களின் கிளர்ச்சி பொன்ராசாவின் கல்விக்கு உலை வைத்துவிட்டது. அவன் வாழ்க்கையே கொந்தளிப்பாக மாறிவிட்டதை நினைத்த மாத்திரத்தில் அவள் மனம் உருகிப் பதகளித்தது.

'விரிவுரையாளர் இராமசாமியின் மாணவனென அவன் கொண்டிருந்த பெருமிதத்துக்கு, இப்படி ஓர் அந்தகார வாழ்க்கையா அவனுக்கு அமைய வேண்டும்?'

அவள் முகம் ஒருகணம் சுண்டிற்று.

பசுமையான சோலைகளையும் பரவலாகச் செறிந்து கிடக்கின்ற காடு கரம்பு வயற்பரப்புக்களையும் மனகுறிப் பார்த்தபோது, அவள் நினைவில் பேராதனைப் பூந்தோட்டத்திலே பொன்ராசுவோடு இணைந்து சென்று பரிமாறிய

வார்த்தைகள் ரம்மியமான அந்தக் காட்சிச் சித்திரங் களை கட்டுமீறித்திரை நீக்கம் புரிந்தன.

பூந்தோட்டத்துக்குள் நுழையும் போது ஜானகி நெஞ்சு பூரிக்கச் சிரித்துக் கொண்டே கேட்டாள்:

"யாழ்ப்பாணத்தின் வரண்ட பிரதேசத்தைவிட்டு இந்தப் பேராதனைப் பூந்தோட்டத்துக்கு அருகிலேயே ஓர் இல்லம் அமைத்துக் குடித்தனம் வைத்துக் கொண்டால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும் தெரியுமா?"

"இதிலே அப்படி விந்தையாக என்ன ரம்மியம் இருக்கிறது? தாய் நோஞ்சல் என்றாலும் பிள்ளைக்கு அவள் தெய்வம். பிறந்த நாடும் அப்படித்தான். அவனவனுக்கு அது அது தாய்"

"நீங்கள் தத்துவம் பேசுகிறீர்கள். கலையையும், இலக் கியத்தையும், அழகையும் மணிக்கணக்காகப் பேசும் உங் களுக்கு அவற்றை ரசிக்கமட்டும் தெரியவில்லையே?"

ஜானகி கிண்டல் பண்ணினாள். அவன் சிரித்தான்.

"கலை இலக்கியம் வாழ்க்கையின் வெளிப்பாடு. மனி தர் உழைப்பும் அவர்கள் சிருஷ்டிகளுமே அழகும் லாவண் யமும் கொண்டு கலை இலக்கியமாகின்றன. அந்தக் கலை இலக்கியங்கள் பொழுது போக்குச் சாதனங்களல்ல; அவை வாழ்க்கைக்கான செழுமைத் தோற்றங்கள். இவற்றின் செழுமைக்குக் காரணம் என்ன தெரியுமா?"

ஜானகி பதில் பேசாமல் ஏதோ விந்தையிலாழ்ந்து முகம் நையச் சிரித்துக் கொண்டு பதிலளித்தாள்:

"நல்ல பசளையும், வற்றாத நீரூற்றும்"

"இது விஞ்ஞானப் பாடத்தைப் புத்தகத்தில் படித்து மனனம் பண்ணியவர்களின் கூற்று. உண்மையில் இவற் றிற்கெல்லாம் மனிதனின் கரங்களும் இந்த மண்ணும் தான் காரணம். இந்தத் தோற்றங்கள் யாவும் மண்ணி லிருந்தும், மண்ணில் உழைக்கும் மனிதர்களிடமிருந்து தான் கிளம்புகின்றன"

"மனிதர்களால் மட்டும் முடியுமா? பசளையும் நீரூற்றும் வேண்டாமா?"

"அவற்றையும் மனிதன் தான் செப்பனிட்டுப் பூமிக்கு மனித குலத்துக்கு அளித்தான்"

இதன்பின் ஜானகி பதிலளிக்கத் தயங்கினாள்.

"ஜானகி, இந்த நந்தவனம், அழகும் ரம்மியமுமாக விருக்கலாம். இவற்றைச் சில மனிதர் ரசித்தும் கொள்ளலாம். ஆனால், இந்த அழகைச்சிருஷ்டித்த 'பிரம்மா'க்களை நேரிற் கண்டால் எந்த ரசிகசிகாமணிகளும் நாக்குப் பிடுங்கிச் சாவார்கள்"

"ஏன்?"

"அந்தப் பிரமாக்கள் தான் இந்த மலையகத்திலே குடியுரிமையிழந்து, வாக்குரிமையற்று, நிலப்பரப்பின்றி ஒட்டை ஒடிசல் குடிசைகளில்—லயங்களில் அடைபட்டு அன்றாடம் செத்து மூச்சுத்திணறி 'நித்திய நரகம்' என்ற குழியில் சீவித்துக் கொண்டிருப்பவர்கள்".

உணர்ச்சி, ஆவேசம், கோபம்—அவன் முகத்தில் கொப்பளித்துத் தெறித்தன.

"யார் அவர்கள்?"

ஒரு குழந்தைபோல் ஜானகி ஆவலோடு கேட்டாள்.

"தொழிலாளர்கள்; பாட்டாளிகள்; தமிழர்கள்"

பொன்ராசாவின் கண்கள் சோகத்தில் ஆழ்ந்து போயிருப்பதை அவள் கவனித்தாள். 'நித்திய நரகப்' படுகுழியில் ஆக்கினைப்படும் அந்த மனிதர்களை—தமிழர்களை அவள் இதுவரை கண்டதேயில்லை. எனவே, ஆவல் ததும்ப—பரிதாபத்தோடு மீண்டும் கேட்டாள்:

"அவர்களை நான் கட்டாயம் பார்க்க வேண்டும் போலிருக்கிறது. அவர்களை எங்கே சந்திக்கலாம்?"

"மாடமாளிகை கோட்டை கோபுரங்கள் புடைசூழ்ந்த—ஸ்ரீராஜவிக்கிரம சிங்கனும் தமிழன் அரசோச்சிய இந்தக் கண்டிமா நகரத்திலே"

இலங்கையின் இதயமாம் கண்டி மா நகரத்தில் தமிழன் ஆட்சி புரிந்த வரலாறு அவளுக்குத் தெரியும். தமிழன் ஆட்சி புரிந்த கண்டியில் தமிழர்களே நரகக் குழியில்—லயங்களில் வாழ்கிறார்களென்றால்...?

அவளுக்கு இந்தச் செய்தி ஆகவும் வியப்பாகத் தெரிந்தது.

'பெரும் தோப்புகள், உயர்ந்த மலைச்சாரல்கள், நெடிய மாடிகள், திறந்த வீதிகள், அகன்ற வாவிகள், மாடிவீடுகள்—இவ்வாறெல்லாம் செறிந்துள்ள இந்தக் கண்டி மா நகரத்திலே, அவன் சொல்லும் கோலத்தில் மனிதர்கள் இருப்பார்களா?'

நூதன வியாக்கியானம். சந்தேகம் எழுந்து அவள் மனசைக் குடைந்தது. அது அவள் முகத்தில் பாவியதை அவன் கவனித்தான்.

"நாங்களும் அவர்களும் இருவேறு உலகில் வாழ்கின்றோம். நீர் வாழ்ந்த உலகத்திலே இந்த ஜீவன்களைக் கண்டிருக்கமாட்டீர். அதுதான் உமது முகம் வியப்பில் ஆழ்ந்து போய்க் கிடக்கிறது. உண்மையில் நீர் அந்த உலகத்தைப் பார்க்க விரும்புகிறீரா?"

"ஓம், கட்டாயம் பார்க்கவேண்டும்" என்றாள் ஜானகி.

தெற்கே பூந்தோட்டத்தின் ஊஞ்சற்பாலம் நெருங்கி விட்டது. கனத்த வேகத்தில்—ஊஞ்சற்பாலம் அண்மியதே தெரியவில்லை.

தொங்கு பாலத்தின் கீழே மாவலிகங்கை 'சலசல'த்து ஓடிக் கொண்டிருந்த பாங்கை அவள் ஒரு கணம் பாலத்தில் தரித்து நின்றே பார்த்தாள்.

இளைஞர்கள், கன்னிகள், கமராக் கலைஞர்கள், 'யூனிவர்சிட்டி' மாணவர்கள், காதல் கொதிச்சிட்டுகள், இலக்கியச் சுவைஞர்கள், அரசியல் சாணக்கியர், 'மினிஸ்கேட்' ரகங்கள்—இப்படிப் பல ரக ஜீவாத்து மாக்களைக் 'குஷி'

யிலாழ்த்தும் அந்த ஊஞ்சற்பாலத்துக்குள்ள விசேஷ மவுசு என்னவெனில், இருவர் ஜோடிகட்டிக் கூட்டுச் சேர்ந்து செல்வதற்கென்றே ஒடுக்கமாக அது செப்பனிடப்பட்டிருப்பது தான்.

கம்பிகளால் கேடயமாக்கப்பட்ட அந்தத் தொங்கு பாலத்தில் இளங்காதல் நோயாளர் போட்டி போட்டுக் கொண்டு திமிறித் திணறுவதை அவன் பலதடவை வேடிக்கை பார்த்திருக்கிறான்.

கூத்துக்குள்ளே கோமாளியாக வெளியூர்—உள்ளூர் 'ஹிப்பி'ஸ்டுகளும் ஜோடி போட்டுக் கொண்டு அந்த ஊஞ்சற் பாலத்திலே கெந்தி 'அன்னநடை' பயில்கின்ற கோலம் அவளுக்குச் சிரிப்பை மூட்டிற்று. ஜானகியும் சுய நினை விழந்து சிரித்தேவிட்டாள். இந்தக் கேளிக்கைகள் பொன் ராசன் மனசிலும் 'கிளுகிளு'ப்பை மூட்டின. அவன் ஜானகியின் முகத்தை உணர்ச்சி தேங்க ஏறெடுத்துப் பார்த்தான்.

அப்போது அவளின் முகம் சிலிர்த்து, பூப்போல் விரிந்தது. தேன் வழிந்தமாதிரி வாய்ச் சொண்டுகள் பளபளத்தன. உடம்பில் நுளுந்திய உணர்ச்சிப் பீறல் அவள் நெஞ்சினில் புரைந்து அவள் கண்களிலே காந்தியது.

பொன்ராசா அவள் கரத்தைச் 'சடா'ரென்று பற்றிக் கொண்டான்.

அவள் எங்கோ ஓர் உலகத்தில் சஞ்சரித்துவிட்டு வந்தவளைப்போல் ஆசுவாசப்பட்டுக்கொண்டே கேட்டாள்.

''நாங்களும் இந்த ஊஞ்சற்பாலத்தைக் கடந்து போய் வருவோமா:''

''அப்படியா? சரி, வா போவோம்''

அவன் அவள் கரத்தைப் பிடித்து வருடினான்.

அவள் அந்தப் பிடியில் துவண்டுபோய் தன் நினைவிழந்து உடம்பின் கொது கொதுப்பில் மூழ்கிவிட்டாள்.

அவள் அதரங்கள் தேன் தோய்த் தெடுத்த பழங்கள்போல் ஊனித்து மின்னின.

பாலத்தைக் கடந்ததே அவளுக்குத் தெரியவில்லை. அவன் கரங்களில் தாவிக் கொண்டே ஜானகி அவனைப் பரீட்சித்தாள்:

"இப்பொழுது யாராவது பார்த்துவிட்டால் என்ன நினைப்பார்கள்?"

"காதல் ஜோடிகளாகவல்ல; 'புது மணத் தம்பதிகள்' என்று"

'புதுமணத் தம்பதிகள்'

இது வாக்கல்ல; கற்கண்டு. அது அவள் நெஞ்சுக்குள்-வாயினுள் தேனுக ஆறிற்று.

"சும்மா போங்கோ"

என்ன சரஸம்; எத்தகைய சல்லாபம். செல்லமாகக் கடிந்து கொண்டே அவள் அவனை விழுங்கிப்பார்த்தாள்.

அவன் வாயில் வந்ததைச் சொல்லாமல் அந்த மாவலிக் கங்கைக் கரையைச் சுட்டிக் காண்பித்தான்.

அங்கே ஆணும் பெண்ணுமாக இரண்டு யானைகள் ஜோடி பிணைத்துக்கரையில் விழுந்து படுத்துக் கொண்டு, தும்பிக்கைகளால் உள்ளிழுத்த தண்ணீரை ஒன்றுக்கு மேல் ஒன்ருக வீர்யமாகப் பாய்ச்சி விளையாடிய வண்ணமிருந்தன.

'பொல்லாத கழிசடை யானைகள்; சரியான வம்புப் பிறவிகள்'

அவள் தேகம் நாணத்தால் கூனிக் குன்றியது.

அவன் அவளை மேவிப் பார்க்க, அவளும் அவனை மருவிப் பார்த்தாள்.

* * *

"குருணுகலே ஸ்ரேஷன் வந்து விட்டது"

குரல் கேட்ட ஜானகி துயிலெழுந்தவள் போல் திகைத்துக் கொண்டு கண்களைச் சுழற்றிஞள்.

அவளைத் தட்டி எழுப்பிய சிவலிங்கம் இறங்குவதற்கு ஆயத்தம் செய்துகொண்டிருந்தார்.

ஜானகி பரபரப்போடு யன்னலூடாக எட்டிப்பார்த்தாள்.

குருணைகலை ஸ்ரேஷன் வந்தேவிட்டது.

'ஆ, இந்த உத்தரதேவியும் ஊஞ்சற்பாலமாக இருந்துவிடக் கூடாதா?'

## 5.

சரஸ்வதி எதிர்பார்த்த நேரம் பிந்தியே ஜானகியும் சிவலிங்கமும் காரில் வந்து இறங்கினார்கள்.

ஜானகியைக் கண்டவுடன் பரவசமாகத் துடித்த சரஸ்வதி, "அவரும் ஜானகியும் வந்தாச்சு. புத்தகத்தை மூடிவிட்டு எழுந்து வாருங்கோ" என்று அறையை நோக்கி சிவபாலனிடம் கூறிவிட்டு விறாந்தையில் வந்து நின்று அக்களித்து வரவேற்றாள்.

"இன்ன றெயிலில் புறப்படுகிறோம் என்று ஒரு பதில் தந்தியாவது கொடுத்திருக்க வேண்டாமா?" என்று ஆனந்தம் பொங்க செல்லமாகக் கடிந்து கொண்ட சரஸ்வதி, "சரி, உடுப்பை மாத்திக் கொண்டு 'பாத் றூம்' போய் கை, கால், முகத்தை அலம்பிவிட்டு வாருங்கோ" என்றாள்.

அதே வீச்சாக மூன்றாம் அறையை எட்டிப் பார்த்தாள். அப்பா உடல் அயர்ந்து நன்றாகத் தூங்கிவிட்டார்.

வீடு சோபை இழந்து வெறிச்சோடியிருப்பதுபோல் ஜானகிக்குப் புலப்பட்டது.

'சரஸ்வதி 'திடீ'ரென்று ஏன் அழைத்தாள்?'

ஜானகி வலுவாகச் சிந்தித்தாள்.

சாப்பாட்டுக்கு ஆயத்தம் செய்துகொண்டிருந்த சரஸ்வதியிடம் ஜானகி மெல்ல அணுகி, "அவசரமாகத் தந்தி கொடுத்தாயே, என்ன விஷயம்?" என்று கேட்டாள்.

"எல்லாம் விடிந்த பின் சொல்கிறேன். இப்போ சாப்பாட்டைக் கவனி" என்றாள் சரஸ்வதி.

ஜானகியின் மனசில் பிரளயம் எடுத்தது. அவளுக்கு விரிவுரையாளர் இராமசாமியைப் பார்க்க மனம் துடித்தது. ஆவலோடு கேட்டாள்:

"சரஸ்வதி, உனது அப்பா எங்கே?"

"அவர் இவ்வளவு நேரமாக உங்களை எதிர்பார்த்திருந்தார். வழக்கமான நேரம் பிந்தி விட்டது. நீ வந்தவுடன் சாப்பாட்டைக் கவனித்துக்கொடு என்று சொல்லிவிட்டுத் தூங்கிவிட்டார்."

தந்தையில் ஜானகி வைத்த அன்பையும் மதிப்பையும் கவனித்தபோது சரஸ்வதிக்கு நெஞ்செங்கும் பொங்கிப் பூரித்தது.

'நல்ல மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களைக் குருவாக மதிப்பவர்கள். ஜானகியும் அப்படித்தான். வந்த சுவடு ஆறவில்லை, தனது விரிவுரையாளருக்கு ஸ்துதி செய்யத் துடிக்கின்றாள்.'

காலைச் சாப்பாடு முடிந்தது. விரிவுரையாளர் இன்ஸ்பெக்டரையும் ஜானகியையும் தனது 'ஸ்டுடியோ'க்கு அழைத்துச் சென்றார்.

"உங்களை நான் அழைத்தது எதற்காகத் தெரியுமா?"

சிவலிங்கம் ஒன்றும் புரியாமல் நெற்றிப் புருவங்களை நெரித்துக் 'கல கல'த்துச் சிரித்தார்.

"அதெப்படி, சொன்னாலல்லவா தெரியும்?"

"சரி, தெரியாமலிருந்ததுதான் நல்லது."

விரிவுரையாளர் பின் அமைதியாகச் சிரித்துக் கொண்டு சொன்னார்:

"நான் சொல்லப் போவதைக் கேட்டுவிட்டு நீங்கள் அதிர்ச்சியடையக் கூடாது."

'அடக்கத்தின் பெட்டகம்' எனப் பெயரெடுத்த விரிவுரையாளரின் வாயில் 'அதிர்ச்சி' என்ற வார்த்தை உதித்தபோதே, உண்மையாக ஜானகியின் நெஞ்சுதான் அதிர்ச்சியடைந்தது.

தலைபோகிற விஷயத்திற்கும் அஞ்சாமல் பதட்டப் படாமல் துணிந்து பேசும் விரிவுரையாளர், அதிர்ச்சி பற்றிப் பிரஸ்தாபிப்பதென்றால் அதற்குள் ஏதோ 'பயங்கரமான' சங்கதி இருக்க வேண்டும் என்று ஜானகி யூகிக்கலானாள்.

சிவலிங்கம் ஜானகியைப் பார்த்து வெறுமனே சிரித்தார். அவர் முகம் குல்லிட்டு ஏக்க சாயல் படர்ந்தது.

"என்ன, நான் அப்படிச் சொன்னதும் அசந்துபோய் விட்டீர்கள்? நீங்கள் ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர். ஜானகி வெறும் கிளிப்பிள்ளை மாணவியாக மட்டும் என்னிடம் பயிலவில்லை, நிதானத்தையும் துணிச்சலையும் நன்கு கற்ற பெண். இந்தத் தகைமைகள் இருந்துங்கூட ஒன்றும் பேசாமலிருப்பது விந்தையாகவல்லவா இருக்கிறது?"

இதற்கு இன்ஸ்பெக்டர் சிவலிங்கம் சற்றுக் கனைத்துக் கொண்டு அழுத்தமாகக் கேட்டார்:

"அப்படி ஒன்றுமில்லை; அது என்ன விஷயம்?"

ஜானகி பீதி நிறைந்த ஆவலோடு விரிவுரையாளரை உற்று நோக்கினாள்.

"உங்கள் மனைவி என் மாணவி மட்டுமல்ல, சரஸ்வதியைப் போல் அவளும் என் புதல்வியே. ஜானகி கண்கலங்கக் கூடாது என்பதற்காகவே உங்களை அழைத்தேன்."

விரிவுரையாளர் குரல் சற்றுக் கம்மிக் கொண்டது. சிவலிங்கம் ஒன்றும் புரியாமல் விழித்தார்.

ஜானகி கண்கலங்கும்படி அவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் நடந்துகொண்டதாக அவருக்கு நினைவில்லை. அப்படி

யிருக்க, விரிவுரையாளரின் பேச்சு சிவலிங்கத்துக்குப் புதிராகவும் ஆச்சரியமாகவும் தோன்றியது.

சிவலிங்கம் ஜானகியை அனுதாபத்துடன் நோக்கி 'உன் மட்டில் நான் அப்படி நடந்து கொண்டேனு?' என்று கேட்பது போல் பார்த்தார்.

சிவலிங்கத்தின் தடுமாற்றம் விரிவுரையாளருக்குப் பூரணமாக விளங்கியது.

"நீங்கள் நினைப்பது எனக்குப் புரிகிறது. உங்களால் ஜானகி கண்கலங்கியதில்லை என்பது உண்மை. ஆனல், அவள் ஏற்றுக்கொண்ட இலட்சியம் அவளை அப்படி ஆக்கும். உங்கள் நோக்கு வேருகவிருப்பின் இது சாத்தியமாகுமல்லவா?"

"ஜானகிக்கென்று ஓர் இலட்சியம் உண்டா? அது என்ன?"

அவரிடம் கேட்டுக்கொண்டே ஜானகியை நெருடிப் பார்த்தார் சிவலிங்கம்.

"அது இதுவரை நீங்கள் தெரிந்திருக்க வேண்டிய சங்கதி. ஒரு பெண் கல்யாணச் சந்தையில் ஆண் மகனுக்கு ஜோடி சேர்க்கப்படுகின்ருள். அவளுக்குக் 'குடும்பப் பாரம்' தலையில் விழுந்து அதையே அவள் ஞானப் பிராப்தியாக்கி வாழவேண்டும் என்று சிலர் நினைக்கின்றனர். அது மகா தப்பு. பெண்கள் இந்த உலகத்தைப் பற்றியும், மக்கள் வாழும் முறை பற்றியும் தெரிய - சிந்திக்கப் பூரண உரிமையுண்டு. பெண்கள் சகல மனிதர்களின் தாய்களாக விளங்குபவர்கள். தாய்க்குலத்தைச் சமூகத்திலிருந்து ஒதுக்கி ஒரு குடும்பச் சிறைக்குள் தள்ளி வேடிக்கை பார்ப்பதே ஆண்மையின் பேடித்தனம்; படு முட்டாள்தனம்."

அவளை அப்படி எந்தச் சிறையிலும் அடைத்ததாகவோ, அவள் மட்டில் தான் ஒருபேடியாக நடந்து கொண்டதாகவோ சிவலிங்கம் கனவால்கூட ஒப்பவில்லை. எனவே, விரிவுரையாளர் பேச்சு அவருக்கு ஓர் புதிராகப்பட்டது. அவரின் முகபாவத்தினில் ஒன்றும் பிடிபட

வில்லை என்பதை யூகித்த விரிவுரையாளர் தயக்கமின்றி நேரடியாகவே விஷயத்தை அவிழ்த்து விட்டார்.

''பொலிஸ் நாடுமுழுதும் பொன்ராசாவை வலை போட்டுத் தேடுகிறதே, அது உண்மையல்லவா?''

''ஆம். உண்மைதான்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

விரிவுரையாளர் தேகங்குலுங்கக் 'கல கல'த்துச் சிரித்தார்.

''என்னிடம் பயின்ற எத்தனையோ மாணவர்கள் பெரும் பதவிகளில்-டொக்டர்களாக, இஞ்சினியர்களாக, நீதிபதிகளாக, அமைச்சர்களாக-தங்கள் வாழ்க்கையை அமைத்துத் தங்களுக்குள் 'தன்னிச்சை'யாக காலங் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். பொன்ராசனே தனது வாழ்க்கையை மனித சமுதாயத்துக்காக அமைத்துக் கொண்டவன். அவன் எழுத்தாளன், கலைஞன், தத்துவவாதி, சிந்தனைவாதி-வரிசையில் சேர்ந்த உலகச் சொத்தாளன். அவனைக் கூட்டுக்குள்ளே போடுவது சமுத்திரத்தை ஓர் குடுவைக்குள் அடைக்கும் முயற்சி. அவன் மக்களுக்காகப் போராடுபவன்.''

இவ்வாறு சொல்லிவிட்டு இன்ஸ்பெக்டரை நோக்கினார். இன்ஸ்பெக்டர் முகத்தில் வியர்வை துளிர்த்தது. அது வெட்கம், பீதி, மயக்கம் அல்லது கோபம் ஏதாவது ஒன்றினலாகவிருக்கலாம்.

''நான் இப்படிக் கூறும்போது உங்கள் சித்தத்தில், பொன்ராசாவுக்காக நான் வாதிடுவதாக நீங்கள் அர்த்தப் படுத்துகிறீர்களல்லவா?''

விரிவுரையாளர் தொடுத்த கேள்வி இன்ஸ்பெக்டரைச் சங்கடத்திலாழ்த்தியது. மனதை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, 'அது உண்மைதானே?' என்று கூறுவது போல் பார்த்தார்.

விரிவுரையாளர் அவர் நிலையைப் புரிந்து கொண்டார். மீண்டும் அழுத்தமாகச் சொற்களைப் பிரயோகித்தார்:

"இதோ பாருங்கள். உண்மை அதுவல்ல. ஒரு வாக்கில் சொல்வதானால் நான் பொன்ராசனுக்காகவல்ல; உங்களுக்காக-ஜானகிக்காகவே பரிந்து பேசுகின்றேன்."

சிவலிங்கத்தைக் கவனித்தபோது, அவர் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தார். எனினும், தான் சொல்ல வந்தது எதுவோ அதைக் கடைசியாக விரிவுரையாளர் கக்கியேவிட்டார்.

"இதை மட்டும் உறுதியாக நம்புங்கள். இந்த விவகாரத்தில்-பொன்ராசனை உள்ளே தள்ளும் உங்கள் முயற்சி தோல்வியில் முடியும். இதனால், கண்ணீர் விடுவது ஜானகிதான். இதை நேரில் சொல்லவே உங்களை அழைத்தேன்."

விரிவுரையாளரின் கண்கள் ஜானகியை வாஞ்சையுடன் பரிதவித்துப் பார்த்தன.

"உங்களால் எப்படிக் கூற முடியும்?"

இன்ஸ்பெக்டர் சற்று ஆக்ரோஷமாகவே கேட்டார்.

விரிவுரையாளர் அமைதியாகப் பதிலளித்தார்:

"உங்களிடம் ஆயுதபலமுண்டு; ஆனால், ஆத்மபலமில்லை."

"அதென்ன ஆத்ம பலம்?"

"ஆம், ஜானகிகூட உங்கள் போக்கை ஆதரிக்கமாட்டாள்."

இன்ஸ்பெக்டரின் நெஞ்சு கோடை முழக்கமாக இடியுண்டதிர்ந்தது.

'ஜானகி என் கருத்துக்கு-போக்குக்கு வைரியா? எனது முயற்சி தோல்வியானால், ஜானகிக்குச் சந்தோஷமா? அப்படியானால், இவள் அவனுடன்...?'

பிரளயித்த மனசில் சிங்க கர்ஜனை ஒலித்தது.

இன்ஸ்பெக்டர் ஜானகியை அர்த்த புஷ்டியோடு வெறிக்கப் பார்த்தார்.

ஜானகியின் கண்கள் குமிழிட்டுக் கலங்கிக் கொண்டு வந்தன.

AH.
A KAVAN,
JLAI WEST
JAGAR

## 6.

"தொரே அவரு வந்திட்டாருங்களா?"

வெளியே ஒரு கிழவன் குரல் கேட்டது.

விரிவுரையாளர் எழுந்து முற்றத்தில் வந்து பார்த்தார். வெள்ளைச்சாமி.

"ஓ, வெள்ளைச்சாமியா? என்ன சங்கதி?"

"ஆமாங்க, சங்கத்து ஆளுங்கல்லாம் ஆபிசில வந்து காத்துக்கிட்டிருக்காங்க. ஆனா அவரு இன்னும் வந்துசேரலீங்க. என்ன ஆவிச்சுதோ தெரியலீங்க?"

வெள்ளைச்சாமி அங்கலாய்த்தான். அவன் யாரைக் குறிப்பிட்டான் என்பது விரிவுரையாளருக்குத் தெரிந்து விட்டது. அவர் மெதுவாக அவனுக்குச் சைகை காட்டிக் கொண்டு சொன்னார்:

"நீ போ. அவர் குறிப்பிட்ட நேரத்தில் கட்டாயம் வந்து சேர்வார்."

விரிவுரையாளர் முகம் அவரை மீறிக் குல்லிட்டது.

இதைக் கவனித்த ஜானகி வெளியே வந்து, "அந்தக் கிழவன் யாரைத் தேடுது? என்ன அவசர காரியம்" என்று விடுத்துக் கேட்டாள்.

"கண்டி முனிசிபல் தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிக்கப் போகிறார்கள். அதற்கு வேண்டிய தயாரிப்பு வேலைகள் செய்யும் ஒருவரைத் தேடிவந்த சங்கத்து ஆள்" என்றார் விரிவுரையாளர்.

'தொழிலாளர் வேலைநிறுத்தப் போராட்டம்' என்றதும் பொன்ராசன் நினைவே — அவன் உருவமே அவள் மனதில் நிழலாடிற்று.

''நோயாளர்கள் வைத்தியர்களை நாடுவது போல, உரிமை இழந்த தொழிலாளர்கள் போராட்ட இயக்க வீரர்களையே நாடுவார்கள். யாழ்ப்பாணத்தில் தொழிலாளர் பிரச்சினையென்றால் பொன்ராசா பெயர்தானே அடிபடுகிறது. இங்கேயும் அவனைப் போல இலட்சியப் போராளி இருக்க வேண்டும். இதற்கு எங்கள் விரிவுரையாளரே வழி செய்து வைப்பார்.''

ஜானகி யூகித்தாள்.

'இந்தச் சமுதாயத்திலே இலட்சியவாதிகளைத்தான் பொலிஸ் எப்போதும் வேட்டையாடுகிறது.'

ஒரு நாவலில் இதை எப்பவோ வாசித்திருந்தாள். யாருடைய நாவல் என்று நினைவில்லை.

இதை ஒருநாள் அவள் விரிவுரையாளரிடம் கூறிய போது, அவர் சிரித்துக் கொண்டு விளக்கினார்:

'அடக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக உண்மையில் போராடுபவனை எந்த அடக்குமுறைகளாலும் தடுத்துவிட முடியாது. கொடுமைகள் அதிகமாக அவன் போராட்ட வீறு புடமிடப்படுகின்றது. அப்போதுதான் அந்த இலட்சியம் வஜ்ஜிரமாகின்றது.'

''அப்படியாயின் பொன்ராசாவும் புடம் போட்ட போராளிதான்.''

அவள் தனக்குள் முறுவலித்துக் கொண்டே விரிவுரையாளரின் 'ரீடிங் றூமில்' கண்ணெறிந்தாள்.

அங்கே இன்ஸ்பெக்டர் சிவலிங்கம் ஏதோ ஒரு புத்தகத்தை விரித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்.

'அவர் எங்கள் பொன்ராசனைப் போல் தீவிரவாதியாக இருப்பாரா?'

ஜானகி துருவிக் கேட்டாள். விரிவுரையாளர் மௌனமானார். அவள் மனசு பொன்ராசாவில் தாவியிருப்பதை அவர் உணர்ந்தார். அவளின் அந்தராத்மா இப்படித் தவித்துக்கொண்டிருப்பதன் சூட்சுமம் அவருக்கு நன்ருகப் பளிச்சிட்டது. இதனுல் சிவலிங்கத்தின் கெடுபிடியும் போக்கும் மேலும் முரண்பாடாக வெடிக்கக் கூடும் என்று நினைத்த போதே அவர் மனம் சாம்பிற்று. ஜானகியின் வாழ்க்கை இரு கன்னைப் போர்க்களமாகி விடுமோ என்ற தடுமாற்றம் அவரை ஆட்டியது.

'ஜானகிக்கு இப்படி ஓர் இலட்சிய வெறி பிடிக்கும் என்று தெரிந்திருந்தால் அவள் கழுத்தில் சிவலிங்கத்தின் தாலி ஏற விட்டிருக்கமாட்டேன். என் வாக்கை நம்பி பொன்னையா தன் புத்திரியை இவருக்குத் தானம் செய்ய நேரிட்டதே. இப்போ அவள் மனம் பேதலித்துவிட்டது. நான் என்ன பரிகாரம் செய்வது.'

தனது இலட்சிய மாணவி, சிவலிங்கத்தைத் தன் சித்தாந்த வழிக்கு இழுத்து விடுவாள் என்றே விரிவுரையாளர் நம்பியிருந்தார். ஆனுல், அது சிதைவுக்கு வழியாக அமைந்துவிட்டதே.

பெண்மனம் ஒருவனில் தாவிய பின் அவனை மீட்கவே முடியாது. அது முரண்பட்டவனிடம் சிக்கினுல் அவள் இறந்து கொண்டேயிருப்பாள். ஜானகியின் மனசு ஒன்றில் தாவி மற்றென்றுடன் இறந்து கொண்டிருக்கிறது.

தர்க்க வாதம் புரிந்தவர் ஜானகியை இரக்கம் தோய்ந்த கண்களால் நுழைவினுர். அப்போது அவர் இதயம் அவருள் பூகம்பித்துச் சாம்பியது.

இன்ஸ்பெக்டர் சிவலிங்கம், ஜானகியை அழைத்த குரல் அவர் காதில் அதிர்ந்து ஒலித்தது:

"ஏ, நாங்கள் நாளைக்கே யாழ்ப்பாணம் செல்ல வேண்டும். ஆயத்தம் செய்."

அவரில் எழுந்த கடுகடுப்பு, முறைப்பு, கண்டிப்பு விரி வுரையாளருக்கு முகத்தில் அறைந்தாற் போல் தொனித்த போதும், அவர் அதைக் கவனித்துக் கொண்டே ஒன்றும் கேளாதவர் போல் நின்றார்.

பொன்ராசா மட்டில் இன்ஸ்பெக்டர் மிகத் தீவிர நடவடிக்கையில் இறங்கப் போகின்றார். நான் சொன் னவை அவருக்கு ஆத்திரத்தை மூட்டியுள்ளன. அதுதான் இந்தக் கொதிப்பு.

இன்ஸ்பெக்டருக்கு உண்டான கடுகடுப்பை ஜானகி யும் கவனித்தாள். அவள் மனசு குழம்பி விட்டது. ரண சிகிச்சைக்குள்ளான புண் அழுந்துவது போல் அவள் நெஞ்சு புரைந்து நெருடிற்று. இனி 'சித்திரவதைக் காண் டம்' நடக்கப்போகிறது என்று ஜானகிக்குத் தெரியும். கணவரின் ஸ்பரிசம் இன்ப ஊற்றுக் கண்ணுவதற்குப் பதில் துன்ப ஈறலுக்குள் மாய்ந்து கொள்ளவிருக்கும் கோரத்தை அவள் மனசு கற்பனை பண்ணிற்று.

''என்ன ஊமையாட்டம் முழிசிக்கொண்டு பேசாமல் நிற்கிறாய்?''

''சரி போவது தானே. ஆனல்...''

''சொல்லவந்ததை விழுங்கி விட்டாயே, ஏன் அலகு பூட்டிக்கொண்டதோ?''

கேலியும், கிண்டலும், குரோதமும் அவர் வாக்கினில் தெறித்தன.

'அலகு பூட்டவில்லை. மனசுதான் அடங்கிக் கிடக்கி றது. அது ஒரு நாளைக்கு உடைந்து திறபடும்' என்று சொல்ல நினைத்தாள். ஆனல். சொல்லவில்லை.

'தனது உணர்வையே அடுத்தவன் கொள்ள விரும்பு பவன் பேசும் 'சுதந்திர'த்தில் தேங்கிய பயங்கரம் ஜன நாயகம் என்ற வார்த்தைக்குள் அமுங்குகிறது. இவர் சட்டத் துணுக்கின் கவசத்துக்குள் மனிதாபிமானத்தை எடை போடுவதும் அப்படித்தான்.'

இப்படித் தன்மனதில் தீய்த்துக் கொண்ட ஜானகி இதமாக வினவினுள்:

"அன்போடு அழைத்த விரிவுரையாளரிடம் மகிழ்வாக இரண்டு வார்த்தை பேசாமல், ஏன் கடுகடுத்துக் கொண்டு போக வேண்டும்?"

இன்ஸ்பெக்டர் எடுத்தாற்போல் கூறினுர்:

"அவர் உனக்கும் பொன்ராசனுக்கும்தான் விரிவுரையாளர், எனக்கல்ல."

ஜானகியின் நெஞ்சு கமாரிட்டது.

எவ்வளவு கொடிய வார்த்தை. ஒரு கணவரின் வாயிலிருந்து இந்தக் கிலிசகெட்ட சொல் வரலாமா?

ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு, முகஞ் சிலிர்க்க துடிதுடித்த வண்ணம் ஜானகி கேட்டாள்:

"இதென்ன கேவலமான பேச்சு, இது உங்களுக்கு மவுசா?"

"மவுசு பற்றியா பேசுகிருய்? வாயை மூடு. எல்லாம் எனக்குத் தெரியும்."

வாய் குழறி அழவேண்டும் போல் அவள் நெஞ்சு துருத்தி அந்தகாரித்தது.

"உங்களுக்கு என்ன தெரியும்?" என்று அங்கலாய்ப்போடு கேட்டாள் ஜானகி.

"வீட்டுக்கு வா, சொல்கிறேன்" என்ருர் இன்ஸ்பெக்டர்.

"இல்லை, இப்பவே சொல்லவேணும்."

"உமக்கு இப்ப சொல்லத்தான் வேணுமோ?"

"ஓம்"

"இந்தா" என்று பொரிந்து கொண்டே அவள் கன்னத்தில் 'சடா'ரென்று ஓங்கி அறைந்தார் இன்ஸ்பெக்டர்.

அந்த அடி விரிவுரையாளர் காதில் சளக் என்று கேட்கவே, அவர் அங்கம் பதற கிட்டவிரைந்து, இரக்கம் மேலிட விழித்துப் பார்த்தார்.

இன்ஸ்பெக்டர் வாய் மௌனித்துக்கொண்டது.

விரிவுரையாளர் கண்ணில் பட்டதும், ''ஐயோ எல்லாம் போச்சு'' என்று ஜானகி பெருங்குரல் வைத்து ஓவென்று அழுதே விட்டாள்.

அழுகைக் குரல் கேட்டுக் குசினியிலிருந்து கவடு பாய்ந்து ஓடி வந்த சரஸ்வதி, ''ஜானகி இதுக்குள்ளே என்ன நடந்தது? ஏன் இப்படிச் சத்தம் போட்டு அழுகிருய்''' என்று விடுத்துக் கேட்டாள். அவள் கண்களே கலங்கிக் குமிழிட்டன. இதயம் இடியேறு விழுந்ததுபோல் கமாரிட்டது.

''சரஸ்வதி நீ உள்ளே போய் உன்வேலையைக் கவனி. அது அவர்கள் குடும்ப விவகாரம்.''

விரிவுரையாளர் அங்கே நின்று வீடு அதிர உத்தரவிட்டார்.

மகுடியில் கட்டுண்ட நாகம் போல் தந்தையின் சொல்லில் சரஸ்வதி மெல்ல நகர்ந்தாள்.

இன்ஸ்பெக்டர் சிவலிங்கம் அப்பவும் பேசாமல் விறைத்துப் போய் நின்ருர். அவர் முகம் கொந்தளித்துச் சினந்து குதறிக்கொண்டிருந்தது.

விரிவுரையாளர் மிகப் பதனமாக முகம் மலரச் சிரித்துக் கொண்டு 'றீடிங் றூமு'க்குள் போய் எதையோ அவசரமாகத் தேடினர்,

அவர் தேடுகின்ற கடிதம் எந்தப் புத்தகத்துள்ளும் இருக்கவில்லை.

அவருக்கு முற்ருக 'விஷயம்' புரிந்து விட்டது.

உடனே அவர் நெஞ்சு மலாரடித்தது. கதிரையில் 'சக்' கென்று குந்தினர். நெற்றியில் கையை வைத்து யோசனையிலாழ்ந்தார். என்ருலும் இருப்புக் கொள்ளவில்லை. மண்டை பனங்காய் பிளந்தது.

'ரீடிங் றூமில்' எல்லாரும் சேர்ந்திருந்தும் பொன்ராசா எழுதிய கடிதம் ஒருவருக்கும் தெரியாமல் இன்ஸ்பெக்டர் கையில் எப்படிச் சிக்கியது?'

சொற்ப வேளையால் மௌனத்தைக் கலைத்தவராக, நிதானமாக எழுந்து, ''இன்ஸ்பெக்டர், உங்கள் உள்ளத்தில் ஏன் இப்படிக் கோபாக்கினி சீறிப் பாய்ந்தது என்பதை இப்போதுதான் தெரிந்து கொண்டேன்'' என்று சிரித்தபடி கூறினார் விரிவுரையாளர்.

இன்ஸ்பெக்டர் அப்பவும் ஒன்றும் பேசாமல் விரிவுரையாளரை ஒருவிதமாக முறைத்துப் பார்த்தார்.

''குற்றப் பிரிவில் வேலை செய்யும் ஒரு பொலிஸ் அதிகாரியான நீங்கள் சின்ன உண்மையைக் கண்டுபிடிக்க முடியாமலிருக்கிறீர்கள். இதை நினைக்க சிரிப்பாகவும் அவமானமாகவும் இருக்கின்றது'' என்று சொல்லிக் 'கலகல'த்துச் சிரித்தார் விரிவுரையாளர்.

''எந்த உண்மை?''

''அப்படிக் கேளுங்கள்''

ஏதோ புதிர் விடுபடப் போகிறது என்ற தோரணையில் அவரையே பார்த்துக் கொண்டார் இன்ஸ்பெக்டர்.

''எனக்கு வந்த கடிதத்தை எனது அனுமதியின்றியே நீங்கள் திருடியதும் போதாமல் அதன் உண்மையைக்கூட நீங்கள் கண்டுகொள்ளவில்லையே! அதைத்தான் குறிப்பிட்டேன்'' என்றார் விரிவுரையாளர்.

அவர் போட்ட குண்டு இன்ஸ்பெக்டர் நெஞ்சைதகர்த்தெறிந்தே விட்டது. விரிவுரையாளர்முன் அவர் ஓர் குற்றவாளிபோல் மருண்டு நின்றார். அவர் நிலை விரிவுரையாளருக்கு முற்றாகப் புரிந்துவிட்டது. விரிவுரையாளர் சிரித்துக்கொண்டே அழுத்தமாக மறுபடி கூறினார்:

''நான் இதைக் கூட ஒரு குற்றமாகக் கருதவில்லை. உண்மையைத் தெரியாமல் வீணே எதையோ கற்பித்துக் கொண்டு ஜானகியை அடித்தீர்களே, அதுதான் என்நெஞ்

சில் வருத்தமாக இருக்கிறது. உண்மையில் குற்ற உணர்வுகளையும், கபட நினைவுகளையும், தந்திர உபாயங்களையும் பொலிசார்தான் மக்களுக்கு ஊட்டுகின்றார்கள். அதனால்தான் பொலிசார் மக்களிடம் உண்மை 'அறிவதை' விட்டு, அதைக் 'கறந்து எடுக்க' பார்க்கின்றார்கள். மக்களோ நிரபராதிகள். அப்படித்தான் ஜானகியும் நிரபராதி.''

இன்ஸ்பெக்டர் ஒன்றும் புரியாமல் முழிசுவது விரிவுரையாளருக்கு விளங்கி விட்டது.

''அந்தக் கடிதம் பொன்ராசா உங்கள் ஜானகிக்கு எழுதியது என்று தானே நினைத்தீர்கள்?'' என்று 'பச்சை'யாக விடுத்துக் கேட்டவர், ''ஆனால், உண்மை அதுவல்ல'' என்றார்.

அவர் கண்கள் இன்ஸ்பெக்டரின் பதிலை எதிர்பார்த்துத் தவித்தன.

இப்படி விரிவுரையாளர் சொன்னதும், ஜானகி, சரஸ்வதி, இன்ஸ்பெக்டர் மூவரும் சமித்துப் போய் நின்றார்கள்.

ஜானகியின் நெஞ்சு 'படக் படக்' கென்று அடித்தது.

''அப்போ, உண்மை எது?'' என்று வினவினார் சிவலிங்கம்.

''சற்று வேளைக்குமுன் ஒரு கிழவன் — வெள்ளைச்சாமி வந்தானே, அவன் குழந்தை பேரும் ஜானகிதான். அந்தக் குழந்தை ஜானகி என் வீட்டில்தான் உதவிக்கு இருந்தாள். அந்தக் குழந்தை ஜானகியைத்தான் பொன்ராசா சுகம் விசாரித்து எழுதியிருந்தான். தொழிலாளர்களின் குழந்தையென்றால் அவனுக்கு உயிர்.''

தந்தையின் 'கற்பனை'யில் உற்பவித்த ஜானகியை எண்ணிய சரஸ்வதி முகத்தை வெறுப்பாக வைத்துக்கொண்டு 'தறுதறு'த்து முழிசினாள். மதிப்புக்குரிய

வர் வாய்மை பொய்க்கலாமோ? அவர் வாயில் பொய் வரலாமோ?

இன்ஸ்பெக்டர் ஜானகியை ஒரு குற்ற உணர்வோடு நோக்கினார்.

விரிவுரையாளர் தனக்குள் நெஞ்சு பூரிக்கச் சிரிக்கலானார்.

“மன்னிச்சுக் கொள்ளுங்கோ.”

வாய் புரைய இன்ஸ்பெக்டர் வினயமாகச் சொல்லிக்கொண்டே அந்தக் கடிதத்தை விரிவுரையாளரிடம் நீட்டினார்.

விரிவுரையாளர் கடிதத்தை வாங்கிக் கொண்டு ‘றீடிங் றூ’மிற்குள் சென்றார்.

சரஸ்வதி அவர் பின்னே அறைக்குள் சென்று தந்தையை வியப்போடு பார்த்தாள். அவளின் வியப்புக்குக் காரணம் அவருக்கு நன்றாகத் தெரியும். புத்திரியை நோக்கிக் கண்களைச் சிமிட்டியபடி சொன்னார்:

“நீ உனக்குள் அங்கலாய்ப்பது எனக்குத் தெரியும்.”

“ஏன் அப்படிப் பொய் சொன்னீர்கள்! ஜானகி என்றொரு பெண் குழந்தை எங்கள் வீட்டில் எப்போ இருந்தது?” என்று ஆசுவாசத்துடன் அடுத்தடுத்துக் கேட்டாள் சரஸ்வதி.

“உனக்கு இன்னும் விளங்கவில்லை. முதலாளித்துவ சமுதாயம் மனிதர்களைப் புத்தி பேதலித்தவர்களாகவும், போக்கிரிகளாகவும், வஞ்சகர்களாகவும் ஆக்கிவிட்டது. இங்கே யாரும் பொய் பேசுவதில்லை. பொய் பேசப்படுகின்றார்கள். எனவே, மூசுகிற மாட்டுக்கு இடிக்கிற மாடு போல் வஞ்சிக்கிறவனை வஞ்சித்து அடக்க வேண்டும். இப்படிப் பொய் சொல்லாவிடின் ஜானகியின் கதை எப்படி இருக்கும் தெரியுமா? நமது வள்ளுவனார் ‘வாய்மை’க்கு வகுத்த இலக்கணம் உனக்குத் தெரியும். எனது வாக்கும் அப்படி வாய்மைதான்.”

"வாய்மை என்பது யாதெனில், யாதொன்றும் தீமை இலாது சொலல்"

திருகி எடுத்த குறள் அவள் மனசில் பாராயம் செய்தது.

"அப்போ பொன்ராசா கடிதத்தில் குறிப்பிட்டது நமது இந்த ஜானகியைத்தானு?"

"ஆம், நமது ஜானகியைத்தான்" என்று அழுத்தமாகச் சொல்லிவிட்டு சிரித்தார் தந்தை.

சரஸ்வதி, தந்தையின் போக்கில் லயித்து அப்படியே ஸ்தம்பித்துப் போயிருந்தாள். பூகம்பம் நிகழ்ந்து ஓய்ந்ததுபோல் மனசு பிரவாகித்துப் போயிருந்தது.

'திருமணமான ஒரு பெண்ணைப் பற்றி பொன்ராசா அப்படி எழுதியிருக்கவே கூடாது. அது அபத்தமல்லவா?' தனக்குள் கூறிக்கொண்டே உள்ளே நுழைந்தாள் சரஸ்வதி.

ஜானகியின் எதிர்கால வாழ்க்கையை இதனுடன் ஒப்பிட்டுப் பார்க்க, அவள் நெஞ்சு பரிதவித்துப் பதறியது.

'பாவம், ஜானகி...... அந்தரப்படப் போகிறுள்'

## 7.

வெளியே சென்ற விரிவுரையாளர் இராமசாமி இன்னும் வீடு திரும்பவில்லை. இன்ஸ்பெக்டர் சிவலிங்கத்துக்கு அங்கு இருக்கவே பிடிக்கவில்லை. கடமை உணர்ச்சி அவரை உந்தியது.

'ஏதோ தலை போகிற காரியமாக அழைத்துவிட்டு, வேண்டாத விஷயங்களை அளந்து கொட்டின இந்த விரிவுரையாளரைப் பற்றி என்ன சொல்வது?'

இன்ஸ்பெக்டர் தனக்குள் நச்சரிக்கலானார்.

'ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி பண்ணும் இயக்கங்களின் சேட்டைகளைக் கைகட்டிப் பார்த்துக்கொள்ள வேண்டும்' என்று சொல்கின்ற விரிவுரையாளரின் 'பேதமை'யையும், பொன்ராசனின் போராட்டத்துக்கு ஆதரவு தந்து அவர் அரசியல் தத்துவ விளக்கம் கொடுத்த விதத்தையும் சற்று நேரம் மீட்டுப் பார்த்தார் இன்ஸ்பெக்டர்.

'பொன்ராசா தனக்காகப் போராடவில்லை; சகல மக்களுக்காகப் போராடும் சுத்த வீரன்.'

விரிவுரையாளர் கூறிய வார்த்தைகள் ஈட்டிகளாக வந்து அவர் நெஞ்சினை ஊடறுத்தன. தேகம் புரைந்து கனன்றது; இதய நாளம் துன்னிக் கெம்பிற்று; மனசில் தடுமாற்றம் உண்டானபோதும் இன்ஸ்பெக்டர் உறுதி குலையவில்லை.

சற்று யோசித்துப் பார்த்தார். 'இங்கே வந்திருக்கக் கூடாது' என்றே தோன்றிற்று. சிறு நரியின் தந்திரம் சிங்கத்தை மாட்டிவிட்ட சோக முடிவு அவருக்குத் தெரியும். அப்படி நரித் தந்திரத்துடனே விரிவுரையாளர் தன்னை அழைத்து அதிகாரத்தை இம்சிக்கத் திட்டமிட்டாரோ என்று ஒருகணம் நினைக்கலானார்.

பொன்ராசனின் போராட்டத்துக்கு நியாயம் கற்பிக்க வெளிக்கிட்ட அவர், ஜானகியின் கண்ணீர் தனது வெற்றியில் தங்கியிருப்பதாகச் சொன்னதன் அர்த்தம் அவருக்கு இன்னும் மந்தமாகவே இருந்தது. விடுத்துக் கேட்கவும் விரும்பவில்லை. அது 'இன்ஸ்பெக்டர்' அந்தஸ்துக்கே மதிப்பீனம். எனவே, தன்னுள் புழுங்கி அவிந்து கொண்டிருந்தார்.

அப்போது ஜானகியும் சரஸ்வதியும் அறைக்குள்ளே 'கலகல'த்துச் சிரித்துச் சம்பாஷிக்கின்ற ஒலிகள் அவர் காதில் விழுந்தன.

ஓட்டுவியளம் கேட்பது தன்மானத்துக்கே அவக்கேடு. ஆனால், துப்புத் துலக்க பொலிஸாருக்கு அதுவே கதி. அந்த லீர் சுவரோடு நின்று காதை நன்றாகத் தீட்டிக்கொண்டிருந்தார்.

"நீ கொடுத்து வைத்தவள். அதுதான் இந்த அழகான இயற்கை வளம் கொண்ட மலைநாட்டுப் பகுதியில் வாழமுடிகிறது" என்றாள் ஜானகி.

"இங்கு எங்கே இயற்கை அழகு இருக்கிறது? இந்த வளங்கள் கூட தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் கரங்கள் பட்டுத்தான் உயிர் பெற்று அழகாய்த் தெரிகின்றன. இதிலே வேடிக்கை என்னவென்றால், அந்தத் தொழிலாளர்களின் உரிமையை அபகரித்துக்கொண்டு வேறு ஓர் வர்க்கம் போலியாக வாழ்கிறது. நாங்களும் கிட்டத்தட்ட அப்படித்தான்; முழுதும் போலி வாழ்க்கை."

'போலி' என்றதும் ஜானகிக்குச் சிரிப்பு வந்தது.

"அப்படிப் பார்த்தால் ஒவ்வொருவனிடத்திலும் போலித் தன்மைகள் இருக்கின்றன. தங்கள் பலவீனங்களை மறைக்கின்ற பிரயத்தனங்களும், பலங்களை வெளிப்படுத்த முயல்கின்ற தீவிரமும் போலித்தனத்தின் ஓர் மறுமுகமான கிரியைகள் தாம். மலையகத்திலே போலிகள் உண்டு; மலைநாட்டிலே அப்போலிகள் இல்லை" என்றாள் ஜானகி.

ஜானகியின் புது வியாக்கியானத்தில் சரஸ்வதிக்கு வியப்புத் தட்டிற்று.

"மலையகத்துக்கும் மலைநாட்டுக்கும் என்ன வித்தியாசம்?" என்று கேட்டாள் சரஸ்வதி.

"மலையகம், மலைநாட்டுத் தமிழ்த்தொழிலாளர்களால் அவர்களின் கடும் உழைப்பால் சிருஷ்டிக்கப்பட்ட நகரம். இந்த நகரத்தில் 'குலி'யாக வாழும் பேர்வழிகளே 'மலையகத்தைக் கலையகமாக்குவோம்' என்று கூச்சல் போடுகிறார்கள். இந்தக் கூச்சல்காரர்களை உற்பத்தியாக்கியதும் இந்த

மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளர்கள்தாம். மரத்தின் கொப்பை அதன் வேரில் வைத்துத் தறிப்பது போல், இந்தத் தொழிலாளர்களைப் புறக்கணித்துக் கொண்டு இவர்கள் போடும் கூச்சல் தான் ஆபாசமாகவிருக்கிறது'' என்றுள் ஜானகி.

அதிக காலம் மலைநாட்டிலே வாழ்ந்துபழகிய தனக்கே அதன் தாற்பரியங்களைச் சரியாகத் தெரியாதிருக்க, யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்துகொண்டு ஜானகி இப்படி வியாக்கியானம் செய்த அற்புதத்தைக் கண்டு வியந்த சரஸ்வதி, ஜானகியை விடுத்துக் கேட்டாள்:

''அது சரி, நீ எப்படி இதையெல்லாம் சுளுவாகத் தெரிந்துகொண்டாய்?''

''உன்னுடன் நான் பேராதனை யூனிவர்சிட்டியில் வாசிக்கும்போது நீ புத்தகத்தைப்படித்து வாழ்க்கையைப் பார்த்தாய். நான் வாழ்க்கையை அனுபவித்துப் புத்தகத்தைப் பரீட்சித்தேன். இதுதான் வித்தியாசம்.''

ஜானகி யூனிவர்சிட்டியில் படிக்கும்போது ஓய்வு நேரங்களில் விடுதிக்கு வெளியே சுற்றுவாள். இதனால் மாணவர்கள் அவளைக் கிண்டல் செய்து கூறிய வசைமாரிகள் இன்னும் சரஸ்வதி காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

அவளுக்கு வந்த வசைகள் யாவும் தெரிந்தும் விரிவுரையாளர் இராமசாமி பூனைபோல் கண்ணை மூடிக்கொண்டிருப்பார்.

அந்தப் பேச்சு ஒருநாள் அவர் காதிலேயே விழுந்தது. அவளைவிட அந்த வசைகள் அவர் புதல்விக்கே அவமானத்தையும் ஆத்திரத்தையும் கிளறின.

'விரிவுரையாளர் வகுப்பிலே அழகாக வாழ்க்கைத் தத்துவம் பேசுவார். அதிலே மயங்கி வெறிகொண்ட மாணவர் கூட்டம் வெளியே வந்து காதல் சிட்டுகளாகப் பறந்து திரிகின்றது. பொன்ராசாவுக்குப் பிடித்த பித்து

ஜானகிக்கும் தொற்றிக்கொண்டது. இப்படி எத்தனை காதல் ஜோடிகள்...?'

மாணவர்களின் ரகஸ்ய மாநாட்டுப் பேச்சுக்கள் பின்பு சரஸ்வதி காதில் துண்டு துணுக்குகளாக விழுந்தன.

எத்தனை நாட்களாக இந்த இங்கிதைகளை மனசுள் மறைத்துக்கொண்டிருப்பது? பொன்ராசன் ஜானியை மட்டுமா வசைவுகள் தாக்குகின்றன? மதிப்பிற்குரிய விரிவுரையாளரான தந்தையையும் தாக்குகின்றனவே.

அவருடன் இதுபற்றிப் பேசுவது என்ற திடமான முடிவோடு வெக்காளித்து வந்த சரஸ்வதி, அவரின் புத்தக அறைக்கே பிரவேசித்தாள்.

புதல்வி முகத்தில் ஒருவித சினப்புத் தேங்கியதைக் கவனித்த அவர், ''சரஸ்வதி, என்ன முகம் ஒருமாதிரிக் கோணிப் போயிருக்கிறதே?'' என்று வினவினார்.

''உங்களைப் பற்றி வெளியே கேவலமான கதைகள் அடிபட வேண்டியதில்லை. ஆனால், அப்படி வந்துகொண்டிருக்கின்றன. இதற்கு என்ன அர்த்தம்?'' என்றாள் புதல்வி.

அவர் சிரிசிரியென்று சிரித்தார்.

''எனக்குத் தெரியும். சுத்த இலட்சியவாதிகளை அதே களத்தில் நின்று தாக்கமுடியாத தன்னிச்சைவாதிகள் போர்வீரன் கண்ணில் மிளகாய்ப் பொடி வீசுவதுபோல் அசிங்க வார்த்தைப் பாணங்களை ஏவிவிடுவார்கள். நாய்கள் குரைத்துச் சந்திரனில் மறு உண்டாவதில்லை. குரைக்கிற நாய்களே அனுங்கி இறக்கும். இலட்சியவாதிகள் மீது தன்னிச்சைவாதிகள் அபாண்டம் சுக்குவோர்க்கும் அந்த முடிவுதான்.''

''எல்லாருமே அப்படிப் பேசிக் கொள்ளும்போது...?'' என்று வினவினாள் சரஸ்வதி.

''ஒருவன் எல்லாருக்கும் நல்லவனாக முடியாது. நல்லவனாக இருக்கமுடியும். நான் நடிக்க விரும்பவில்லை. வர்த்

பேதத்திலே யுத்தகளமாகிவிட்ட சமுதாயத்தில் இரு கன்னைப் போராளிகளை ஒரு சேரத் தழுவமுடியாது. எதிரிகள் தூற்றும்போது நாம் சரியாக நடக்கிறோம் என்பதே அர்த்தம். வசைவுகள் முக்கியமல்ல, அவற்றைப் பாடுபவன்தான் முக்கியம்.''

''அவர்கள் எதிரிகளல்ல; உங்கள் மாணவர்கள் நாம்.''

''மாணவர்கள் வாழ்க்கை அனுபவங் குன்றியவர்கள். தூண்டிவிட்டால் அறிவு செத்து உணர்ச்சிப் பாகாகிவிடுவார்கள். உணர்ச்சிக்கு அடிமையானவர்களிடம் நிலையான கொள்கையை எதிர்பார்க்கலாமா? நிதானமாகச் சிந்திப்பவர்களும் உண்டு. அவர்களிலே பொன்ராசா, ஜானகியைக் குறிப்பிடலாம்.''

'பொன்ராசா—ஜானகி'

ஜோடி கட்டி அவர் வாய் இப்படி உச்சரித்தபோது மாணவர்கள் அவர் பற்றிக் கூச்சல் போடுவதில் அர்த்தமிருப்பதாகவே அவளுக்குப் பட்டது. அப்போது அவரில் ஒருவித வெறுப்பு அவளுக்கு ஏற்பட்டது.

''நீங்களும் பொன்ராசா, ஜானகியையே குறிப்பிடுகிறீர்கள். அப்போ மாணவர்கள் உங்களை நிந்திப்பது சரிதானே?''

''அது உண்மையல்ல. ஒரு காலம் பொன்ராசாவின் சித்தாந்தம் இவர்களை வழிநடத்தும்போது என்னை நிந்திப்பவர்கள் உணர்ந்துகொள்வார்கள்.''

''எப்படிக் கூறமுடியும்?''

''அவன் நீதிக்காகப் போராடுபவன்; ஓர் உடைப்பெடுத்த வெள்ளம்.''

''ஜானகி?''

''அவள் அதன் நீரோட்டம்.''

சரஸ்வதி தந்தையின் திக்ஷண்ய வார்த்தையில் கட்

டுண்டாள். இவற்றையெல்லாம் முன்கூட்டியே அவரால் எப்படி அறிந்துகொள்ள முடிந்தது என்று அதிசயித்தாள்.

* * *

ஜானகி, சரஸ்வதியின் கையை உலுப்பினாள்.

மலாரடித்து விழித்தவள் போல் அப்போது தான் அந்த இனிய நினைவுச் சுழிகளிலிருந்து விடுபட்டாள் சரஸ்வதி.

''என்ன சரஸ், கல்லுப் பிள்ளையாராட்டம் சமைந்து போய் விட்டாயே?'' என்று சிரித்தவாறு கேட்டாள் ஜானகி.

''பழைய நினைவுகள் இன்பமானவை. ஜானகி, நீ இங்கே இன்னும் ஒரு கிழமையாவது தங்கிவிட்டுத்தான் போகவேண்டும்...'' என்று குழந்தை போல் செல்லங் கொழிக்க வேண்டினாள் சரஸ்வதி.

''எனக்கு விருப்பம்தான். ஆனால், அவர்...?''

''ஏன் அவர் சம்மதிக்கமாட்டாரா?''

''அதுவும் அவரிடம்தான் கேட்கவேண்டும்.''

சுவரோடு ஒட்டி நின்ற இன்ஸ்பெக்டர் சிவலிங்கம், இருவரின் பேச்சு முனை மாறி வருவதைக் கவனித்துச் சற்று அசையலானார்.

விரிவுரையாளரின் குரல் அப்போது விருந்தைப் பக்கம் 'கணீ'ரித்துக் கேட்டது:

''என்ன இன்ஸ்பெக்டர், தனிமையாக நின்று ஏதோ யோசிக்கிறீர்கள். ஏன், ஜானகி எங்கே?''

இன்ஸ்பெக்டர் பதில் சொல்ல முன்பே ஜானகியும் சரஸ்வதியும் 'சடா'ரென்று கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தனர்.

இன்ஸ்பெக்டரைக் கண்ட ஜானகியும், சரஸ்வதியும் 'திக்'கிட்டுப் போய் ஒருவரையொருவர் 'தறுதறு'த்து முழுசிக்கொண்டே நின்றார்கள்.

'நாங்கள் பேசியவற்றை இன்ஸ்பெக்டர் ஒட்டுக்கேட்டிருக்கிறார். ஐயையோ நாங்கள் அப்படி என்ன பேசிக்கொண்டோம்?'

ஜானகியின் கண்கள் கலங்கின. அதைக் கவனித்த விரிவுரையாளரின் மனசு காரணமில்லாமல் அடித்துக்கொண்டது.

'என்ன விபரீதம் நடக்குமோ?'

நேற்று இன்ஸ்பெக்டருக்கு அழுத்தமாகச் சொன்ன வார்த்தைகள், இப்போது விரிவுரையாளர் நினைவில் கரைந்து நெஞ்சினில் சூழ்ந்தன:

'பொன்ராசாவை வலை போட்டுத் தேடும் உங்கள் முயற்சியில் வெற்றி உங்களுக்கானல், கண்ணீர் விடுவது ஜானகியாகத்தானிருக்கும். உங்களால் ஜானகி கண் கலங்கவில்லை என்பது உண்மை. ஆனல், அவள் வகித்துக்கொண்ட சித்தாந்த இலட்சியம் அலைவ வாட்டுகிறது.'

இந்த வாக்கியங்களை ஏன் முன்பின் யோசியாமல் சொன்னேன்?' என்று தனக்குள் குமுறலானர் விரிவுரையாளர்.

அப்போது தொண்டை 'முடுக்'கிட்டது:

'பாவம், ஜானகி துன்பமடையப்போகிருள்.'

## 8.

இன்ஸ்பெக்டர் சிவலிங்கத்தின் மனேநிலை ஜானகிக்குப் புரிந்துவிட்டது. அவரிடம் தனது அபிப்பிராயத்தை மனம் திறந்து கேட்கவே அஞ்சினுள். தன்னைப் பற்றிய அவர் கணிப்பு தலைகீழாய்ப் போவதைத் தெரிந்தும் தெரியாதவள்போல் பாசாங்கு செய்வதில் தனக்கு ஆத்ம

திருப்தியோ மனச் சுகமோ இல்லையென்று நினைத்தாள். என்றாலும், அப்படி ஒரு பாசாங்கு புரியாமல் அந்தத் திருப்தியோ மனச் சுகமோ இனி வரப்போவதில்லை என்பதையும் ஜானகி உணர்ந்தாள்.

கொஞ்ச நேரத்துக்கு முன் தானும் சரஸ்வதியும் அறைக்குள் பேசிக்கொண்ட சமாச்சாரங்கள் அவருக்குத் தன்னில் ஒரு வெறுப்பையும், தவறான கணிப்பையும் தோற்றுவித்திருக்கும் நிலையில், தான் கணவரோடு இதயத் தூய்மையுடன் சல்லாபிக்கமுடியாது என்ற உணர்வு தானாகவே ஜானகியை வாட்டி எடுத்தபோதும், அப்படி ஒரு தவறான கணிப்பீடு அவருக்கு உண்டாவதன் நியாயத்தை அவள் மனசு நிதானமாக நடுநிலை நின்று தராசு பிடித்த போது 'அது சரி'யென்று கூட அவளுக்குத் தோன்றியது.

தன்னையறிந்து தான் ஏற்றுக்கொண்ட சித்தாந்த இலட்சியங்களைப் பாராட்டுகின்ற பொன்ராசாவில் தனக்குண்டான ஒருவித மனப்பிடிப்பு— மன அழுத்தம், அது தனது இதயதாகத்தின் தணிப்புக்கு உவப்பாயிருந்த போதும், அந்த மனப் பிடிப்பே அவள் நெஞ்சில் ஒரு போர்க்களமாகிவிட்டதை ஜானகி உணர்ந்தாள். எனினும், அந்த இலட்சியத்திற்குத் தூண்டுதல் புரியமுடியாமல் பொன்ராசாவின் அணைப்பு அவளுக்கு இல்லாதது அவளுக்கே ஒரு வினையாகியதை அவள் தெரிந்த பின்னும், அந்த வினையின் முனையாகத் தனது இதயத்தை அர்ப்பணிப்பதில் தனது ஆத்ம ஈடேற்றமே அடங்கியிருக்கிறது என்ற ஓர் விசித்திரமான ஊகம் அவளிடம் தலைதூக்கிற்று.

தன் இச்சையுணர்வின் மேம்பாட்டில் வாழ்க்கையமைத்துப் 'பெரும் அந்தஸ்து'த் தேட முனையும் இன்ஸ்பெக்டர் சிவலிங்கத்தையும், பொதுஜன வாழ்க்கைச் சிறப்புக்குத் தன்னை ஆளாக்கி, வாழ்க்கையைத் தியாக வேள்வியாக்கிக் கொண்டு ஏகாந்த ஜீவியாக-ஓர் உலகளா

விய தோழனாகத் திகழும் பொன்ராசாவையும் அவள் மனசு எடை போட்டபோது, தான் வரித்த இலட்சியத்தினால் தனக்கு ஏற்பட்ட அந்தகார வாழ்க்கை, தன்னை மேலும் புடமிட உதவுமென்று திடங்கொண்டாள் ஜானகி. ஆயினும், கன்னை சாராத நடு மைய நிலையான தனது தத்தளித்த வாழ்க்கை அலையாயும் புகை மண்டலம் போல் அமைந்ததையும், அந்த வாழ்க்கையே கொதி உலையாகக் கெந்தகிப்பதையும் உணர்ந்தாள்.

அவளின் உணர்வும் மனநிலையும் அவளுள் சுமைகளாக அழுந்துகின்றனவே தவிர, அவற்றின் தாற்பரியங்களை ஏற்ற ஒரு பந்துவிடம் பரிமாறி, அப்படி ஒரு நிலையிலே தன்னால் சாந்தியடைய ஒரு வாய்ப்பு இல்லையே என்ற ஏக்கம் ஜானகியின் நெஞ்சினைத் தாக்கியது. அப்போது அவளின் ஆதர்ஸமாகவிருந்த விரிவுரையாளரோ பொன்ராசாவோ கூட அவள் மனசின் துயரங்களுக்கு ஆறுதலளிப்பவர்களாகத் தோன்றவில்லை.

''பச்சோந்திகளின் இலட்சியம் வானவில் போன்றது. நேர்மை பிறழாதவன் இலட்சியமோ சூரியகாந்தியாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும். அதன் காந்தத்திலே போலிகள் கருகிவிடுகின்றன'' என்று பொன்ராசா சொல்லியிருந்தான்.

'அது உண்மையானால், நான் கொண்ட தூய்மையான இலட்சியத்தில் இப்படி ஏன் இருள் மண்டிக் கிடக்கிறது?' என்று சாம்பி வெதும்பினாள் ஜானகி.

'பொன்ராசா, நீ என் வாழ்க்கையில் சந்தித்திருக்காவிட்டால்...?'

அவள் மதியை மீறி எழுந்த உணர்ச்சி, அவள் அங்கமெங்கும் புரைந்து அவளுள் குமுறியது. மிருதுவான அவள் பூத்தேகம் வாடிய பச்சைத் தண்டாக நைந்து உருக்குலைய, ஓர் சின்னஞ் சிறு குழந்தை போல் சதிரம் கமற, நெஞ்சை அழுத்திப் பிடித்துக்கொண்டு, குலுங்கிக் குலுங்கிக் குமுறிக் குமுறி அழுதாள் ஜானகி.

அழுது தீர்ந்த தியக்கம் அவளை ஆட்கொண்டது.

தன் மனம் அவனில் தாவியபோதும், அவனுடன் இணையவிடாமல் தன்னைத் தடுத்த செருக்கும்,பட்டதாரி என்ற கிறுக்கும் சேர்ந்து தன்னை ஓர் தன்னிச்சைவாதியாக்கிவிட்டதை ஜானகி இப்போது புரிந்து கொண்டாள். என்றபோதிலும், தான் வரித்துக் கொண்ட லட்சியத்தைப் பொறுத்தவரை தான் இன்னும் முதலைப் பிடியில் இருப்பதாகவே தோன்றிற்று. ஆனல், தனது அந்தராத்மாவில் எழுகின்ற புதிய சிந்தனைகளைத் தன்னுள்ளே புதைத்துப் புழுங்குவதைவிட, அவற்றைத் தூய்மையாகவோ சுதந்திரமாகவோ வெளிப்படுத்த முடியாவண்ணம் தன் வாழ்க்கை 'இன்ஸ்பெக்டர்' என்ற சிவலிங்கத்துடன் இணைந்ததை நினைத்தபோது, தனது நிலை செங்கதிரில் மயங்கி நெருப்பில் கை வைத்த சிறு பிள்ளை போலாகிவிட்டதே என்று வருந்தினாள்.

எந்தக் கோணத்தில் நின்று எடையிட்டபோதும் அவளுக்குச் சரியான ஒரு முடிவு புலப்படுவதாகவே யில்லை.

வறுமையே தெரியாமல் வாழ்ந்த தனக்கு அந்த வறுமையின் கோரம் பெரும் பூதமாகத் தனது வீட்டிலேயே நிகழ்கின்ற ஓர் உணர்வை பொன்ராசா தனக்கு ஊட்டினான் என்பதையும், அப்பால் தானே இந்தப் பூதத்திற்கெதிரான போராட்டக் களத்தில் இலட்சிய வேட்கையோடு தாவிய நிகழ்ச்சிகளையும் நினைத்தபோது ஜானகிக்கு அவையெல்லாம் பெரும் வியப்பாகவே இருந்தன. என்ருலும், அவளின் இதயம் அப்படி ஓர் இலட்சிய தாகத்தோடு தேசாந்திரியாகப் போராடும் பொன்ராசாவை உருவாக்கிய விரிவுரையாளர் இராமசாமியை வாழ்த்திக் குரு தரிசனம் புரிந்தது.

'சாந்தமான குருமூர்த்தி.'

சதை திணைத்த பெருப்பினில் வாளித்துவிட்ட சிலை போல் 'மொழு மொழு'த்த சர்வாங்கம், பிளந்த மாம்பழ

முனைக் கீறுகளான மேவு சொண்டுகள், சதாவும் உதடு களில்தேங்கிய புன்முறுவல்,எடுப்பானசல்லாபப் பார்வை, அகன்ற ஏறு நெற்றி,திட்டு முனையான பாற்சங்கு மூக்கு, வழித்த தலைப் புடங்கில் விரல் சுற்றி முடித்த புளியுருண் டைக் குடுமி,தீக்ஷண்யம் நிறைந்த ஞானக் கண்கள், அழகு பிம்ப வட்ட உருவ சாது முகம்— இத்தனை சாந்த சுரூபி யான விரிவுரையாளர் இராமசாமி நெஞ்சில் இப்படிக் கொழுந்துவிட்டெரியும் இலட்சிய நெருப்பு எப்படியெல் லாம் பிரகாசிக்கின்றது என்பதை ஜானகியால் கற்பனை பண்ணவே முடியவில்லை.

அவரை நினைத்தபோது மனம் ஒடுங்கி நெஞ்சினுள் பூஜிக்கின்ற ஓர் உணர்வு அவளில் மேலிட்டதும் அவர் சொன்ன அறிவுரை நினைவில் வந்தது.

'மனிதனை மனிதன் ஒருபோதும் பூஜிக்கக்கூடாது. மனிதனைப் பூஜிப்பவன் அவன் அடிமையாகிவிடுவான். அடிமை மனத்திலான தோழமை சுதந்திரக் கருத்து களுக்கே விலங்கிடும். நீங்கள் என்னுடன் பக்தியாகவல்ல; தோழமையுடன் பழகவேண்டும்.'

'தோழமையா...?அப்படியாயின், பொன்ராசா என் தோழனு?'

அவள் தன்னுள் கிளப்பிய வினவுக்கு அவள் மறுத்தோ ஒத்தோ பதில் சொல்லத் தெரியாமல் தடுமாறி ஞள். ஆனுல், அந்த வாக்கிலே உலகத்து மனித குலத்தை ஒரே வர்க்கமாகப் பார்க்கின்ற புனித நினைவும், ஆத்ம உற வும், இனிய சிந்தையும், தூயஅன்பும் அவளுக்குத் தெரிந்த் தன. இவ்வுணர்வுகள் அவளுள் இதம் கொள்வதை அக் கணமே உணர்ந்தாள்.

'பொன்ராசா என் தோழனுயின், காதல்...?'

சிவலிங்கத்தின் கருத்திலே தனக்குண்டான முரண் பாடு வலுவாக முற்றியிருந்தும், வாழ்க்கை உறவில் என் றும் உடைவு ஏற்பட்டதில்லை என்பதை அவள் மனசு சற்றுவேளை தராசு பிடித்தது.

'இந்தத் தாம்பத்திய உறவில் காதல் இல்லையா?'

பூதாகரமான இந்தக் கேள்விக்கு அவள் விடை தெரியாமல் தத்தளித்தாளாயினும், அந்தக் கேள்வியில் சிவலிங்கத்தின் உறவைப் பொறுத்து அதில் ஏதும் தெய்வீகமோ, காந்த சக்தியோ, பூரணத்துவமோ இருப்பதாக அவளுக்குத் தோன்றவில்லை. அப்போது ஜானகி தனக்குள் தீய்ந்து கறுவினாள். எனினும், 'காதலின் பிணைப்பு வர்க்க பேதமற்ற சமத்துவ வாழ்க்கை அமைப்பில் தான் நிதர்சனமாகின்றது' என்ற பொன்ராசாவின் கூற்றை வாய் விட்டு வாயினிக்கச் சொல்லியபோது, அந்த வாழ்க்கை—அந்த உறவு—அந்தத் தாம்பத்தியம் தனக்குக் கிட்டாமல் விட்ட ஒரு தாபம்—ஓர் அந்தகாரம் அவளைச் சூழ்ந்து வதைப்பதை உணர்ந்தாள்.

நெஞ்சு துருத்தி எழுந்த அழுகையின் காந்தாரம் அவள் இதயத்துள் 'ஹோ'வென்று பற்றி எரிந்து விளாசுவது போல் குமைந்து சாம்பியது.

''ஐயோ என் அம்மா, நான் என்ன கறுமத்துக்குப் பிறந்தேன்?''

முகத்தைப் பொத்திக் கொண்டு, தேகம் குல்லிட, வீரிட்டுக் குழறினாள் ஜானகி.

பின்புறமாக ஏதோ ஓர் அரவம்— ஆஜானுபூதியான தோற்றம் அசையும் பிரமை தட்ட, ஜானகி உடனே தனது சேலைத் தலைப்பால் வதங்கிய முகத்தைத் துடைக்க எத்தனித்தாள் அசையாமல் வந்த உருவம் 'திடீ'ரென்று அவள் கண்களிரண்டையும் பின்பக்க வாட்டாக நின்று கரங்களால் அப்பிக்கொண்டு, ''எங்கே, நீ சமத்தென்றால் யார் என்று சொல்லு பார்க்கலாம்?'' என்று கிளிக் குரலில் கேட்டது.

''சரஸ்வதிதான். எடு கையை'' என்று சோர்ந்த குரலில் சொன்னாள் ஜானகி.

துள்ளிக் குதித்துக்கொண்டு ஜானகி முன்னே 'கிளுகிளு'ப்போடு நகைத்து வந்த சரஸ்வதி, ஜானகியின் முகத்

தைக் கண்டு ஏங்கிய நெஞ்சினளாய் மனம் கரைந்து வெதும்பினுள்.

"ஜானகி, இதென்ன கண்ணீர், முகமெல்லாம் அதைத்துப் போயிருக்கிறதே, ஏன் உந்த அழுகை?" என்று பதை பதைத்துக் கேட்டாள்.

இத்தனை வேளையும் மறைந்திருந்து விம்மிய ஜானகியின் நெஞ்சு உடனே மடை திறந்த வெள்ளம்போல் பதறியது. சரஸ்வதியின் கரங்களைச் 'சடா'ரென்று தாவிப் பிடித்துக்கொண்டு, நெஞ்சில் கேவிய விம்மல் எக்கித் தாவ ஏகாந்தத்தில் கதறும் குழந்தையைப் போல் கேவிக் கேவி அழுதாள் ஜானகி.

"சீச்சீ, ஜானகி நீ ஓர் இன்ஸ்பெக்டரின் மனைவி. அப்படிப்பட்டவள் கோழைத்தனமாக அழலாமா?"

சரஸ்வதி ஜானகியைச் சாந்தப்படுத்தினுள். ஆனல், அந்த வார்த்தையே ஜானகியை ஆகவும் தாக்கிற்று.

"சரஸ்வதி, அப்படி ஒருவருக்கு வாழ்க்கைப்பட்டதால் தான் வாழ்க்கைத் துணையே இல்லாமல் இப்படிக் கண்ணீர் விடுகிறேன். டியே சரஸ், உனக்கு வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன்; நான் நினைத்ததோ எதிர்பார்த்ததோ எதுவும் எனக்குக் கிடைக்கவில்லையடி" என்று சொல்லி 'ஓ'வென்று வாய்விட்டே அழுதாள் ஜானகி.

இரண்டு தோழிகள் கண்களும் துவாளித்து கண்ணீராகத் தேம்பிக் கிடந்தன.

ஆறுதல் கூறவுந்த தன்வாயில்பிறிய அந்த வார்த்தை ஜானகியைத் துயரத்திலாழ்த்தியதாயின். ஜானகி எப்பவோ அந்த நினைவிலேயே அழுந்தியிருப்பாள் என்று யோசித்த சரஸ்வதி அவளின் இன்பம் செத்த தாம்பத்திய வாழ்வைத் தெரிந்தும் தான் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாதென நினைத்துத் தன்னையே நொந்து தனக்குள் சாடி வெதும்பினுள்.

ஜானகியைத் தேற்றிச் சமாதானப்படுத்துவதும் இந்நிலையில் அவளை ஏமாற்றுவதாகவேபட்டும். இனிமேல் தெம்பு தரும் வார்த்தைகள் ஜானகியின் நெஞ்சுப் பாரத்தைக் குறைக்கா என்று தெரிந்தும் பெண்மையின் இயல்பான மன இரக்கம் பெண் பிறவியான சரஸ்வதி நெஞ்சில் சுரங்கலூற்றாய் ஊனித்தது. ஆயினும், அந்தத் தாய்மையின் சக்தியும் அரவணைப்பின் கரங்களும் அப்போது செயலற்றுப் போய்க் கிடந்தன.

"ஜானகி..."

அப்போது ஒரு குரல் கனிவாக அழைத்துக்கேட்டது. சரஸ்வதி திரும்பிப் பார்த்தாள்.

விரிவுரையாளர் இராமசாமி விறாந்தையில் நின்றுகொண்டிருந்தார்.

"ஜானகி, அப்பா கூப்பிடுகிறார் வா."

சரஸ்வதி அழைத்தாள். வரண்ட முகத்தைச் சேலையால் துடைத்துக்கொண்டு பதனமாக நகர்ந்து தலையைக் கவிழ்த்தியபடி சென்றாள் ஜானகி.

"என்ன சங்கதி. ஏன் முகத்தில் வாட்டம்?" என்று சாடையாக வினவினார் விரிவுரையாளர்.

"ஒன்றுமில்லை."

"ஒன்றுமில்லாமல் யாரும் கண்ணீர் விடுவதுண்டா உண்மையைச் சொல்லு: ஏன் அழுதாய்?"

அவர் கேட்டு வாய் மூடவில்லை. ஜானகியின் கண்களில் கண்ணீர் புரைந்து வழிந்தது.

"ஜானகி, என்னிடம் பயின்ற மாணவர்கள் கோழைகளல்ல: திடகாத்திர வீரர்கள். அவர்கள் ஒருபோதும் அழக்கூடாது. பேதைகள்தாம் அழுவார்கள். நீ அப்படி ஒன்றும் பேதைப் பெண்ணல்லவே?" என்று கேட்டுவிட்டு அவள் முகத்தை உற்றுப் பார்த்து "உசாராக இரு. உனக்கு ஒரு செய்தி சொல்லப் போகிறேன்" என்றார்.

'என்னது?' என்று கேட்பதைப் போல் தலை நிமிர்த்தி அவரைப் பார்த்தாள் ஜானகி.

''புறப்படமுன் மலைநாட்டுப் பிரதேசங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு சரஸ்வதியுடன் யாழ்ப்பாணம் செல்லலாம். இன்ஸ்பெக்டரும் சம்மதித்துவிட்டார்.''

சரஸ்வதி வாஞ்சையோடு ஜானகியைப் பார்த்தாள். இன்ஸ்பெக்டரே சம்மதித்துவிட்டாரென்றால் சொல்லவா வேண்டும்?

மலைகளில் கவிந்த பனிப்புகார் நீவுவது போல் அப்போது ஜானகியின் மனசு வெளுத்துக்கொண்டு வந்தது. அதைக் கவனித்த சரஸ்வதி கேட்டாள்:

''ஜானகி, என்ன பேசாமல் நிற்கிறாய்? சம்மதந்தானே?''

''ஓம்.''

''பச்சைக் கள்ளி.''

சரஸ்வதி சொக்கையில் கிள்ளினாள்; ஜானகி 'குமுக்' கிட்டுச் சிரித்தாள்.

இதயம் பூரிக்க இரு புதல்விகளையும் பார்த்துக் கொண்டே கண் சிமிட்டினார் விரிவுரையாளர்.

## 9.

மலையகச் சாரல்களையே கண்டு களிக்கின்ற வாய்ப்பு இனிமேல் தனக்குக் கிட்டாமல் போகலாம் என்று நினைத்த ஜானகி, 'இந்தச் சந்தர்ப்பத்தை முற்றாகப் பயன் படுத்தத்' திட்டமிட்டாள்.

மலைநாட்டைப் பார்த்து ரசிக்கப் போகின்ற நினைப்பில் அவள் அன்று இரவு முழுவதும் கண்ணுறங்காமலிருந்தாள். முன்பு அந்தப் பிரதேசங்களைப் பல தடவைகள் சுற்றிப் பார்த்தும் அலுப்புக் கொள்ளாத அவள் மனசு மேலும் அதற்காகவே தாவிற்று.

அப்பிரதேசத்தின் உயர்ந்த மலைகளும், மலைகளை மருவிச் செங்குத்தாக விழுகின்ற பள்ளத்தாக்குகளும், அருவி ஓடும் நீரருவி வாய்க்கால்களும், பனி மண்டலங் கவிந்து நீவும் பாங்கில் பசுமை கொழித்துத் துலங்கும் செடி, கொடி மரங்களும் ஜானகியின் மனசைக் 'கிளுகிளு'க்கச் செய்தன.

வெண் நீல வானத்து வர்ண ஜால மின் ஒளிக்கீறுகள் மலைச்சாரல்களில் பம்மிக் கிடக்கின்ற தேயிலைச் செடிகளில் தவழ்ந்தன. கன்னிக் கொழுந்துகள் காற்றினில் கலகலத்து அசையும்போது, வெள்ளிகள் மின்னும் சாடையில் குமரிகளின் கன்னச் சோணைகள் போல் 'குளுகுளு'த்து மினுங்கின. நாலா பக்கங்களும் திரையிட்டுக் கவிந்த பனிமூடம், வான மண்டலந்தொட்டு மலையடிவாரங்களீறாக முகிலுறைந்த ஏக நீல வானம்போல் பூமி பரவ வெளுத்துக் கிடந்தது.

எங்கோ தொலைதூரத்து லயங்களில் ஆட்டு மந்தைகளும் மாட்டுக்கன்றுகளும் ஈடுறுண்டு கதறிச் சந்தடி செய்கின்ற தொனி கேட்டது. இருந்தாற் போல் நாய்களின் குரைப்பும் ஊளையும் காதில் விழுந்தன. மிருக ஜந்துக்கள் அலறும் இரைச்சல்கள் அடிக்கடி ஜானகியின் காதுகளை நச்சரித்துக்கொண்டிருந்தன.

மேடு பள்ளமான இந்த மலைநாட்டில் அந்த மனிதர்கள் போடும் குரல்கள் எத்தனை ரகமானவை. இதன் மலைச்சாரல்கள் போலவே அங்கேயுள்ள ஜீவாற்றுமாக்கள் சலித்துக் கத்துகின்றார்கள். அந்தக் கூக் குரல்கள் அவள் செவிகளில் அவலமாகவே கேட்டன. அவர்களின் இந்தக் கோலத்திற்கான காரணங்களை முன்பு ஒரு தடவைபொன்

ராசா அவளுக்கு விளக்கியிருந்தான். என்றாலும், அவன் கூறிய கதைகள் நினைவுறுந்துவிட்டன.

அந்த நினைவலைகள்...?

குளுமையும் பசுமையுமான அந்தக் காட்சிகளை மீறிய அவர்களின் மாட்டுத் தொழுவ வாழ்க்கை அவள் நெஞ்சை இப்பவும் அழுத்திற்று. தலவாக்கொல்லை, உச்சி மலையில் நின்று பார்த்த கோலங்கள் திரை நீங்கியது போல் அவளுக்குப் பளிச்சிட்டன. லயங்களிலிருந்து எழும் சந்தடிகளும் கூச்சல்களும் அலுத்துப்போன ஜீவாற்றுமங்களின் ஏக்கக் குரல்களாகவே கேட்டன.

தொழுவங்களில் அடைபட்ட வாயில்லாச் சாதிகள் போல் லயங்களில் அவர்கள் நிறைந்து தவிக்கிறார்கள். மலைச்சாரல்களை மேவிய தேயிலைக் கொழுந்துகள் வானம் நீலின பச்சை வர்ண மண்டலமாகத் தோன்றின. 'உச்சி மலை தொட்டு அடிவாரமடங்க அலை பாய்ந்து விரிந்து கிடக்கின்ற தேயிலைக் கொழுந்துகளும், கண்ணெறி தூரங்களில் சடைத்து மதாளித்திருக்கின்ற சோலைகளும் இந்த மனிதர்களின் உழைப்பால் வளங்கொழித்தன' என்று பொன்ராசா சொன்னபோது ஜானகி நம்பவில்லை.

"பூமியில் இறந்துகொண்டிருக்கும் மனிதர்கள் மோட்சத்தின் கோபுரங்களைக் கட்டி எழுப்புகின்றார்கள் என்றால் யார்தான் நம்புவார்கள்?" என்று அவனிடம் கேட்டாள் ஜானகி.

அதற்கு வரலாற்று ரீதியாகப் பதிலளித்த பொன்ராசா, அந்தக் கோபுரங்களில் வாழ்கின்ற தோட்டச் சொந்தக்காரர்- 'வெள்ளைத்துரை' மார்கள் எப்படித் தனியுடைமையாதிக்கவாதியானார்கள் என்பதையும் விளக்கினான். அவள் அந்த 'அற்புதக்' கதைகளையெல்லாம் நெட்டுருவிக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

அப்போது லயங்களில் அடைந்து கிடக்கின்ற சிறுவர்கள் இரை காத்துக் கதறும் பட்சிகளைப்போல் தங்கள்

தாய்மார்களின் வருகைக்காக வாய் பிளக்க நிற்கின்றனர். தங்கள் பிஞ்சுச் சதிரங்கள் கூனிக் குறுக, குரல்கள் கேரும்வரை அவர்கள் ஓலம் வைத்து அழுகின்ற தொனியின் கதறுவதுபோல் மலைகளை ஊடறுத்துக் கேட்டன.

"ஐயோ, பார்க்கப் பரிதாபமாக இருக்கிறதே, இவர்களுக்கு ஒரு விடிவு கிடையாதா?" என்று அங்கலாய்த்தாள் ஜானகி.

"ஜானகி, இவர்களின் கோரமான வாழ்க்கைக்கு, உம்மைப்போல் சில பெரிய மனிதர்களும் 'பரிதாபப்' பட்டதுதான் காரணம். மனிதர்களில் பரிதாபப் படுபவன் ஒருபோதும் மனிதர்களின் கண்ணீரைத் துடைக்க மாட்டான். அவர்களுக்காக, அவர்கள் விரோதிகளுடன் போராடுகிறவன்தான் அதைத் துடைத்தெறிவான்" என்றான் பொன்ராசா.

அதன் அர்த்தம் ஜானகிக்குப் புரியவில்லை.

எத்தனையோ மலைநாட்டு-யாழ்ப்பாண இலக்கிய ஜாம்பவான்கள் மார்தட்டிக்கொண்டு தொழிலாளர்களின் கோர வாழ்க்கையை 'வைத்துக் கதை பண்ணி' குடக்கணக்கில் கண்ணீர் கொட்டி, கத்தைகத்தையாக எழுதிக் குவித்த படைப்புகளை அவள் நினைவு கூர்ந்தாள்.

"இவர்களின் பரிதாபகரமான வாழ்க்கையைப் படம் பிடித்து எத்தனையோ மலைநாட்டு-யாழ்ப்பாண எழுத்தாளர்கள் இலக்கியம் சிருஷ்டித்துப் 'புகழ்' பெற்றிருக்கிறார்களே, இந்த எழுத்தாளர்கள் நெஞ்சிரக்கமற்றவர்களா?"

ஜானகி ஈழத்தின் 'புகழ்பெற்ற' அந்த எழுத்தாளர்களைக் குறிப்பிட்டபோது பொன்ராசா கைகொட்டிக் கேலியாகச் சிரித்தான்.

'ஏழைத் தொழிலாளர்களைச் சுரண்டி வாழும் முதலாளித்துவம் அவர்களுக்கு மாட்டிய கை விலங்குகளை ஓடிக்கத் திராணியற்று அவர்களுக்குச் சரியான வழி காட்டத் தெரியாத இந்நாட்டின் பல எழுத்தாளர்கள், கலை இலக்கியத்தின் பெயரால் ஜாதி, இன, மத, காம,

இதிகாசப் பிரபந்தங்கள் பேசி இலக்கியத்தின் தரத்தையே சந்தைக் களமாக்கி, இளஞ் சந்ததியையே நாசமாக்கிவிட்ட அந்தப் பிரமாக்கள்...'

இத்துடன் அவன் சிந்தனை தடைபட்டது. அவன் நெஞ்சு நீறுபூத்த நெருப்பாக அகோரித்தது; கோபாவேசந் துன்னிக் கண்கள் சிவந்தன. சிலிர்த்த முகத்தைத் தடவிக்கொண்டு அவன் சொன்னான்:

"இவர்கள் இந்நாட்டு எழுத்தாளர்களல்ல; இந்நாட்டு மக்களுக்குள்ளே முளைத்த பெருந் துரோகிகள். இத்தகையோரால்தான் இந்நாட்டு மக்கள்-குறிப்பாக மலைநாட்டுத் தொழிலாளர்கள் கானலை நீரென்று நம்பி ஓடுகின்ற மான்குட்டிகள்போல் அதல பாதாளத்தில் விழுந்து அன்றாடம் செத்துக்கொண்டிருக்கின்றார்கள். இந்த எழுத்தாளர்கள் எடுத்தது பேனுக்களல்ல; தொழிலாளர்கள் நெஞ்சுகளிலே பாய்ச்சுகின்ற ஈட்டிகள்."

'ஈட்டிகள்' என்ற வசனம் ஜானகி நெஞ்சில் ஈட்டியாகவே பாய்ந்தது. இப்படி மானிதம் செத்த எழுத்தாளர்களும் இங்கு இருக்கிறார்களா? அவளால் கற்பனை பண்ணமுடியவில்லை.

"நீங்கள் ஓர் இயக்க இயல்வாதியாகவிருந்து கொண்டும் கொஞ்சமும் 'பொறுப்பி'ல்லாமல் பேசுகிறீர்கள். அவர்களும் மக்களுக்காகத்தானே எழுதுகின்றார்கள்?"

"நான் ஓர் இயக்க இயல்வாதியாகவிருப்பதால்தான் 'பொறுப்போடு அடித்து'ச் சொல்லுகிறேன். அவர்கள் கண்களில் சுரண்டுகின்ற முதலாளித்துவக் கும்பலும் 'மக்கள்'தான்; சுரண்டப்படும் தொழிலாளர்களும் மக்கள்தான். அந்த எழுத்தாளர்களோ அந்த 'மக்களு'க்காக, இந்த 'மக்களு'க்கு எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இப்போ புரிகிறதா?" என்று வினவிய பொன்ராசா, அந்த வரிகளையே உற்றுப்பார்த்தபடி, "எழுத்தாளன் பணி மண்ணையும் மக்களையும் சித்திரிப்பதல்ல.

மண்ணின் தோற்றத்தையும் அதிலே மக்கள் வாழும் முறையையும் காட்டி உன்னத வாழ்வுக்கு வழி கூறுபவனே எழுத்தாளன். அவன்தான் மக்கள் எழுத்தாளன். பாரதி மக்களைப் பற்றிச் சொல்லிக் கண்ணீர் வடிக்கவில்லை; மக்கள் எப்படி வாழவேண்டும் என்பதை ஆவேசமாக இடித்துச் சொன்னான். அதனால்தான் பாரதி மக்கள் கவிஞனானான். யார் மக்கள் கலைஞன் என்பதைக் கண்டு கொள்ள முடிகிறதல்லவா?''

ஜானகி 'ஆம்' என்று கூறுவதுபோல் சொண்டுகள் குவித்துச் சிரித்தாள். இதழ் விரிந்த பூவைப்போல் அவள் முகம் மலர்ந்தது. கண்கள் அவனில் மேய்ந்தன.

பொன்ராசா புரியும் தர்க்க வாதங்களும் தத்துவ நீதி விளக்கங்களும் அவளை ஆகர்ஷித்தன. அவனின் புத்திக் கூர்மையை நினைக்க அவளுக்கு வியப்பாக விருந்தது. அவள் அவனை ஏற இறங்கப் பார்த்தாள்.

''நீங்கள் ஒழுங்காகப் படித்தால் நிச்சயம் ஒரு கலாநிதியாக வருவீர்கள்?''

பொன்ராசா சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?''

''பெரும்பாலும் கலாநிதிகள் புத்தகங்களில் தத்துவத்தைத் தேடி அதையே புடம் போடும் கிளிப்பிள்ளைகள்; வாழ்க்கையனுபவத்துத் தத்துவச் சிருஷ்டிப்பாளர்களல்லர். எனவே, அவர்கள் வாழ்க்கை நடைமுறை இயக்கங்களுக்குப் புறம்பாகி மண்ணில் மிதியாமல் வானத்தில் சஞ்சரிக்கிறார்கள். இந்நாட்டின் சாபக்கேடு, பெரும்பாலும் கலாநிதிகளும், சட்டவாதிகளும், செல்வந்தர்களும் தொழிலாளர் இயக்கங்களுக்குத் தலைமை வகிப்பதால்தான் ஏழைத் தொழிலாள விவசாய வர்க்கத்திற்கு இன்னும் விடிவு கிட்டவில்லை. தொழிலாள வர்க்கத் தலைமை எப்போ கிடைக்கிறதோ அப்போதான் முடுமை நீங்கும்...''

பொன்ராசாவின் புதுமையான கருத்தைக் கேட்டு ஜானகி சற்றுநேரம் அசந்துபோய் நின்றாள்.

எதற்கும் 'போராட்டம்' என்று ஆவேசமாகப்பேசும் பொன்ராசா அமைதியே உருவான விரிவுரையாளரில் நல்லெண்ணம் கொண்டிரானென்று நினைத்த ஜானகி, ''நமது விரிவுரையாளர் பற்றிய உங்கள் கருத்தென்ன?'' என்று எதிர்பாராத ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டாள்.

பொன்ராசா நிதானமாகப் பதிலளித்தான்:

''அவர் சேற்றில் முளைத்த செந்தாமரை. அவரிடம் 'கிளிப்பிள்ளைவாதி'கள் மட்டும் உருவாகவில்லை. பலபுரட்சிகர நடைமுறைப் போராட்ட வீரர்களும் உருவாகியுள்ளனர். இவர்கள் வானத்து நட்சத்திரங்களைக் கற்பனை பண்ணி வெறும் மண்ணைப் பார்ப்பவர்களல்லர்; உலகளாவிய ஜன வெள்ளத்தின் வாழ்க்கையை வைத்து இந்தப் பூமியையே சொர்க்கமாக்கப் போராடும் இயக்கவாதிகள்.''

''நீங்களும் அப்படித்தானே?'' என்று வினயமாகக் கேட்டாள் ஜானகி.

''நான் மட்டுமா: ஏன், நீயுந்தான்.''

ஜானகியின் வாய் அடைத்துப் போய்விட்டது. கண்கள் அவனை ஊடுருவித்துப் பார்த்தன. இலட்சிய இணைப்பான அந்தக் கற்கண்டுச் சொற்கள்...

இன்றும் அந்த இனிய வார்த்தைகள் அவள் மனதை இன்பத்திலாழ்த்தின.

0 0 0

''ஜானகி, என்ன கல்லுப் பிள்ளையார் மாதிரிக் குந்தியிருந்து யோசனையிலாழ்ந்து விட்டாயே, இனிக் கிளம்பலாமே?'' என்று அரட்டிய சரஸ்வதி, ''இன்று எந்தப் பகுதியைப் பார்க்க உத்தேசம்?'' என்று கேட்டாள்.

"போய்க்கொண்டிருப்போம். எது மனசுக்குப் பிடிக்குதோ அங்கே தரிக்க வேண்டியதுதான்."

"சரி, வா போவோம்."

இருவரும் பேராதனை ரஜவத்தையிலிருந்து மெயின் வீதியில் இறங்கும்போதே பொழுது மேலே வந்து விட்டது.

கண்டி நகரத்தைத்தேடி வீதியோரமாக நடந்து கொண்டிருந்தனர். அப்போது தொலை தூரத்துக்கப்பால் ஜன சந்தடியின் நெருக்கமும், ஏதோ ஆர்ப்பாட்டமும் தெரிந்தன.

'கண்டி முனிசிபல் தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கப் போகிறார்கள்' என்று முதல் நாள் விரிவுரையாளருக்கு கிழவன் வெள்ளைச்சாமி கூறிய செய்தி அப்போது அவள் நினைவில் குதித்தது. இது அந்த ஆர்ப்பாட்டமாக இருக்கலாமோ?

ஜனங்கள் வீதிகளை அடைத்துப் பிடித்துக் கொண்டு கலவரப்படுவது மங்கலாய்த் தெரிந்தது. போக்கு வரத்து வாகனங்கள் முண்டியடித்துக் கொண்டிருந்தன. பிரயாணிகள் வழிந்து நிரம்பிய 'பஸ்'கள் ஆங்காங்கே ஸ்தம்பித்து உறுமி இரைந்து கொண்டிருந்தன.

"ஜானகி, பட்டாளம்போல் சனங்கள் திரண்டு நிற்குதே. நாங்கள் எந்தவழியாலும் போகமுடியாது போலிருக்கிறது. பேசாமல் வந்த வழியே திரும்பிச் செல்வோம்" என்றாள் சரஸ்வதி.

"சரஸ், கொஞ்சம் பொறு. அது என்னவென்று பார்ப்போம்" என்றாள் ஜானகி. ஏங்கிய கண்களால் அங்கே கூர்ந்து பார்த்தாள்.

'கலீங் கலீங்... த்டோம் ப்டோம்' என்ற ஒலிகள் காதுகளை 'கிண்'ணிடக் கேட்டன. கண்ணாடி யன்னல்கள் உடைந்து நொருங்குகின்ற சத்தமா?

வீதிக் கடைகளை முற்றுகையிட்ட ஜனத்திரள் ஆர்ப்பரித்துப் போடும் கூச்சல் ஏகமாய் ஜானகி காதில் விழுந்தது.

'திடீ'ரென்று மோட்டார் காரிலிருந்து நடுவீதியில் இறங்கிய பொலிஸ் கத்திய குரலை கமாரிட்டது;

"றோட்டிலே ஒருவரும் நிற்க வேண்டாம்; கலைந்து போங்கள்"

நெஞ்சு 'திடுக்' கிட, ஜானகியும் சரஸ்வதியும் 'தறு தறு'த்து முழிசிக் கொண்டு, வந்தவழியே திரும்பும் போது, ஓர் இளைஞன் கதறிக்கொண்டு வீதிக்குக் குறுக்கே ஓடினான்.

"ஸ்ரைக் செஞ்ச தொழிலாளங்கள, பொலிஸ் காரங்க அடிச்சு நொறுக்கிப் பூட்டாங்க"

ஜானகியின் நெஞ்சு 'திக்' கிட்டது; கால்கள் தரித்தன.

'இந்தப் போராட்டத்தில் பொன்ராசா கலந்து கொண்டிருப்பானோ?'

இன்ஸ்பெக்டர் சிவலிங்கம் சொன்ன வார்த்தைகளே அப்போது அவள் நெஞ்சினை அறுத்து ஊடுருவின:

"பொன்ராசனை மட்டும் பிடித்து உள்ளே தள்ளிவிட்டால்...?"

'ஐயோ' என்று வாய்விட்டுக் குழற வேண்டும் போல் அவள் மனசு கெந்தகித்தது.

சரஸ்வதி நடந்து கொண்டே, "ஜானகி, கெதியா வா போவோம்" என்று அரட்டினாள்.

அப்பவும் ஜானகியின் கால்கள் நகரவில்லை; தியங்கிப் போய் நின்றாள்.

"ஏ ஜானகி, என்னது அப்படியே நின்று விட்டாய்?"

"நான் வரவில்லை; விரும்பினால் நீ போ."

"என்னடி, உனக்கென்ன விசரா பிடிச்சிட்டுது"?

ஜானகி பதில் சொல்லாமல் சரஸ்வதியை முறைத்துப் பார்த்தாள்.

அப்போது தொலை தூரத்துக்கப்பால் நாலைந்து தொழிலாளர்கள் மண்டை பிளந்த ரண காயங்களோடு இரத்தம் தோய்ந்த முண்டாஸ்களை உயர்த்திப் பிடித்துக்

கொண்டு ஆக்ரோஷித்துக் கத்துவது அவள் கண்ணில் தெரிந்தது:

''பொலிஸ் அட்டூழியத்தை?''

''அடக்கி ஒழிப்போம்!''

''முதலாளித்துவத்தை?''

''நொறுக்குவோம்!''

''தோழர் பொன்ராசாவை?''

''விடுதலை செய்!''

'ஐயையோ!'

'பொன்ராசாவை விடுதலை செய்' என்ற கோஷம் மின்னலடித்தமாதிரி ஜானகி நெஞ்சைத் தாக்கிற்று. சர்வாங்கமும் உப்பிக் குமுவிற்று. கண்களில் நீர் ததும்ப, அவள் விறைத்துப்போய் நின்றாள்.

'இன்ஸ்பெக்டர் சிவலிங்கம் இந்த நேரம் எங்கே இருப்பார்; என்ன செய்துகொண்டிருப்பார்?' என்ற யோசனையிலாழ்ந்தபோது, பொன்ராசாவை அவர் விலங்கு மாட்டிப் பொலிஸ் ஜீப்பில் ஏற்றிக்கொண்டு போகின்ற ஓர் காட்சி பிரமையாக அவள் மனதில் தோன்றிச் சாடிற்று: சதிரம் குல்லிட்டுக்கொண்டது.

''சரஸ்வதி, உடனே ஜானகியையும் கூட்டிக் கொண்டு வீட்டுக்குப் போ.''

ஓர் குரல் அப்போது அவலமாகக் கேட்டது. ஜானகி 'திடுக்'கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

விரிவுரையாளர் இராமசாமி கலவரமடைந்தவராக அவள் எதிரே நின்றார். ஜானகியிலும் பார்க்க அவர் நெஞ்சே ஆகவும் பதறிக் கொண்டிருந்தது.

முதல்நாள் விரிவுரையாளர் இன்ஸ்பெக்டருக்கு எக்காளித்துச் சொன்ன அந்த வார்த்தை-அந்தச் சவால் இப்போ அவர் செவிகளிலேயே ஓங்கி அறைந்தது.

''பொன்ராசாவை வலை போட்டுத் திரியும் உங்கள் முயற்சி, நிச்சயம் தோல்வியாகும்.''

அப்போது பொலிஸ் இன்ஸ்பெக்டர் சிவலிங்கம் வெற்றிப் புன்னகையுடன் அவரைப் பார்த்து, "ஓய் விரிவுரையாளரே, எப்படி என் சமத்து?" என்று கேட்டுக் கேலி செய்வது போலிருந்தது.

கடும் யோசனையிலாழ்ந்துவிட்ட விரிவுரையாளர் 'பரபர'ப்போடு வீடுதேடி நடக்கலானார்.

## 10.

"பொன்ராசாவுக்கு என்ன நேர்ந்தது? பொலிஸ் அவனை மட்டும் கைது செய்தாரா? அவனுடன் பலரையும் கைது செய்திருக்குமா? இன்ஸ்பெக்டர் சிவலிங்கமே இதற்குக்கருவியாக இருந்திருப்பாரா?"

இப்படியெல்லாம் விரிவுரையாளர் தனக்குள்ளே கேள்விக் கணைகளைத் தொடுத்துக் கொண்டே அறையில் சுற்றினார்.

பொலிஸ் குண்டாந்தடிப் பிரயோகம் புரிந்ததை எதிர்த்து, தொழிலாளர்கள்—வெகு ஜனங்கள் கெம்பி எழுந்து போர் முழக்கங் கொட்டி அரசாங்க—தனியார் உடைமைகளையும், கட்டிடங்களையும் நொறுக்கி எறிந்து கொண்டு சென்ற காட்சிகள் அவர் மனசில் அப்போது விரிந்தன.

யாழ்ப்பாணத்திலே இயக்க வேலைகளைச் செய்து கொண்டிருந்த பொன்ராசா, மலைநாட்டுத் தொழிலாளர் போராட்டத்தில் 'திடீ'ரென்று வந்து எப்படி குதித்தான் என்பதை அவரால் யூகிக்கவே முடியவில்லை.

'கண்டி முனிசிப்பல் தொழிலாளர் சம்பள உயர்வு, குடியிருப்பு நிலம், வரிக்குறைப்பு, கேட்டுப் போராடும் கமிட்டிக்கு அவன் ஓர் ஆலோசகராகத் தானே வந்திருந்

தான்? அது இப்படி விஸ்வரூபம் எடுத்திருக்கிறதென்றால் பொலிஸாரின் 'திட்டமிட்ட' சதியே காரணமாயிருக்கும்' என்று நினைத்தார்.

'முழுத் தகவல்களையும் சிவலிங்கத்திடமே தெரிந்து கொள்ளலாம். ஆனால், இன்னொரு பொலிஸ் அதிகாரியான அவர் பொலிஸ் விவகாரத்தை வெளியே கூறுவாரா?' என்ற சந்தேகம் தட்டிற்று.

'கேற்' பக்கம் ஓர் குரல் கேட்டது:

"தொரே உள்ளே இருக்காங்களா?"

வெளியே வந்து பார்த்தார் விரிவுரையாளர்.

வெள்ளைச்சாமி, சிறிசேன, தங்கப்பன், அப்புஹாமி, சலாவுதீன் உட்பட ஆறு ஏழு தொழிலாளர்கள் உள்ளே வந்து கொண்டிருந்தார்கள்.

"என்ன நடந்தது? பொன்ராசா எங்கே?"

பதட்டத்துடன் விடுத்துக் கேட்டார் விரிவுரையாளர்.

"ஸ்ரைக் பண்ணேனும்'னு நாம்ப தீர்மானிச்சபடி முனிசிபல் 'கேட்'டுக்கிட்டவாத் தொழிலாளங்கல்லாம் ஒண்ணாப் போய்க்கிட்டிருந்தோம். ஒரு பொலிசு இஞ்சுப் பற்றரு அந்தத் தடிப்பய நம்ப கட்சி ஆபிசிலே இருந்த பொன்ராசாத் தோழரைப் புடிச்சு இழுத்து ஜீப்பில ஏத்திப்புட்டான். அந்தாப்பொல ஐ·னங்க குழம்பியிட்டாங்க" என்றான் வெள்ளைச்சாமி.

"அதுக்கு, பொலிஸ் ஏன் அடித்தது?" என்று ஆத்திரம் கக்கும் பாவனையில் கேட்டார் அவர்.

"கந்தோரில இருந்த சங்கத்து ஆளுங்ககூடவுட்டுக் கொள்ள வந்தாக்கா சும்மா பாத்துக்கிட்டு இரிக்கிய ஏலுமா? அந்தால பொலிஸ்காரங்ககூட நாயம் பேசிக்கிடப் போறப்போ அங்கின குழம்பிப் போயிந்திரிச்சி. நாமளும் வுட்டுக்கலே" என்று சலாவுதீன் சொல்லிக் கொண்

டிருக்கவே, அவன் தோள்கள் விம்மிப் புடைத்துக்கொண் டன.

"நாங்கட வவுத்தில அடிக்கிற பணங்காரங்களுக்கு விரோதமா முட்டுப்பட்ட தொழிலாளிங் சட்டன் (போராட்டம்) பண்றுங். அதுக்குப் பொலிஸ்காரங் பொல்லுந் துவக்குங் கொண்டு வாறுங். என்னங் அநி யாயங்" என்று குமுறினான் சிறிசேன.

விரிவுரையாளருக்குப் பக்கத்தில் போய் நின்ற சிறி சேன சட்டையைக் கழற்றி நெஞ்சுப் பாளத்தைக் காட்டி "காயங்களப் பாத்தீங்களா?" என்று முறையிட்டு அவ ரைப் பார்த்தான்.

"பொலிஸ்காரங்க நம்ப தொழிலாளிங்க ஒடம்பில கை வைச்சோடன, 'பொலு பொலு'ன்னு அவங்கமேல கல்லு வந்து விழுந்திச்சு. அந்தால 'படார்படார்'ன்னு பொல்லுங்களால மாட்டத் துவங்கிட்டாங்க" என்று சொல்லி முடித்தான் வெள்ளைச்சாமி.

"யாருக்கேனும் உயிர்ச் சேதமுண்டா?"

"இல்லே, அப்புடி ஆரும் மவுத்தாகலே. ஆனா, ரண்டு பேர்ட முழங்கால்ல அடி வுழுந்திரிச்சி" என்றான் சலா வுதீன்.

"படுகாயமோ?"

"செம்மளாத் தெரியாதுங்க."

"அந்த இரண்டு பேரையும் 'ஹொஸ்பிட்டல்'ல சேத் தாச்சுதா?"

"ஆமாங்க சேத்தாச்சுங்க."

"எந்த 'ஹொஸ்பிட்டல்'ல?"

"கண்டி ஹொஸ்பிட்டலீங்க."

இதையெல்லாம் கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்த ஜானகி, "'ஐயோ' பாவங்கள்' என்று நெஞ்சினுள்ளே உருகினாள்.

காயப்பட்டவர்களை ஆஸ்பத்திரிக்குச் சென்று உடனே பார்க்கவும், கைதான பொன்ராசாவை பொலிஸ் நிலையம் போய் மீட்கவும் அவள் மனசு துடித்தது.

"ஆஸ்பத்திரிக்குப் போய் காயக்காரரைப் பார்த்துக் கொண்டு வருவோமா?"

சரஸ்வதியிடம் கேட்கும் தோரணையில் விரிவுரையாளரை நோக்கி, 'தழுதழு'த்த குரலில் அனுங்கினள் ஜானகி.

அழகு சௌந்தர்யமும், வாளிப்புமாய்த் தெரிகின்ற இந்தப் பெண், தொழிலாளரில் இவ்வளவு அக்கறை கொண்டு துடிப்பதைக் கவனித்த வெள்ளைச்சாமியும், அவன் தோழர்களும் ஆச்சரியத்தில் மூழ்கி விட்டார்கள்.

"தொரே இந்த அம்மா யாருங்க?" என்று அவர் காதோடு கேட்டான் வெள்ளைச்சாமி.

"இவ ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டரின் சம்சாரம்" அழுத்தமாகச் சொன்னார் விரிவுரையாளர்.

'விரிவுரையாளர் இந்த வேளை கூட சல்லாபம் புரிகிறாரே' என்று ஒவ்வொருவரும் தங்களுக்குள் நினைத்துக் கொண்டே, "நம்ப முடியாதுங்க தொரே. இந்த அம்மா பேச்சைப் பார்த்தா, பொலிசு இஞ்சுப்பெற்றர் சம்சாரம்னு சொல்லிக்க முடியுங்களா?"

வியப்போடு சாடையாக வைந்த வண்ணம் கேட்டான் வெள்ளைச்சாமி.

"உங்களுக்கு அவ எப்படித் தெரிஞ்சு?"

"அவுங்களைப் பார்த்தா, எங்க தோழர் பொன்ராசாவுங்க......"

"த்சூ நிறுத்து: அப்படியில்லை."

அவன் வாயை அடைப்பது போல் தன் வாயில்விரல் வைத்து அச்சுறுத்தினார் விரிவுரையாளர்.

'எங்க தோழர் பொன்ராசாவுங்க...'

இந்த வாக்கியம் ஜானகியின் மனசில் மீண்டது. அவள் இதயத்திலுள்ளே அது உளியாகக்குடைந்த போதும் அந்தக் குடைவிலுள்ளே அவள் இனங்காணாத ஏதோ ஓர் இன்பத்திலாழ்ந்தாள். இந்தக் களிப்பு, தனது பெண்மை, ஒழுக்கம் இரண்டிற்குமே மாசு என்று புரிந்த போது, அவள் மனசு மறுபாட்டம் வெதும்பிக் கொதித்தது. மான உணர்வும் இலட்சிய வேட்கையும் ஒன்றையொன்று மோதின. அவள் சிந்தனை முற்றாகக் குழம்பி விட்டது.

தனது சுதந்திர அபிலாஷைகளைக் கூட தன் மனசுக்கு உகந்தபடி வெளிப்படுத்த இயலாத கட்டுக்கோப்புகள், அவள் மனசில் அப்போது சிறைக் கோட்டங்களாகத் தோன்றின.

ஒருமுறை இன்ஸ்பெக்டர் சிவலிங்கம் நடந்துகொண்ட முறைகள், அந்த நிகழ்ச்சிகள் எவ்வளவு கொடூரமானவை என்பதை இப்பவும் நினைத்து அவள் தன்னுள் குறுகிச் சாம்பினாள்.

அன்று நிகழ்ந்த அநியாயத்தைத் தடுக்கவிட அவளால் முடியவில்லை. அதற்காக இன்றும் அவள் இதயம் நெகிழ்ந்து கொண்டிருக்கிறதேயன்றி அவள் நினைப்பது எதையும் அவளால் செய்யமுடியவில்லை.

"என் அந்தராத்மாவே சுத்தமில்லாமல் செத்துவிட்ட இந்த வாழ்க்கை எனக்கு வேண்டாம்" என்று அப்பவே அவள் சொல்லியிருந்தாள். விரிவுரையாளர் மட்டும் குறுக்கிடாமலிருந்தால் அவள் சரித்திரமே வேறாக அமைந்திருக்கும். ஆனால், அவள் விரிவுரையாளரின் சொற்களில் கட்டுண்டு பெட்டிப்பாம்பாகி விட்டாள்.

அந்த நிகழ்ச்சி மனசுள் இப்பவும் பிரளாபித்துக் கொண்டுதானிருக்கிறது.

அரசாங்கத்தின் கெடுபிடிகளை எதிர்த்துத் தொழிலாளர்-விவசாயிகள் விடுதலை ஊர்வலம் நடத்தி யாழ்ப்பாண

முற்றவெளியில் நிகழும் பிரமாண்டமான ஒரு கண்டனக் கூட்டமும், அந்தக் கூட்டப் பிரச்சாரச் சுவரொட்டிகளும் யாழ்ப்பாணமெங்கும் பெரும் பரபரப்பை உண்டாக்கின.

இவற்றைக் கவனித்த ஆட்சியும் தனது அரச இயந்திரங்களைத் தக்க வேளையில் முடுக்கிவிட்டது.

அன்று அதிகாலையிலிருந்தே நாடு பூராவுமுள்ள முப்படைகளும் 'உஷார்' படுத்தப்பட்டன. பொலிஸ் 'ஜீப்'புகள் துப்பாக்கிகள் சகிதம் நகர வீதிகளில் ரோந்து சுற்றத் தொடங்கி விட்டன.

கடல் அலைகள் குமுறிக் கொந்தளிப்பது போல் நாலா பக்கமும் ஜனங்கள் கொந்தளித்துக் கொண்டிருந்தார்கள்.

உணவு விலையேற்றத்தை எதிர்த்த அப்போராட்டத்தின் ஆர்ப்பாட்ட ஊர்வலம் குறிப்பிட்ட நேரத்தில் சன்னைகத்து மெயின் வீதியை நெருங்கிக் கொண்டிருந்தது.

ஜானகி விறுந்தையில் நின்று ஊர்வலத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஊர்வலம் அண்மிவிட்டது. வானம் இடியுண்டு பூமி அதிர்ந்தமாதிரி ஜனங்களின் ஆக்ரோஷக் கோஷங்கள் அவள் செவிகளில் விழுந்தன:

''உணவின் விலையை?''
''உயர்த்தாதே!''
''வெட்டிய கொத்தரிசியை?''
''திருப்பிக் கொடு!''
''ஏழைகள் வயிற்றில்?''
''அடிக்காதே!''
''அந்நிய கம்பனிகளை?''
''தேசியமயமாக்கு!''
''தொழிலாளர்களை?''
''பழிவாங்காதே!''

''வகுப்பு வாதம்?''

''ஒழிக!''

''ஜாதி பேதம்?''

''ஒழிக!''

''இனவாதம்?''

''ஒழிக!''

''சகோதரத்துவம்?''

''வாழ்க! வாழ்க!''

மண்ணிலிருந்து விண்ணதிர வெடித்துக் கிளம்புகின்ற ஜனக் குரல்களோடு தொழிலாளர் ஏந்திப் பிடித்து முன்னேறும் சுலோக அட்டைகளும், செங்கொடிகளும் வானளாவிப் 'படபட'த்து ஆடுகின்றன கண்ணுக்கெட்டாத தூரம் வரை நிரை விட்டுப் போய்க் கொண்டிருக்கிறது ஊர்வலம்.

செஞ்சட்டையும் லெனின் தொப்பியும் அணிந்து கொண்டு பொன்ராசா கம்பீரமாக முன்னேறிக் கொண்டிருந்தான்.

ஜானகியின் வீட்டு வாசல் நெருங்கியதும் அவன் உணர்ச்சி வசப்பட்டு ஆவேசமாகக் கத்தினான்.

''பொலிஸ் அட்டூழியங்கள்?''

''ஒழிக!''

இதைத் தொடர்ந்து எங்கிருந்தோ ஓடி வந்து ஒரு பொலிஸ்காரன் அதிரும் தொனியில் கத்தினான்:

''அடேய் பண்டி, 'ப்ளடி ருஸ்கல்'. வாய்க் கொழுப்பாய்க் கத்தாதே.''

ஊர்வலம் 'சடா'ரென்று தரித்தது. கூட்டம் 'குபு குபு'வெனத் திரண்டு விட்டது. உடனே பொன்ராசா பலமாகக் கத்தினான்:

''தோழர்களே! ஊர்வலத்தைக் குழப்பியடிக்க, பொலிஸ் ஆத்திர மூட்டும் சதி நடவடிக்கையில் இறங்கப் போகிறது. சட்டை செய்யாமல் முன்னேறிப் போங்கள்.''

பொன்ராசா கரங்களை உயர்த்தி 'உஷார்' படுத்திக் கொண்டிருந்தான். ஊர்வலம் நகரத் தொடங்கியது. மீண்டும் கோஷங்கள் 'கணீ'ரிட்டன.

''பொலிஸ் மிரட்டலுக்கு?''

''அடிபணிய மாட்டோம்!''

அவ்வளவு தான்! உடனே ஒரு பொலிஸ்காரன் குறுக்கே குதித்தோடி வந்து பலமாகக் கத்தினான்:

''அடேய், சத்தம் போடாதே. நிறுத்து!''

நாலைந்து பொலிஸ்காரர்கள் 'பெற்றன்' பொல்லுகளைக் கைப் புடங்குகளில் மாட்டிக் கொண்டு 'திடீ'ரென ஊர்வலத்துக்குள் பிரவேசிப்பதை பொன்ராசா கண்டு விட்டான். கண்டதே தாமதம் புலிபோல் பாய்ந்து தொழிலாளர்களையும் ஊடறுத்துக் கொண்டு முன்னேறினான். அதற்கிடையில் தொழிலாளர்களுக்கும் பொலிஸ்காரர்களுக்கும் வாக்கு வாதம் முற்றிவிட்டது. கட்டுக்கடங்காமல் ஜனத்திரள் திமிறத் தொடங்கியது. பொன்ராசா அமைதியை நிலைநாட்ட எடுத்த முயற்சிகள் அத்தனையும் தோற்றுவிட்டன.

க்ஷணவேளைக்குள் வீதி யுத்தக்களமாக மாறிவிட்டது.

சிதறி ஓடிய நாலைந்து தொழிலாளர்களின் மண்டைகள் உடைந்து இரத்தம் சீறிக்கொண்டிருந்தது. பொலிஸ் 'ஜீப்'புகளும், மோட்டார் வாகனங்களும் வீதியடங்கலும் றுமிக்கொண்டிருந்தன.

இன்ஸ்பெக்டர் சிவலிங்கம் எங்கிருந்தோ ஓடிவந்து பொன்ராசாவின் 'சேட்'டைப் பிடித்து இழுத்து அவன் நெஞ்சிலே ஒரு குத்துவிட்டார்.

அதோடு ஊர்வலம் ரணகளமாகவே மாறிவிட்டது. இன்ஸ்பெக்டர் எங்கே என்றும் தெரியவில்லை.

தனது கண்ணுக்கு எதிரே நிகழ்ந்த அந்தக் கொடுமை; அவன் நெஞ்சிலே இன்ஸ்பெக்டர் ஓங்கிக் குத்திய அந்தக் குத்து......

அன்று இரவு அவர் பொலிஸ்நிலையத்திலிருந்து வெற்றிப்புன்னகையுடன் வீட்டுக்கு வந்து 'யூனிபோர்ம்' கழற்றிக்கொண்டிருக்கவே, ஜானகி அவர் பக்கத்தே நின்று, "ஏழை மக்களுக்காகப் போராடுகிறவர்கள் மீது பொலிஸ் இப்படியெல்லாம் அநாகரிகமாக அட்டூழியம புரிவது, சகிக்கமுடியாத பெருங்கொடுமை" என்ருள்.

இன்ஸ்பெக்டர் கேலியாகச் சிரித்து விட்டு அவர்கள் "ஏழைகளுக்காகப் போராடுகிறவர்களல்ல; முதலாளிகளுக்கு எதிராகத் தொழிலாளர்களைத் 'தூண்டி' விட்டுக் கூத்துப் பார்க்கின்றநாசகாரிகள்" என்ருர்.

"அப்போ, நீங்கள் முதலாளிகளைக்காப்பாற்றவெளிக்கிட்டிருக்கிற சேவகர்கள், அப்படித் தானே?"

"என்னது, உன் பேச்சிலே பொன்ராசனின் 'வாடை' அடிக்குதே?"

"இது வாடையல்ல; உண்மை! அவர்கள் நாசகாரர்களல்ல; நீதிக்காகப் போராடும் தொழிலாளிகளின் இரட்சகர்கள்."

"அதனுல்தான் அந்தப் 'பொன்ராசா ரட்சகர்' இன்று சிலுவை சுமந்து செப்பமாக வாங்கிக் கட்டினுர்."

இன்ஸ்பெக்டர் விட்ட 'நக்கல்' அவளுக்குப் பொறுக்கவில்லை. உடனே அதற்கு அவள் 'கடுகடு'ப்பாகவே பதில் சொன்னுள்:

"ஆனுல், அவன் கோழையல்ல; கொள்கைப் பிரகடனம் செய்து போராட்டத்தில் இறங்கிய சுத்தவீரன். நீங்கள்தான் பேடித்தனமாக மறைந்திருந்து ஓடிவந்து அவன் நெஞ்சிலே எதிர்பாராமல் குத்தினீர்கள். அதுதான் கோழைத்தனம்; அதுதான் பெரும் வெட்கக்கேடு."

ஜானகியின் 'திடீ'ர்த் தாக்குதலை இன்ஸ்பெக்டரால் சகிக்கமுடியவில்லை.

"ப்ளடி ரூஸ்கல், சட் அப்'' என்று சீறிக் கொண்டு அவள் கன்னத்தில் 'சள்'ளென்று ஓங்கி அறைந்தார்.

அவர் அடித்த அடியைவிட அவன் நெஞ்சிலே அவர் இடித்த அந்த இடிதான் அவள் நெஞ்சினை அப்பவும் தாக்கிக்கொண்டிருந்தது.

'ஏழைத் தொழிலாளி—விவசாய மக்களுக்காகப் போராட்டம் நடத்திய இலட்சிய புருஷனை இந்த முரட்டுக் கரங்கள் எப்படியெல்லாம் கொடுமைப்படுத்துகின்றன' என்று நினைத்த போதே ஜானகியின் இதயம் வலுவாக வெதும்பியது. அந்தக்கொடுமையான நிகழ்ச்சிகள் இன்னும் அவள் கனவுகளில் கூடப் பிரதிபலித்துக்கொண்டிருக்கின்றன.

அன்றும் ஒருநாள் இப்படித் தான் பொன்ராசா நெஞ்சில்குண்டு பட்டதாகக் கனவு கண்டு துடித்து எழுந்திருந்தாள்.

'அந்தக் கனவுகளைப் போலவே கடைசியில் எல்லாம் வந்து முடியுமோ?''

இப்பொழுது இப்படி நினைக்கவே, அவள் நாக்குத் தடம் புரண்டது; கண்கள் கலங்கின.

'இந்தம்மா எங்க தோழர் பொன்ராசாவுங்க......'

ஒரு தொழிலாளியான வெள்ளைச்சாமி யூகித்துச் சொன்ன அந்த வாக்கு — அந்த வாக்கினில் தனக்குண்டான புனித ஒழுக்க நெறிகள் யாவும் அழிந்து போனது போல் ஜானகிக்குத் தோன்றின. இருந்தும் அவள் மனசில் அவை பற்றிய எந்தக் கிலேசங்களும் இப்போது இருக்கவில்லை.

''நாம சொன்னது அம்மாவுக்குப் புடிக்கல்லப்போல. அதான் கண் கலங்கிட்டா. தெரிஞ்சிக்காமச் சொல்லிப் புட்டேன்; மன்னிச்சிருங்கம்மா.''

வெள்ளைச்சாமி ஜானகியைப் பார்த்துத் தாழ்ந்த குர லில் இரங்கி வேண்டினன்.

''அதெல்லாம் இல்லை; அப்படிச் சொன்னாலும் நான் கவலை கொள்ளவும் மாட்டேன்'' என்றாள் ஜானகி.

இந்த வார்த்தை ஜானகி வாயில் பிறட்ட போது அதன் அர்த்த புஷ்டியைப்புரிந்து வியந்தவாறே, ஜானகி யைப் பார்த்தார் விரிவுரையாளர்.

''ஜானகி, நீ இப்போ உணர்ச்சிவசப்பட்டிருக்கிறாய். அது தான் உன் வார்த்தைகள் கூட உன்னை மீறி வருகின் றன'' என்றார் விரிவுரையாளர்.

''என் வார்த்தைகள்—என் ஆசைகள் யாவும் என்னை மீறி வருவதற்குக் காரணமே நீங்கள் தான்!''

எடுத்த எடுப்பில் அவரையே நிதானமாகப் பார்த்துக் குற்றம் சுமத்தும் பாவனையில் கூறினாள் ஜானகி.

அசையாத நெஞ்சும், மன உறுதியும் கொண்ட விரி வுரையாளர் அவளின் புது வியாக்கியானத்தால் அடிபட்டு ஒருகணம் அசந்தே போய்விட்டார்.

சிங்கப்பூரில் உள்ள தங்கை மகனுக்கு ஜானகியை மணம் செய்து வைக்கத்திட்டமிட்டிருந்தார்பொன்னையர். பெற்ற தந்தையான பொன்னையரே அவள் பிரிவைத் தாங்க முன்வந்தார். ஆனால், தன் இலட்சிய மாணவி ஜானகியைப் பிரிந்து இருக்க இந்த விரிவுரையாளரின் மனசு இடங்கொடுக்கவில்லை. ஆகவே, பொன்னையரை வசப்படுத்தி அந்தச்சம்பந்தத்தை நிறுத்தியதோடு இன்ஸ் பெக்டர் சிவலிங்கம் எடுத்த தாலியை ஜானகி கழுத்தில் மாட்ட வைத்தார் விரிவுரையாளர். யார் வகை சொல் வது?

'கண்ணுக் கெட்டாத தூரமென்றாலும் சந்தோஷமாக வாழவிருந்த ஜானகி, என் கண் முன்னே சிறைப்படுத்தப் பட்டுத் தவிக்கிறாள். என்வினை இப்போது என்னையே அறுக்கிறது.'

மனசில் எழுந்த துயரத்தைக் காட்டிக்கொள்ளாமல், அவர் ஜானகியை நோக்கி, ''ஜானகி, நீ இப்போ எதை விரும்புகிறாயோ அதை மனம் விட்டுச் சொல்லு. நான் உடனே செய்து வைப்பேன்'' என்றார்.

''காயப்பட்டு ஆஸ்பத்திரியில் கிடக்கிறவர்களை உடனே போய்ப் பார்க்க வேணும்.''

''பொய். இது மட்டும் உன் விருப்பமல்ல. முக்கியமான ஒன்றை மறைத்து விட்டாய். நீ எதை மறைத்தாயோ அதுதான் இந்த விருப்பத்தையும் தூண்டிவிட்டிருக்கிறது'' என்றார் விரிவுரையாளர்.

தனது மனசிலுறைந்த பாரச்சுமைகளை அவர் தெரிந்து கொண்டார் என்பதை ஜானகி உணர்ந்த போதும், அவற்றைத் தனது வாயால் இறக்காமல் அவர் வாயாலேகேட்க விரும்பி மௌனமாக நின்று அவரை விழிகளால் இறைஞ்சினாள்.

''மறைக்காமல் சொல்லு: நீ பொன்ராசாவைப்பார்க்கத்தானே துடிக்கிறாய்?''

'ஆம்!'

ஒப்புதலாகத் தலையசைக்கின்ற சாடையில் அவள் முகத்தை ஏறெடுக்க அவள் நெஞ்சு துருத்திக் கண்கள் கலங்கிக் குமிழிட்டுக் கொண்டன.

''அடுத்து. பொன்ராசாவை விடுதலையாக்க வேண்டும்; அது தானே?''

''ஓம், கெதியாக!''

ஜானகி வாய் திறந்தே சொன்னாள்.

எதிரே நின்ற தொழிலாளர்கள் சமைந்து போய் நின்றார்கள்.

''இந்தம்மா ஊர்க்கார இஞ்சுப்பெற்றர் நம்பதோழர் பொன்ராசாவைப் புடிச்சு அடைச்சிட்டாரு. இவங்க அவரெ வெளிய எடுக்கோணும்கிறா. ஆரோ சாமி சொன்னப்பல இந்தம்மா ஒரு 'புரட்சிப் பொண்'ணுதான்.''

இப்படித் தனக்குள் சொல்லிக்கொண்டே ஜானகியை வாஞ்சையோடு பார்த்தான் வெள்ளைச்சாமி.

ஏதோ அரவம் கேட்டது.

இன்ஸ்பெக்டர் சிவலிங்கம் அவசரமாகக் 'கேற்'றைத் திறந்து பெரும் திடும் போடு உள்ளே விரைந்து கொண்டிருந்தார்.

அவர் கண்கள் முற்றத்தில் நின்ற ஜானகியையும் தொழிலாளர்களையும் 'முறைத்து'ப் பார்த்தன.

ஜானகியின் நெஞ்சு வானம் இருண்டு இடியுண்டது போல் அதிருண்டது.

''ஏ, ஜானகி!''

அவளைத் தாண்டிப் போய் விறாந்தையில் நின்று உரத்ததொனியில் சினப்போடு அழைத்தார் இன்ஸ்பெக்டர்.

ஜானகி அசையவில்லை. முற்றத்தில் நின்றவாறே அவரை ஏறு கண் வைத்து 'என்ன?' என்று கேட்பது போல் நோக்கினாள்.

''இன்றைக்கே யாழ்ப்பாணம் போக வேண்டும். கெதியாக ஆயத்தப்படுத்து.''

அவர் வார்த்தையில் கண்டிப்பும், அதிகாரமும், வெறுப்பும் கலந்திருப்பதை அவள் கவனித்துக் கொண்டே மெதுவாக நகர்ந்தாள்.

சிவலிங்கம் 'விறுக்' கென்று உள்ளே சென்றார்.

அவள் கண்கள் தொழிலாளர்களை நோக்கின.

'உங்களுக்கு மிகவும் நன்றி, மீண்டும் சந்திப்போம், போய் வாருங்கள்' என்று கூறுவது போலிருந்தன அவள் கண்கள்.

# 11.

யாழ்ப்பாணம் வந்து இரண்டு நாட்களாகியும் ஜானகி முகத்தில் மகிழ்ச்சி இல்லை. தனியாக ஏதோ சிந்தனையிலாழ்ந்திருப்பதும், அரவங் கேட்டால் 'திடுக்' கிட்டு எழுந்து கொள்வதுமாக இருந்தாள். அவள் திருக்கோலமே மாறிவிட்டது. பேச்சுக் கொடுத்தால் இரண்டு வார்த்தை சுருக்கமாக முடித்துக் கொள்வாள். பின்பு மௌனம்.

அவள் போக்கைக் கவனித்த பொன்னையரின் உள்ளம் பதகளித்தது. 'ஜானகிக்கு அப்படி என்ன நேர்ந்து விட்டது என்று தனக்குள் கறுவிக் கொண்டார்.

'ஒருவேளை அவன் பொன்ராசாவின் பித்து இவளுக்குப் பிடித்து விட்டதோ?'

அவர் மனசில் பல தொடர்பான நினைவுகள் கிளர்ந்து அவரை ஆட்கொண்டன.

ஒரு தடவை கனவு கண்டு அடித்துப் புரண்டு குழறி எழுந்தவளை அவர் தேற்றியபோது அவள் கூறிய வார்த்தைகள்...

அவள் படுக்கையருகே சென்ற அவர், அவள் முகத்தைத் தாபத்தோடு பார்த்து, "பிள்ளை ஜானகி, உன் மனசுக்குள் ஏதோ இருக்கு என்ன வந்தாலும் காரியமில்லை; மனந்திறந்து துணிந்து சொல்லு" என்று கேட்டிருந்தார்.

ஜானகி, 'அப்படி ஒன்றுமில்லை' என்று கூறுவது போல் தலையசைத்தாள்.

"அப்போ, ஏன் பிள்ளை அழுதனி?"

"காலையில் வந்துதே செய்தி, அதுதான்"

'பொன்ராசாவைக் கைது செய்ய, பொலிஸ் தேடி அலைகின்றது' என்று அன்று காலைப் பத்திரிகையில் வந்த

செய்தி அவருக்குத் தெரியும். அவர் சிரித்துக்கொண்டே, "அந்தச் செய்தி பொன்ராசாவைப் பற்றியது, உனது கணவரைப் பற்றியல்லவே" என்ருர்.

அதற்கு அவள் கூறிய பதில் தான் அவரை 'மலைக்க' வைத்தது.

"நான் அவரைப்பற்றி யோசிக்கவில்லை; பாவம், பொன்ராசாவை நினைக்கத்தான். வருத்தமாயிருக்கிறது"

'இது, திருமணம் செய்த ஒருபெண் வாயில் வரக் கூடிய வார்த்தையா? இப்பவும் அவன் சிந்தனையில் தான் இவள் மூழ்கியிருக்கிருளோ?'

"ஜானகி, கண்டிக்குச் சென்று வந்தபின் உனக்கு என்ன பயித்தியமா பிடித்திருக்கிறது?"

சற்றுக் 'கடுகடு'த்துக் கேட்டார் பொன்னையர்.

"எனக்குப் பயித்தியமில்லை. கியித்தியமுமில்லை. என்னை வீணுக அலட்டி உபத்திரப்படுத்த வேண்டாம்"

ஜானகி சினந்தாள். பொன்னையர் வாயடைத்து நின் ருர். அவர் மனசு வேகமாக அடித்துக் கொண்டது.

'இவள் ஓர் ஆண்பிள்ளையாகப் பிறந்திருந்தால் இந்தத் தவிப்பு எனக்கு வந்திருக்காதே'

அவர் நெஞ்சு அவருள் குதறியது. ஆயினும், தந்தை ஸ்தானத்திலும், தாய்ப்பாசத்திலும் அவளை அரவணைக் கின்ற பொறுப்பை உணர்ந்தார்.

'இவள் தாய் மட்டும் இன்று உயிரோடு இருப்பாளே யாஞல்...'

மனைவியின் நினைவு சூறையாக எழுந்து அவர் நெஞ் சைத் துருத்திற்று: கண்கள் கலங்கின; மனம் கரைந்து விம்மியது. 'என் உயிரோவியத் திலகமணி' என்று தேகங் குதற அழுதே விட்டார்.

"பிள்ளை ஜானகி, நீ கண்ணீர் விடவென்று உன் அம்மா எனக்குச் சொல்லவில்லை; அவள் உன் சந்தோஷ வாழ்வுக்கு என்னை அடைக்கலம் வைத்து விட்டுப் போன

வள். அப்படிப்பட்ட என்னை இப்போ கண்கலங்க வைக்கிறியே? அம்மா உயிரோடு இருந்தால் நீ என்னை இப்படியெல்லாம் சித்திரவதை செய்வாயா?''

அப்படிக் கேட்கும் போதே அவர் கண்களிலிருந்து 'பொலு பொலு'த்துக் கண்ணீர் கொட்டியது.

தந்தையின் தவிப்பையும் தாயின் ஆசைக்கனவுகளையும் நினைத்த மாத்திரத்தில், தன்னுள்ளடங்காத திமிறலோடு, ''ஆ, என்ர அம்மா!'' என்று பெருங் குரல் வைத்து அழுதாள், ஜானகி,

ஒருவருக்கொருவர் தேறுதலின்றித் தவித்துக் கொண்டு தந்தையும் புதல்வியும் அழுது தீர ஒரு நிமிஷம் எடுத்தது.

தனது மனசுள் அலைபாயும் நினைவுகளைச் சுதந்திரமாக வெளியிட்டுச் சுமையாற்றத் தன்னைப்பெற்ற அன்னை இப்பொழுது இல்லையே என்ற வினைதாபம் ஜானகி நெஞ்சை அப்போது ஊனித்துக் கொண்டது.

'உலகத்தின் சகல ஜீவாற்றுமக்களையும் பிரசவித்துப் பேணியவள் தாய். தாயின் நெஞ்சுக்குள்ளிருப்பது இதயமல்ல; அன்புத்தேனின் இரக்கவூற்றுச் சுரங்கம். இதில் சங்கமித்தவர்களே பாக்கியவாளர்; நானோ அந்தப் பாக்கியம் இல்லாத கறுமக்காறி...'

''அம்மா இருந்தால் எனக்கும் இவ்வளவு துன்பம் நேர்ந்திருக்காது''

புத்திரியின் வார்த்தைகள் அவரின் இதயத்தை வலுவாக ஊடுருவிக் குத்தின.

''அப்படியானால், நான் ஓர் இரக்கமில்லாத கொடுவினைக்காரனென்று நினைத்தாய்?''

கேட்கும் போதே அவர் தொண்டை 'கரகர'த்தது. நெஞ்சினுள் குமுறி எழுந்த பெருமூச்சு, பம்மி வெளியேறிற்று.

''நான் அப்படிச் சொல்லவில்லை. அம்மாபோல் பாசம் வைத்தளவிற்கு. என் மனசை உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லையே?''

இதற்குமேல் அவள் பேசவில்லை. அன்பு சுரந்த ஒரு தந்தையின் மனதைப் புண்படுத்தக் கூடாது என்ற பரிவோடு அவரை நோக்கினாள்.

"நீ வாய் திறந்து எதையும் சொன்னால்தானே புரிந்து கொள்ளலாம். சரி, உன் மனசுக்குள்ளே அப்படி என்னதான் இருக்கிறது, சொல்லு?'' என்று சிறு குழந்தைபோல் மகளிடம் கேட்டார்.

அவள் அப்பவும் தடுமாறினாள். 'அளவுக்கு மீறிய பாசமே சகல துன்பங்களுக்கும் காரணம்' என்று நினைத்த ஜானகி "நீங்கள்மட்டும் எனக்காக இப்படித் தவிக்காமலிருந்தால், நான் எப்பவோ என் குடும்ப வாழ்க்கைக்கு முழுக்குப் போட்டிருப்பேன்'' என்றாள்.

ஜானகியின் புதிரான வார்த்தைகளுக்கு அவர் மனசு அர்த்தம் தேட, அவர் இதயம் தானாக இடித்துக் கொண்டது. முகத்தில் சலிப்பு.

இதற்கு மேல் அவளிடம் எதையும் 'துருவி'க் கேட்க அவர் விரும்பவில்லை. என்னவோ விசாரிக்க எதையெல்லாமோ அர்த்தப் படுத்திப் புலம்பும் பெண்ணிடம் ஒன்றையும் தெரிந்து விடமுடியாது என்ற தீர்மானத்துக்கு வந்தார். ஆனால், அவர் மனசில் எழுந்த கேள்விகள் அவரை அமைதி கொள்ளவிடாமல் குடைந்து கொண்டிருந்தன.

முன்பு கண்டிக்குப் போய் வந்தால் எவ்வளவோ குதூகலமாயிருப்பாள். அங்குள்ள மக்களின் வாழ்க்கையை மலைநாட்டுப் பிரதேசத்தின் இயற்கைக் காட்சிகளையெல்லாம் வர்ணித்து மணிக் கணக்காகக் கதை சொல்வாள். இன்று? இன்ஸ்பெக்டரும் ஒரு வார்த்தை பேசாமல் 'டியூட்டி' க்குப் போய்விட்டாரே?

விரிவுரையாளர் சொன்ன வார்த்தைகளை அப்போது பொன்னையர் நினைத்துப்பார்த்தார்:

"ஜானகிக்கு நாங்கள் 'சடங்கு' செய்து வைத்தோம். ஆனால், அவளோ இன்னும் 'திருமணம்' புரியவில்லை'!

''என்னது, ஒன்றும் விளங்கவில்லையே?''

''ஜானகி சடங்கு செய்தது ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டரை, அவள் மனசுக்கு உவப்பான ஒருவரையல்ல''

''அப்படியென்றால்?''

''நாங்கள் அவள் வாழ்க்கையைப் பாழாக்கி விட்டோம்''

''ஏன், எப்படி?''

''பொன்ராசாவையே அவளுக்கு திருமணம் செய்து வைத்திருக்கவேண்டும்''

விரிவுரையாளர் அன்று சொன்னதையும் ஜானகி இன்று சஞ்சலிப்பதையும் வைத்து பொன்னையர் தராசு பிடித்தார்.

'சடுதி'யாக நாய் 'அவுக்' கென்று குரைத்தது.

இன்ஸ்பெக்டர் சிவலிங்கம் ஒரு 'சூட்கேஸ்' சகிதம் அவசரமாக வந்து கொண்டிருந்தார். வாசற்படி கடந்து போகும் போது அவர் கடைக்கண்கள் ஜானகியை மேய்ந்தன.

அவள் கன்னம் உப்பிப் போயிருந்தது. ஒன்றும் பேசாமல் மெதுவாகக் குசினிக்குள் சென்றாள்.

ஜானகி சாப்பாடு தயாரித்துக்கொள்ளும்வரை அவர் உன்னிப்பாகப் பார்த்துவிட்டு, சாப்பாட்டு அறையின் மேசையண்டை அவள் வரும்போது சிரித்தபடி சொன்னார்:

''எனக்கு இப்போ சாப்பாடு வேண்டாம்''

''ஏன்?''

''உள்ளே அந்தச் சூட்கேஸைத்திறந்து ஒரு போத்தல் எடுத்துக்கொண்டு வா''

''இன்று சம்பள நாளில்லையே?''

அவர் 'கடகட' வென்று சிரித்தார்.

''சிலவேளை நாம் சம்பளத்தையே எதிர்பார்ப்பதில்லை. அது தானாகவே 'கிம்பளமாக' வந்து விடுகிறது. ஒரு பொலிஸ் டிப்பாட்மெண்டில் அதிகாரியாக இருக்கிற

வரின் வீட்டுக்கு—உனக்கு இது கூடத் தெரியாதா? ஓ, நீதான் இப்போ வீட்டுப்பெண்ணாக இருப்பதில்லையே''

'வீட்டுப் பெண்ணாக இருப்பதில்லை'

இந்தக் குத்தல் ஜானகியை வலுவாகத் தாக்கியும், அவர் அந்த வார்த்தையை என்ன கருத்தோடு பிரயோகித்தார் என்பதிலேயே அவள் சிந்தனை மூழ்கிற்று.

'நான் வீட்டுப் பெண்ணாக இல்லாமல் உங்கள் கண்களுக்கு எப்படித்தெரிகிறேன்?' என்று விடுத்துக் கேட்க, அதற்கு அவர், 'நீ எனக்கல்ல, பொன்ராசனுக்குத்தான் வீட்டுக்காரி என்று எடுத்த எடுப்பில் பதிலளிப்பாராயின், அதுவே பெரும் பூகம்பத்தில் கொண்டுபோய்விடும்' என்று யூகித்தாள். என்றாலும், அவர் மனநிலையை அவர் வாயால் கேட்பதே உசிதம் என்ற ஓர் விபரீத நினைவு அவளைக் குடைந்தது.

''நான் உங்கள் வீட்டுப் பெண்ணாகயில்லாமல், வேறு எப்படி இருக்கிறேன்?''

ஓர் அசட்டுத் துணிவோடுதான் கேட்டாள்.

'நீ, உலக விவகாரக்காரி, வீட்டுக்காரியல்ல. உண்மையைச் சொல்வதென்றால், நீ அவன் பொன்ராசனுக்குத் தான் தோது' என்று சொல்ல உடனே அவர் வாய் உன்னியது. எடுத்த வாக்கில் அப்படி உதறி எடுத்துப் புட்டுக் காட்டினால், அந்தக் காட்டுதலே அவள் இதயத்தில் நீங்காது பதிந்து, அவளுக்கு ஒரு 'பிடி'யாகிவிடும் என்ற ஒருவித தடுமாற்றத்தில் சடுதி நேரம் தன்னுள் ளுழன்றவர், அந்தக்கருத்தினையே வேறு வார்த்தையில் பிரயோகித்தார்:

''கௌரவமாக ஒதுங்கி 'றெஸ்பெக்ற்'றாக வாழ முடியாத சில பயித்தியங்கள், வெறும் ஊதாரிகளையும் குழப்பக்காறரையும் புகழ்வதில்தான் இன்பங்காண்கின்றார்கள்''

சந்தேகமேயில்லை. அவர் பொன்ராசாவையே குறிவைத்துத் தாக்கினார் என்பதை ஜானகி துல்லியமாய்த்

தெரிந்து கொண்டாள். அவருக்கு இளக்காரம் காட்ட அவள் விரும்பாமல் முகத்திலறைந்தாற் போல் சொன்னாள்:

"ஒரு சிலர் தங்களிடம் செல்வத்தைக் குவித்து வைத்திருப்பதால்தான் பெரும்பாலோர் ஊதாரியானார்கள். தத்தாரிகளும், சுரண்டல் பசாசுகளும் உள்ளவரை 'ஊதாரி'களும் 'குழப்ப'க்காரரும் இருப்பார்கள்"

ஜானகி தன் நிலையிழந்தே உணர்ச்சி கொப்பளித்துப் பேசிய சத்தம் அறை முழுதும் கீச்சிட்டுக் கேட்டது.

இன்ஸ்பெக்டருக்கோ கோபம் வந்து விட்டது. மௌனமாக இருந்து முறைத்து ஒரு தடவை ஜானகியை 'நெருடி'ப் பார்த்தார்.

புருஷன் மனைவிக்குள் எழுந்த பிணக்கும், பீறுகின்ற பேச்சும் பொன்னையரைச் சிப்பிலியாட்டின. 'இந்த வாதங்கள் எங்கு கொண்டுபோய் விடுமோ?' என்றுபயந்த அவர்; இருவருக்குமிடையில் பேச்சைத் திசை திருப்பும் நோக்கில் அறைக்குள்ளே மெல்ல வந்து, "ஜானகி, இன்றைக்கு என்னவோ தடல்புடலாகச் சமைத்துக் கொண்டிருந்தாயே, விசேஷமாக என்ன குழம்பு வைத்தாய்?" என்று கேட்டார்; சற்று முன்னே நகர்ந்து, "அவர் சாப்பிட்டுவிட்டாரா" என வினவியபின், இன்ஸ்பெக்டரை மருவி நோக்கி, "தம்பி இன்னும் சாப்பாடு ஆகவில்லையாக்கும்?" என்று தானகவே மழுப்பினார்.

"இல்லை, சாப்பிடுவோம்" என்றார் இன்ஸ்பெக்டர்.

ஜானகி கண்களைச் சிமிட்டித் தந்தையை வெளியே நிற்குமாறு சைகை காட்டினாள். பொன்னையர் மெல்ல வெளியாகினார். அவர் வெளியானதும், இன்ஸ்பெக்டர் சாராயப் போத்தலைத் தாவி எடுத்துத் திறந்தார்.

ஜானகி ஒன்றும் பேசாமல் அவரின் கிருத்தியங்களைக் கவனித்தபடி நின்றாள்.

'இது ஒருநாளும் இல்லாத திருக்கூத்து'

தனக்குள் அவர் முணுமுணுத்த போதும், அவர் செய்கைக்கு அவள் துக்கித்ததாகவே தெரியவில்லை.

சொற்பவேலையில் சாராயம் சுமாராக வேலைசெய்யத் தொடங்கியது. அவரின் சிந்தனைகளும் அத்தோடு அலைபாயத் தொடங்கின. ஜானகியைப் பார்த்தார்... அவர் முகத்தில் அருவருப்புத் தட்டிற்று.

'எப்ப பார்த்தாலும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு 'மூதேவி' யாட்டம் நிற்கிறாளே?'

மனசுக்குள் புகைந்தார். அவளில் உண்டான மாற்றம் அவர் கோபத்தை அவ்வேளை கிளறிற்று. முன்பெல்லாம் அவர் 'டியூட்டி' முடிந்து வீட்டுக்கு வந்தவுடன் எப்படியெல்லாம் தடல்புடலாக வரவேற்பாள். இன்று?

யோசிக்க யோசிக்க ஈற்றில் விரிவுரையாளரில் தான் ஆத்திரம் எழுந்தது.

'பொன்ராசனும் அவன் சார்ந்த தொழிலாளர் இயக்கமும் நாட்டிலே செய்துவரும் கலாட்டாக்களுக்கு அளவே இல்லை. அப்படியிருந்தும் அவனுக்காக இந்த விரிவுரையாளரும் ஜானகியும் 'அப்புக்காத்துவேலை' பார்ப்பதன் நோக்கம் என்ன?'

கோபம் கொப்பளித்தது. ஜானகிக்குச் சவுக்கால் அடிக்கவேண்டும் போலிருந்தது. கையிலிருந்த 'சிகரெற்' அடித்துண்டுவரை கருகி அவர் விரல்களில் சுட்டபோது தான், அந்த உக்கிரமான சிந்தனையிலிருந்து விடுபட்டார். மன அழுந்தல் கெம்பிக்கொண்டிருந்தது.

குசினிப் பக்கம் எட்டிப் பார்த்து உரத்த குரலில் அழைத்தார்:

''ஏ ஜானகி இப்படி வா''

ஜானகி உடனே வருவதான அசுமாற்றம் இல்லை.

''ஏ ஜானகி, என்ன, காது மந்தமா?''

'அது அழைப்பல்ல; யமராஜ ஆர்ப்பாட்டம்'

ஜானகி இப்படி அர்த்தங் கற்பித்துக் கொண்டு அவர் அருகே வந்து காலாறவில்லை, 'உறுக்கி'ப் பார்த்தபடி

"'உனது விரிவுரையாளர் தந்தி கொடுத்து அழைத்தாரே; அது எதற்காகவென்று இப்பொழுது தான் தெரிகிறது. ஆனால், நீ எல்லாவற்றையும் மறைத்துவிட்டாய், இல்லையா?' என்று அதிரும் தொனியில் மிரட்டினார்.

ஜானகியின் தேகம் ஒரு பாட்டம் நடுங்கியது. நெஞ்சுப் பூணாரங்கள் கொலுக் கழன்றன. சற்று மனதைத் தைரியப்படுத்திக் கொண்டு சாவதானமாகக் கேட்டாள்:

"நான் எதை மறைத்தேன்?"

"எனக்கெதிராகச் செய்த 'சதி'யை!"

"ஆ, ஐயையோ, இதென்ன பேச்சு?"

ஏங்கி அழுகின்ற பாவனையில் கேரினாள் ஜானகி.

"என்ன பாசாங்கா காட்டுகிறாய்? உண்மையைச் சொல்: பொன்ராசன் இயக்கத்தையும் அவன் நடத்தும் போராட்டங்களையும் நீ ஆதரிக்கவில்லையா?"

ஜானகி எதிர்பாராத கேள்வி. மின்னலடித்த மாதிரி நெஞ்சு 'திடுக்'கிட அவள் அப்படியே மலாரடித்துப்போய் நின்றாள். வாய் திறந்து ஒரு வாக்குச் சொல்ல நாக்கு எழவில்லை. கண்கள் பேந்தப் பேந்த முழிசினாள்.

"என்னடி முழியைப் பிதுக்கிறாய். வாய் திறந்து சொல்லடி, அப்படித்தானே?"

"'என்ன' டி'—சொல்ல' டி' என்று 'டி' வைத்து அழுத்தி வந்த வாக்கிய உச்சாடனங்கள் அவள் மேனியை சனித்துக் குதறி எடுத்தன. அவரின் அழுங்குப் பிடிக் கேள்விகளோ அவளை நெட்டுருவிக் கொண்டிருந்தன."

'மனச்சாட்சிக்கு விரோதமாக அதை மறுத்து உத்தாரம் சொல்வது எப்படி?'

ஜானகி தவித்துக்கொண்டிருந்தாள்.

அதைக் கவனித்த பொன்னையர் பதகளித்துக்கொண்டு எதையோ தேடுவதுபோல் மீண்டும் உள்ளேவந்து," பிள்ளை ஜானகி, என்ன இம்மட்டு நேரமாகியும் சாப்பிட வில்லையா?" என்று கேட்டவர், பின்பு அவசரமாக

''அந்தக் கணக்குக் கொப்பியை எங்கே வைத்தாய்?'' என்று கேட்டவண்ணம் இன்ஸ்பெக்டர் சிவலிங்கத்தையே நைந்து பார்த்துச் சிரித்தார்.

அந்தப் பார்வையில், 'என் ஜானகி தாயில்லாப் பெண். என் உயிரே அவள்தான். அவளை மன்னித்து விடுங்கள்' என்று இரந்து கேட்பதுபோலிருந்தது.

பொன்னையர் பரிதாபத்தைப் புரிந்து கொண்ட இன்ஸ்பெக்டர் ஒன்றும் பேசாமல் அமைதியாக இருந்தார். அவர் மனசு சற்று அடங்கிற்று.

தந்தையின் சாமர்த்தியத்தைப் புரிந்து கொண்ட ஜானகி தனக்குள் பிரலாபிக்கலாஞள்:

'நான் கண்ணீர் விட்டு வாழ வேண்டுமென்று ஆகி விட்டது. என்னைப் பெற்று வளர்த்த குற்றத்திற்காக என் அப்பாவும் என்னேடு கண்கலங்கவேண்டியிருக்கே?'

இன்ஸ்பெக்டர் பொன்னையரில் கவனம் செலுத்திக் கொண்டிருக்க, ஜானகி மெதுவாகத் திரும்பி வெளியே வந்தாள்.

அப்போது அவள் கண்கள் கரைந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

என்ற போதும் உள்ளத்திலுள்ளே ஒருவித உற்சாகம் மேலிட, வெறித்தனமாக நடந்தாள் ஜானகி.

அவள் மனசில் எழுந்த சிந்தனை அலைகள் அவளுள் தெளிந்தன. நெஞ்சினில் ஏதோ ஓர் உறுதி வஜ்ஜிரித்துக் கொண்டது.

'நான் இனி இவரோடு வாழ்வதில் ஒருவித அர்த்தமுமில்லை; யாருக்கும் பிரயோஜனமும் இல்லை'

அவள் தனக்குள் தீர்மானித்துக் கொண்டு எதிரேயுள்ள வயற்பரப்பைப் பார்த்தாள்.

அப்போது அவள் நெஞ்சு கமறிக் கொண்டிருந்தது.

## 12.

பொலிஸ் கைது செய்து கொண்டு சென்றபின் பொன்ராசாவுக்கு என்ன நேர்ந்தது, காயப்பட்ட தொழிலாளர் நிலை எப்படி என்ற தகவல் தெரியாமல் ஜானகி துடித்துக் கொண்டிருந்தாள்.

''யானை தன் கையால் மண்ணை வாரிப் போட்ட மாதிரி, இவள் தானே தன் குடும்பத்தை நாசப்படுத்துகின்றளே?' என்ற துயரில் ஆழ்ந்து கிடந்தார் பொன்னையர்.

தானுண்டு தன் குடும்பச் சோலியுண்டென்று இருக்க விடாது அவளைத் தடுத்த இலட்சியப் பித்தின் விசித்திரத்தை ஒருகணம் நினைத்தார். அவரிடம் பரிதாபம், ஆத்திரம், வெறுப்பு ஆகிய உணர்வுகள் விரவி ஏகமாய்த் தலைகாட்டின.

'கண்டறியாத இலட்சியமும் மண்ணாங்கட்டியும்'

அவர் வாய்க்குள் பொரிந்து 'புறுபுறு'த்தார்.

இன்ஸ்பெக்டர் சிவலிங்கம் இப்பொழுது முன் போலில்லை. அவரின் 'கடுகடு'ப்பையும் கண்டிப்பையும் கவனித்தபோது பொன்னையருக்கு ஜானகியின் எதிர்கால நம்பிக்கையே தளர்ந்துவிட்டது.

ஆண்டாண்டு காலமாக நாட்டில் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், அடக்குமுறை மக்களைச் சித்திரவதைக்குள்ளாக்கியிருப்பதை எண்ணற்ற நிகழ்ச்சிகள் மூலம் அவரும் அறிந்து கொண்டவர். இருந்தும், அவருக்கு இவற்றின் உண்மையான தாற்பரியத்தை அறிவதில் அக்கறை இருந்ததில்லை. ஆதலால், ஜானகி அவர் பேச்சையும் அதிகம் காதில் போடுவதில்லை.

ஆனால், இவற்றை எதிர்த்து நிகழும் போராட்டங்களுக்கு பொன்ராசா தலைமை தாங்கி நடத்தும் அரசியல் கிளர்ச்சிகளும், இப்போது நாட்டையே போர்க்களமாக

மாற்றிவிட்டன. இதை நினைக்க பொன்னையருக்கு நடுக்க மெடுத்தது.

ஊர்ப்போராட்டம் ஒரு பக்கமும், அதன் எழுச்சிப் போர் வீட்டிலேயும் பிரதிபலிக்கின்ற கோலம் அவர் மனசில் பெரும் புயலைக் கிளப்பிவிட்டது. இது ஓர் பூகம்பம் போல் முழு நாடுமே கொந்தளித்துக் கொண்டிருப்பதாக அவருக்குத் தோன்றியது. இந்தப் போராட்டமும் அதன் வடிவமும் உச்ச நிலையடைந்து, அதன் உபாயங்கள் புதிய வார்ப்புப்பெற்று வீறு கொண்டு திகழ்வதை அவர் உணர்ந்தார். அந்தக் கொந்தளிப்பின் பிரதிபலிப்பு மனிதர்களின் அன்றாட வாழ்க்கையில் எப்படி ஊடுருவுகின்றது என்பதை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

'இப்போது அமைதியாகச் சும்மா இருக்க முடிய வில்லையே?'

அவருக்கு பொன்ராசன் மேல் அனல் பற்றிய கோபம் கனன்றது.

'எங்கள் இன்ஸ்பெக்டர் சிவலிங்கம் சொன்ன மாதிரி பொன்ராசனைப் பிடித்து உள்ளே தள்ளிக் 'கம்பி எண்ண' வைத்து விட்டால் எல்லாம் சரியாகிவிடும்'

சற்று நேரங் கழித்து இந்த வார்த்தையை அவர் தமது மனசுள்ளே உச்சரித்தபோது, அதன் விளைவு எவ்வளவு பயங்கரமானது என்பதை அடுத்த கணம் உணர்ந்தார்.

'அவனை கூட்டுக்குள்ளே தள்ளிவிட்டால் எல்லாம் சரியாகிவிடுமா?'

இப்படி ஓர் கேள்வி மனசைக் கிள்ளிய போதுதான் அவர் மனசில் அந்தச் சம்பவம் நிழலாடிற்று.

யாழ்ப்பாணம்—மாவிட்டபுரக் கந்தசாமி கோயில் திருவிழாவுக்கு ஜானகியை அழைத்துப் போயிருந்தார் பொன்னையர்.

ஜனங்கள் அன்று சிறுசிறு கூட்டங்களாக நின்று கலவரப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் முகங்களில்

உணர்ச்சியும் ஆவேசமும் கொப்பளித்துக் கொண்டிருந் தன. பக்திப் பிரவாகத்தைக் காணவில்லை.

உள்ளும் புறமுமாகக் கோயிலைச் சுற்றிப் பொலிஸ் படை குண்டாந்தடிகள் சகிதம் 'காவல்' புரிந்து கொண் டிருந்தது. கோயிலின் வெளி வாசல் கதவு சிக்காராய்ப் பூட்டப்பட்டுக் கிடந்தது.

சிறைக் கைதிகளைக் காவல் புரியும் `காடர்'கள் போல் பொலிஸ் கோயிலைச் சிறைக் கூடமாக்கி முருகன் சிலைக்குக் காவல் போட்ட விறுத்தத்தை ஜானகி அன்று தான் கண் டாள்.

முகப்பு வீதியைச் சுற்றி முட்கம்பிகளால் போட்ட நீளமான வேலிக்குள் கோயில் சிறைப்பட்டுக் கிடந்தது.

ஜானகி திகைத்து நின்று இந்தப் 'புதுமை'களைக் கவ னித்து விட்டு, தந்தையிடமே கேட்டாள்.

''இந்தச் சனங்கள் ஏன் வெளியே நிற்குது?''

''அந்தாக்கள் 'தாழ்த்தப்பட்ட' சனம்''

பொன்னையர் பாடம் ஒப்புவிப்பது போல் கூறினார்.

''தாழ்த்தப்பட்டதென்றால்?''

''அவை, குறைஞ்ச சாதி''

''என்னத்தால் குறைஞ்சவை'''

பொன்னையர் முழுசினார். அவளுக்குச் சிரிப்பாக வந் தது.

அப்போது அந்தத் 'தாழ்த்தப்பட்ட' வர்களுக்குள் பொன்ராசாவின் தலைக்கறுப்புத் தெரிந்தது.

''அப்படியானால், அங்கே அவர்களோடு பொன்ராசா நிற்கிறது தெரிகிறதே?''

அவர் கூற்றை மறுக்கும் தோறணையில் சற்றுக் கிண் டலாகக் கேட்டாள் ஜானகி.

பொன்னையர் தர்மசங்கடத்திற்குள்ளானார். ஆனா லும், சமாளிக்கத் தொடங்கினார்.

''அவன் அவங்களுக்காக வாதாடி உயர்ந்த சாதி மான்களுக்கும் 'கெட்ட பெயர்' வாங்கிக் கொடுக்க

வெளிக்கிட்ட வப்பி; 'பெரியவர்'களோடு மோதிக் கொள்ள வந்த மொக்கன்''

'யார் பொன்ராசாவா வப்பி; அவனு மொக்கன்?' என்று கேட்க அவள் வாயுன்னியது, வெளியே நின்ற கும் பலிலிருந்து ஒரு வாலிபன் ஓடி வந்து முட்கம்பி வேலியில் கைபோட்டு இழுத்தான்.

அதைக் கண்ட பொலிஸ் படை விரைந்து கூடி முறைத்துக் கொண்டு பார்த்தது.

''டேய் பண்டி, ஏண்டா வேலியை இழுத்தாய்?''

அட்டகாசித்துத் திடும்பாகக் கேட்டது ஒரு பொலிஸ்.

''இது வேலியல்ல; குறுக்கே போட்ட முள்ளுக்கம்பி''

அழுத்தமாகச் சொன்னுன் அந்த வாலிபன்.

''ஏன் அதை இழுத்தனி?''

புதுசாக வெருட்டினுன் இன்னொரு பொலிஸ்.

''நான் இழுக்கவில்லை; அகற்றிக்கொண்டிருக்கின்றேன்''

பொலிஸுக்கும் இளைஞனுக்குமிடையில் வாக்குவாதம் முற்றவே ஜனங்கள் கூச்சலிட்டுக் கெம்பிவிட்டார்கள்.

தூரத்தே நின்று கவனித்துக் கொண்டிருந்த பொன் ராசா துடித்துப் பாய்ந்து வந்து அங்கே குதித்தான்.

அவன் பாய்ச்சலைக் கண்ட பொலிஸ், அவனை ஏற இறங்கப் பார்த்து, ''ஏய், உனக்கு இங்கே என்ன வேலை?'' என்று உரக்கக் கனைத்தது.

''இதே கேள்வியைத்தான் நானும் கேட்கிறேன்; பொலிஸுக்கு இங்கே என்ன வேலை?''

''முள்ளுக்கம்பிபோட்டிருக்கிறதே,தெரியவில்லையா?''

''நன்றகத் தெரியும். முன்பு ஊருக்குள்ளே வேலி போட்டுத் தோற்ற பிரிவினைவாதிகள் இப்போது கோயி லுக்கு வேலி போட்டு நாட்டையே கூறுபோடப் பார்க் கிருர்கள். ஆனுல், இந்தத் துரும்பை நீண்ட காலம் போட்டு ஏமாற்ற முடியாது''

''டே பண்டி, 'டாம்பூள் ருஸ்கல்' என்ன, அதிகமாக வாய் போடுகிருய்?''

அருகே நின்ற பொலிஸ் துள்ளிக் குதித்தார்.

அந்தக் க்ஷணத்தில் பொலிஸ் பட்டாளம் 'பெற்றன்' பொல்லுகளைத் தயார் படுத்துவதைக் கண்ட பொன்ராசா, உரத்துக் கத்தினான்.

''நாங்கள் நிராயுதபாணிகளான சமாதான வாதிகள். எங்களில் பலாத்காரம் பாவித்தால் பின்பு, மக்கள் பொங்கி எழுந்து பலாத்காரர்களாக மாறுவார்கள்!''

கனைத்த பொலிஸ் சவால் விடுவதுபோல் கேட்டான்.

''அதாவது, 'வலோற்காரம்'; அப்படியா? எங்கே, முடிந்தால் அதைச் செய்து காட்டு பார்க்கலாம்?''

பொன்ராசா அமைதியாக, உறுதியாக நின்று ஒரு தடவை வெளியே நின்ற ஜனத்திரளைப் பார்த்தான்.

''அடக்கப்பட்டவர்கள் சகல கொடுமைகளைச் சகித்து மரத்துப் போனவர்கள். அவர்கள் கெம்பிவிட்டால் எந்த ஆயுதங்களாலும் அடக்க முடியாது. அவர்களிடம் இருப்பது விடுதலை உணர்வு மட்டும்தான். அதோ சாட்சி...''

வீதியை அவன் சுட்டிக் காட்டினான்.

ஜன நெரிசல் அப்போது திமிலோகப்பட்டது.

இதற்குள் அந்த முள்ளுக்கம்பி வேலி எப்படிச் சின்னாபின்னமாயிற்று என்பதை எவரும் கவனிக்கவில்லை. பொன்ராசா சுட்டிக் காட்டிய பின்தான் பொலிஸ் 'திடுக்' கிட்டது.

கோயில் வீதி ஏக வெளியாகிவிட்டது. சகல கட்டுக் கோப்புகளையும் உடைத்துக் கொண்டு எழுந்த பலாத்கார நிகழ்ச்சிகளும், பொன்ராசா கர்ஜித்த குரலும், பொன்னையர் காதுகளில் இப்பவும் ஒலித்துக் கொண்டேயிருந்தன.

'அடக்கு முறைகளால் எதையும் சாதிக்க முடியாது' ஓர் புதிய ஞானம் பொன்னையருக்கு இப்போது உதித்தது.

அவர் கண்கள் ஜானகியைத் தேடின.

அவளை அறைக்குள் காணவில்லை. குசினிப் பக்கம் எட்டிப் பார்த்தார். அங்கேயும் இல்லை. எல்லா அறைகளையும் திறந்து பார்த்தார். ஏமாற்றம்தான். வீடும் வெறிச்

சோடிக் கிடந்தது. விபரீத நினைவுகள் அவரிடம் தலை தூக்கின.

'இந்தக் காலத்துப் பெண்கள் புத்தியிழந்து உணர்ச்சிக்கு அடிமையான பொம்மைகள். சிறு தாக்கத்தையே சகிக்காமல் தங்களையே அளித்துக் கொள்பவர்கள்...'

இதற்கு மேல் அவர் கற்பனை ஓட மறுத்தது; அவரில் ஓடிய நினைவும் அறுந்தது.

'புருஷன் பெண்சாதிக்குள் நேற்று நடந்த தகராறு தான் வினையாக வந்து விட்டதோ?'

'காக்கி அணிந்தபின் சில வேளை மனிதன் மிருகமாகிறான்' என்று விரிவுரையாளர் இராமசாமி சொல்லியிருந்தாரே, அது எவ்வளவு உண்மை என்பதை இப்போது தான் பொன்னையர் நேரில் கண்டார். 'இல்லாவிடில், தாயில்லாப் பெண் ஜானகியை இவர் இதமாக நடத்தாமல் எந்த நேரமும் முறைத்துக் கொள்வாரா?'

அவர் இதயம் ஒரு தாயின் பாசத்தோடு பதறியது: உடல் முழுவதும் அழல் எடுத்தது. வாய் திறந்து ஒரு பாட்டம் குரல் வைத்து அழவேண்டும் போல் தோன்றியது. அவரால் அழமுடியவில்லை; அழாமலிருக்கவும் முடியவில்லை; கொப்பளம் போல் நெஞ்சு கொதித்தது.

'பெண்ணாய்ப் பிறப்பது பாவம்; பெண்ணோடு கூடிப் பிறப்பதும் பாவம். பெண்ணைப் பெறுவதோ மகா பாவம்'

விசனம் அவரை ஆட்கொண்டது. அந்தப் பாவத்தைப் புரிந்த குற்றத்திற்காக இந்தப் புண்ணியவதியைத் தேடி அலைந்தது அவர் நெஞ்சம்.

'கக்கூஸ் பக்கம் போயிருப்பாளோ?'

வீட்டின் பின்புறமாகச் சென்று மலசலகூடக் கதவைப் பார்த்தார். அது மூடிக் கிடந்தது. கதவோரமாக நின்று ஒரு பாட்டம் செருமினார். ஒரு சந்தடியும் இல்லை. இரண்டு தடவை காறித் துப்பினார். அப்பவும் அசுமாற்றத்தைக் காணவில்லை. கடைசியாக மெல்லிய குரலில் அழைத்தார்.

"பிள்ளை ஜானகி?"

மறுமொழி இல்லை.

அவர் நெஞ்சு 'பக்'கென்று குமைந்தது.

'ஐயோ நான் என்ன செய்ய?'

மனம் பதகளிக்க, முன்னொருநாள் தேடியது போல் கிணற்றுப் பக்கம் விரைந்து சென்று எட்டிப் பார்த்தார். தண்ணீர் சலனமின்றி அமைதியாகத் தெரிந்தது.

'தற்கொலை செய்திருக்கமாட்டாள். அதை அவள் கோழைத்தனமாக எண்ணுபவள்'

தனக்குள் உறுதி பூண்டவராய், திரும்பி வந்து வீட்டைப் பூட்டிச் சாவியை இடுப்பில் செருகினார். சால்வையை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு கிளம்பினார்.

'பொலிஸ் ஸ்ரேஷனுக்குப் போய்ப் பார்த்து வருவோம்'

'கேற்'றைத் திறந்து கொழுக்கி மாட்டத் திரும்பிய போது, சுவரில் ஏகமாய்க் கிறுக்கி எழுதிய வாசகங்கள் அவர் கண்ணில் பட்டன.

'பொலிஸ் அட்டூழியம் ஒழிக''

'தோழர் பொன்ராசாவை விடுதலை செய்!'

'முதலாளித்துவக் கோட்டையை நொறுக்குவோம்!'

'தோழர் பொன்ராசா வாழ்க!'

ஆத்திரம் பீறிட்டுக் கிளம்பிற்று.

''வம்பில பிறந்த எளிய காவாலியள். சுவரெல்லாம் கண்டபடி கிறுக்கிப் போட்டுதுகள்''

ஒரு பாட்டம் புறுபுறுத்துக் கொண்டு, ஒரு கந்தல் துணியை எடுத்து வந்து சுலோகங்களை அழிக்கலானார்.

''மாஸ்கோவில் மழையென்றால் கம்யூனிஸ்டுகள் கொழும்பிலே குடை பிடிப்பார்கள். இல்லாவிட்டால் தோட்டக்காட்டாரோடு சேர்ந்து கிளர்ச்சி பண்ணின பொன்ராசனை அங்கே பொலிஸ் பிடிக்க, இங்கே யாழ்ப்பாணத்துப் பொடியன்கள் எங்கள் இன்ஸ்பெக்டர் வீட்டுச் சுவரெல்லாம் கிறுக்கித் தள்ளுவான்களா?''

நிமிர்ந்தபோது அவர் பக்கத்தே ஓர் ஆளரவமும், தொடர்ந்து ஒரு பெண் குரலும் கேட்டன.

''அந்த எழுத்துக்களை அழிக்க வேண்டாம்''

நெஞ்சு கமாரிட, ஜானகியைப் போல் குரல் வைத்த அந்தப் பெண்ணைத் திரும்பிப் பார்த்தார்.

அவள், அவரின் செல்வக் குமாரத்தி ஜானகியேதான்.

ஆனந்தம் தாங்க முடியவில்லை. அவளைக்கண்ட திருப்தியோடு திரும்பி வீட்டுக்குச் சென்றார்.

விருந்தைப் படியில் ஏறியதும், ''பிள்ளை, நீ ஏன் அப்படிச் சொன்னாய்? சுவர் எதுவும் அசிங்கமாயிருக்கிறதே, இன்ஸ்பெக்டர் கண்டால் நெருப்புக் கக்குவாரல்லவா'' என்றார் பொன்னையர்.

''இன்று ஒன்றை அழித்தால் நாளைக்கு ஒன்பது சுலோகம் எழுதப்படும். இது வெறும் கிறுக்கலல்ல; பொங்கி எழுந்த மக்களின் கொந்தளிப்பு'' என்றாள் ஜானகி.

''அதுக்கு வேறு இடம் இல்லையா; ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டரின் வீட்டுச் சுவரிலா எழுதுவது?''

இதற்கு அவள் பதில் சொல்லவில்லை. அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பார்வை, 'இதுதான் அப்படி எழுதுவதற்குப் பொருத்தமான இடம்' என்று கூறுவதுபோலிருந்தது.

பொன்னையருக்கு வள்ளீசாக 'விஷயம்' புரிந்து விட்டது. ஆத்திரம் தலை தூக்கிற்று.

''ஜானகி, நீ உன் மனசுக்குள்ளே என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாய்; இதெல்லாம் என்ன கூத்து?''

''இது கூத்தல்ல; கொம்மாளமுமல்ல, வாழ்க்கைப் பிரச்சினை''

''உனக்கு வாழ்க்கையிலே என்ன குறை?''

''இந்த வாழ்க்கையே எனக்குக் குறைதான். இந்த நரக வேதனை இனி எனக்கு வேண்டாம்...!''

'அவள் கடைசியாகத் தூக்கியெறிந்த வார்த்தைக்கு என்ன அர்த்தம்?' என்று அவர் மூளை அப்போது அகராதி தேடியலைந்தது.

'ஒரு வேளை இவனுக்கும் பொன்ராசனுக்கும்...?'

அவர் மனசு இதற்குமேல் கற்பனை பண்ணவே கூசியது.

'இவளால் இனி என் மானமே போய்விடும் போலிருக்கிறதே'

அவள் வாய் திறந்து கூறுவதைத் தானே துணிந்து வெட்டொன்று துண்டு இரண்டாகக் கேட்டால் என்ன என்று ஓர் விபரீத நினைவு தலையெடுத்தது. நெஞ்சு பொறுக்கச் செருமிக் கொண்டு அவளைப் பார்த்தார்.

''ஜானகி, உள்ளத்தைச் சொல்லு. உனக்கு இன்ஸ்பெக்டரிலே இப்போ வெறுப்பாகவிருக்கிறது, அப்படித் தானே?''

''ஓம். இப்பவல்ல, எப்பவும்தான்!''

''அப்போ, நீ பொன்ராசாவை...?''

இப்படி அவர் வாயுன்னும் போதே, தனது சுய நினைவிழந்து, 'சளார் சளார்' என்று அவள் கன்னத்திலே நாலைந்து தடவை மூசி மூசி அறைந்தார். அறைந்துவிட்டு, ''மானங்கெட்ட நாயே'' என்று உரக்கக் கத்திவிட்டார்.

ஜானகி அழவில்லை; அசையவுமில்லை. கன்னங்களைப் பொத்திப் பிடித்துக் கொண்டு சுவரோடு சாய்ந்து நின்றாள்.

அவள் இதயம் மண்ணில் தோன்றிய போராட்டங்களில் அப்போது சங்கமித்துக் கொண்டிருந்தது.

பொன்னையர் அவளைத் தின்று சுக்குவதுபோல் வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார். இருந்தும், அவர் உடம்பு அரவந் தீண்டியவன் போல் பதகளிக்கத் தொடங்கியது; அவர் மனசும் அவருள் கருவியது.

'மானங்கெட்ட நாயே, என் முன் நில்லாதே போ!'

# 13.

சுதந்திர ஜீவிகளாய்த் திரிந்த ஜாதிவெறியர்கள், பதுக்கல் பேர்வழிகள், சுரண்டற்காரர் 'திடீ'ரென்று ஆமை உள்ளிழுத்த தலைபோல் மர்மவாசிகளாகியதால் எந்த வேளை என்ன நிகழும் என்று சொல்லமுடியாது ஜனங்கள் பேதலித்திருந்தார்கள்.

தொழிலாளர், விவசாயிகள், குடிசை வாழ் அன்றுடங் காய்ச்சிகள் போராட்ட வீறு கொண்டு கிராமத்து வீதிகளி லும் பிரசித்த நகரச் சந்திகளிலும் சஞ்சரிக்கத் தொடங் கினர். யாழ்ப்பாணந் தொட்டு மாத்தறை ஈருக எங்கும் ஒரே பதட்ட நிலையே காணப்பட்டது.

இந்தத் தருவாயில் பொன்ராசா பற்றிய விபரீதச் செய்திகளும் ஓயாமல் காதில் விழுந்துகொண்டிருந்தன. 'அவன் என்ன ஆனுன்?' என்றே சரியாகத் தெரியவில்லை.

ஜானகி இதனுல் இருப்புக் கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தாள்.

பொன்னையர் நேற்று அவள் கன்னத்தில் அறைந்த அறைகளெல்லாம் இப்போது அவளுக்குப் புதிய நோவு கண்டு சுணைப்பது போலிருந்தது.

'தந்தையின் பாசம் எவ்வளவுதான் உன்னதமாயிருப் பினும் அது தாயின் ஓர் அணைப்பிற்கு ஈடாகாது.'

ஜானகி வாய்விட்டே தேம்பி அழுதாள்.

'நேற்று அந்தச் சுவரிலே எழுதிய சுலோகங்கள் யாருடைய கிறுக்குத்தனமாயிருக்கும்?'

அவள் மனசு அதிலே பூதாகரித்தது. அந்தச்சுலோகங் களின் அர்த்தபுஷ்டிகள் அவள் மனசை ஆகர்ஷித்த போதும் அத்தகைய கிறுக்கல் வேலைகளில் அவளுக்கு வெறுப்பே தட்டியது.

'தொழிலாள வர்க்க சக்தியில் நம்பிக்கையிழந்தவர் களே தமது ஆற்ருமையை மறைக்க இப்படிப் புரட்சிச்

சுலோகங்களை ஓயாமல் மீட்டுகின்றனர். உண்மையான புரட்சிவாதிகள் வர்க்க இணைப்புடன் தமது எதிரிகளோடு சமர் புரியும் வீரர்களாயிருக்கவேண்டும். அதைவிட்டு மறைந்திருந்து தங்கள் ஆசைக் கனவுகளைச் சுவர்களிலே கிறுக்கித் தள்ளுவதால் என்ன பயன்?'

வெறுப்போடு சிந்திக்கலானாள் ஜானகி. ஆயினும், அந்த வாசகங்கள் தனது மனசைக் கவர்ந்துகொண்டதை அவள் உணர்ந்தாள். அப்போது அவளுக்கு பொன்னையரில் வெறுப்புத் தட்டிற்று.

பொன்னையர் புத்திரி பாசத்தினால் தவிக்கின்ற கோலமும் 'மனைவி' என்ற ஸ்தானத்தில் வைத்துத் தன்னிச்சை கொண்டு சிவலிங்கம் தன்னை இங்கிதைஷப்படுத்துகின்ற கோரமும், தொழிலாளர் இயக்க சக்தியில் திரண்டு மக்கள் விடுதலை வேட்கையோடு போராடுகின்ற காட்சிகளும், அப் போராட்ட சக்திகளோடு சங்கமித்த விரிவுரையாளர்—பொன்ராசாவின் தோற்றங்களும் அவள் மனக் கண்ணில் வலை பின்னித் தெரிந்தன.

அந்த இரு வர்க்கமுனைத் தோற்றங்கள்...?

சிவலிங்கமும் பொன்னையரும் நரகத்தின் பூதங்களாக வந்து உலக ஜீவராசிகளை வதம் செய்வது போலவும், பொன்ராசாவும் விரிவுரையாளரும் பூமியில் தோன்றி அவர்களுடன் போரிடும் தேவர்களாகவும் பிரமை பூண்டு அவள் மனசை வீறுகொள்ளச் செய்தன.

தந்தையும் கணவரும் தன்னைப்பற்றித் தவறாக எடை போட்டு விபரீத முடிவுகளுக்கு வந்திருக்கும்போது, தான் மட்டும் எந்தத் தீர்மானமும் எடுக்காமல் ஊமையாக விருப்பது ஆபத்தைக்கூட வருவிக்கும் என்று ஒருகணம் சிந்தித்தாள்.

'ஓர் அதிகாரி மனைவியாக வாழ்ந்து சகல சுதந்திரங்களையும் அனுபவிக்கலாம்' என்ற அவள் மனக்கோட்டை அப்போது சிதறுண்டு நொறுங்கியது. அவரோடு இணைந்த அந்த வாழ்க்கை ஓர் அதிகார வரம்பிற்குள்ளாயிருந்ததே

யன்றி அன்பின் பிணைப்பாக ஒரு நாள் கூடத் திகழ்ந்த தில்லை என்பதை ஒவ்வோர் சம்பவங்களும் அவளுக்குக் கட்டியங் கூறின. இலட்சியங்கள் இருமுனையாக முரண் பட்டபோது, குடும்ப வாழ்க்கை என்ற பந்தங்கூட இனி ஒரு போர்முனையாகவே மாறும் என்று அவளுக்குப் புலனா கியது.

தனது சித்தாந்த இலட்சியத்துக்கு அதே களத்தில் நின்று நியாயம் கூறமுடியாமல் பேடித்தனமாக சிவலிங் கம் சொன்ன அசிங்க வார்த்தைகளை அப்போது ஜானகி நினைவு கூர்ந்தாள்.

"பொன்ராசன் இயக்கத்தையும் அவன் போராட்டங் களையும் ஆதரிக்கிறியல்லவா? உனக்கும் அவனுக்கும் 'ஏதோ' இருக்கு. என்னடி, அப்படித்தானே?"

'சுத்தமான போர்வீரன் முதுகிலே பேடித்தனமாக மறைந்து நின்று ஈட்டியால் குத்திய பெருங்கோழை.'

அன்று அவர் சொன்ன வார்த்தைக்கு இன்று அவள் இப்படி அர்த்தங் கூறிப் புழுங்கினாள் ஜானகி.

'இந்த முரட்டு ஜென்மத்தோடு எனக்கு இனி ஒரு வாழ்வா?' சீ, இவரும் ஒரு மனுஷனா? தா...ம்... எங்கேயாவது கிளம்பிப் போய்விடுவோமா?'

முகம் சுழித்தது. ஒரு விபரீத யோசனை அப்போது உதித்தது.

'எங்கே போவது?'

மனம் மறுபாட்டம் இடித்தது.

'விரிவுரையாளர் வீட்டுக்கு?'

இந்தத் தீர்மானம் எடுத்தபோது அவள் மனம் ஒரு வாறு சாந்தி கொள்ளலாயிற்று.

'என்றாலும், வாழ்ந்த வீட்டை விட்டு ஒரு பெண் கிளம் பினால் அதன் அர்த்தம் என்ன; அவளைப் பற்றி உலகம் என்ன சொல்லும்?'

ஏலவே பொன்னையரும் சிவலிங்கமும் அதற்கு அடி எடுத்து வைத்தாற்போல் 'தொடுத்து' வைத்துக் கட்டிய கதைகள் ஆகவும் அவள் சிந்தனையைக் கிளறின.

இந்த நிலையில் விரிவுரையாளரிடம் போனாலும் 'பொன்ராசனுடன் ஜானகி கூடிக்கொண்டு ஓடிவிட்டாள்' என்றே ஊர் வாய்கள் 'பத்தினிப் புராணம்' பாடும் என்று நினைத்தாள்.

அப்படி நினைத்தபோதுதான் 'கைதான பொன்ராசாவுக்கு என்ன நடந்தது?' என்ற தகவல் புலனாகாதிருப்பதை உணர்ந்தாள்.

அவள் நெஞ்சு வேகமாக அடித்துக்கொண்டது.

பல நாடுகளில் பொலிஸ் கையில் சிக்கிய எத்தனையோ அரசியல்வாதிகள் சித்திரவதை செய்யப்பட்டு இறந்து போன கோர நிகழ்ச்சிகள் அவளுக்குத் தெரியும். பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட தங்கள் கணவன்மார்கள் வீட்டுக்குத் திரும்பாமல் இறந்த செய்தி கேட்டுத் தாலி அறுத்து அலறி அழுத எத்தனையோ பெண்களின் சோகக் குரல்கள் இன்னும் ஜானகி செவிகளில் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன.

மலையகத்தில் தொழிலாளர் மீது பொலிஸ் நடத்திய குண்டாந்தடிப் பிரயோகத்தினால் ஆஸ்பத்திரியிலே குற்றுயிராகச் சேர்க்கப்பட்டவர்களையும் கைதான பொன்ராசாவையும் உடனே போய்ப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் அன்று சிவலிங்கத்தின் கெடுபிடியால் பாழாய்ப் போயிருந்தது. அந்த ஆவல் இன்னும் ஜானகியில் தணியாமலே கிளர்ந்து கொண்டிருந்தது.

'முதல் விரிவுரையாளர் வீட்டுக்குப் போய் அடுத்த நடவடிக்கை பற்றி யோசிக்கலாம்.'

இறுதியாக ஓர் தீர்மானம் இப்படி இடித்துக் கூறிற்று. பிறகு இதைவிட வேறு ஒரு சிந்தனையும் அவளுக்கு ஓடவில்லை.

மெல்ல எழுந்து அறைக்குள் சென்று, சுவரில் மாட்டியிருந்த தாயின் படத்தைப் பார்த்தாள்.

உருவத்தைப் பார்த்த அனமே மின்னல் அடித்த மாதிரி நாளங்களின் உதிரம் புரையோடிற்று. நெஞ்சு பொருமிக் கண்கள் வெதும்பின.

'அம்மா, என் தெய்வமே!'

வாய் குதறி அழுந்திய அந்தகாரம் அவளுள் அடங்க, அவள் குனிந்த தலை நிமிராமல் சற்று வேளை குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

'இன்றைக்கே வீட்டைவிட்டுக் கிளம்பவேண்டும்.'

வைராக்கிய முடிவுடன் உடனே வெளியே வந்து விருந்தையில் நின்று சுற்றுமுற்றும் பார்த்தாள்.

மனசில் சிலந்தி வலையாட்டம் ஒரு மப்புத் தோன்றி மறைந்தது.

உள்ளே திரும்பிவந்து கதிரையில் உட்கார்ந்து ஒரு கடதாசியை எடுத்து அவசரமாகக் கிறுக்கினாள்.

'பிரியமுள்ள கணவருக்கு...'

'சீ, பிரியமாவது கணவராவது. இரக்கமில்லாத மனிதருக்குக் 'கணவர்' என்ற உரிமையா?'

சற்றுவேளை மூளை மயங்கி இருந்த ஜானகி எதையோ யோசித்துவிட்டு 'சடா'ரென்று ஆசுவாசித்து மிவகு 'உஷாராக' மனம்போன போக்கில் கிறுக்கித் தள்ளினாள்.

ஒற்றையில் அவள் கிறுக்கினாளா எழுதினாளா என்பதை அவளே படித்துப் பார்க்காமல் அப்படியே மேசையில் வைத்துவிட்டு உறையை எடுத்தபோது...

வெளியே பொன்னையர் அலறும் குரலில் அவசரமாக அழைத்த தொனி கேட்டது:

"ஜானகி, பிள்ளை ஜானகி."

அவள் நெஞ்சு 'பக்'கென்று அதிர்ந்தது. பரபரப்போடு வெளியே வந்தாள்.

அப்போது அவர் முகம் ஏக்கத்தினால் குறுவிக் கிடந்ததை அவதானித்தாள். அவரோ சர்வாங்கமும் பதற, மிரண்டு மிரண்டு விழித்துக்கொண்டு நின்றார்.

நேற்றுக் கோபாவேசமாக 'மானங்கெட்ட நாயே' என்று ஏசி அவள் கன்னத்தில் அறைந்தவர் இன்று கனிவோடு தன்னை அழைத்தபோது ஜானகியின் இதயம் ஈரலித்துச் சுரந்தேவிட்டது. அவர் கனிவான அழைப்பில்

க்ஷணவேளையில் அவள் சகலத்தையும் மறந்து 'என்னப்பா, என்ன சங்கதி?' என்று கேட்பது போல் அவரின் முகத்தையே ஆவலோடு உற்றுப் பார்த்தாள்.

''உணவுப் பிரச்சினையால் நாடு கெம்பிவிட்டது. அரசாங்கம் ஊரடங்குச் சட்டம் போட்டதால் ஒன்பது பேருக்குத் துவக்குச் சூடு...!''

இத்துடன் நிறுத்தி தத்தளிப்புடன் செய்திகளை விழுங்கிக்கொண்டே உள்ளே சென்றார் பொன்னையர்.

ஜானகி சுயநினைவும் உணர்வும் இழந்து திகைத்துப் போய் கதவோரம் சமைந்தபடி நின்றாள்.

உள்ளே சென்ற பொன்னையர் உடனே வெளியே வந்து ''மக்கள் போராட்டத்தைக் கண்ட அரசுக்கு இப்போ நடுக்கம் எடுத்துவிட்டதாம்'' என்று சொல்லிவிட்டு ''பிள்ளை ஜானகி, என்ன நீ ஒரு மாதிரி இருக்கிறாய்? உனக்கென்ன பிடிச்சிருக்கு?'' என்று எதையோ நினைத்துக்கொண்டு கேட்டார்.

ஜானகி ஒன்றும் பேசாமல் அப்படியே நின்றுகொண்டிருந்தாள்.

'மக்கள் போராட்டம் — ஊரடங்குச் சட்டம் — ஒன்பது பேருக்குச் சூடு.'

ஒன்றன் பின் ஒன்றாக வந்த 'கிடுக்'கிடும் செய்திகள் அந்தப் போராட்டக் கோலங்கள் மண்ணில் கிளர்ந்து உலைகளாகி வரும் பெருங்கடலின் தோற்றம் போல் அவள் மனசில் திரைகளாகக் கவிந்தன.

'பொன்ராசா என்ன கதியானான்?'

இந்த ஒரே கேள்விதான் அவள் நெஞ்சினைக் கடைசியாகக் குடைந்து அறுத்துக்கொண்டிருந்தது.

இத்தனை நேரம் சாது போல் அமைதியாகவிருந்த ஜானகி, பாம்பை மிதித்தவள் போல் 'திடீ'ரெனத் துடித்துப் பாய்ந்து, எழுந்து உள்ளே சென்று, தான் எழுதிய அந்தக் கடிதத்தைப் பார்த்தாள்,

கடிதத் தாள்கள் மேசையில் கிடந்தன. ஆனால், அந் தக் கடிதத்தை அங்கே காணவில்லை.

விளக்கு அணைந்த மாதிரி 'பக்'கென்று உடனே அவள் கண்கள் இருண்டு கொண்டு வந்தன.

நெஞ்சு திணறுண்டு திக்குமுக்காடிய ஜானகி, அதே கதிரையிலிருந்த வண்ணம் மேசையில் தலையைச் சாய்த் துத் திகைத்துப் போய்க் கிடந்தாள்.

அவள் இதயப் பெட்டகம் அவளுள் நெக்குவிட்டுக் கொண்டேயிருந்தது.

'அந்தக் கடிதம் அப்பா கையில் சிக்கிவிட்டதோ? அப் படியானால்...?'

## 14.

அன்று இரவு சிவலிங்கம் வீட்டுக்குத் திரும்ப வில்லை.

பொன்னையர் சொன்ன செய்திகள் உண்மை என்று தெரிந்த பின்பும் ஜானகி அவற்றைக் கொஞ்சமும் அக் கறை காட்டாதவள் போலிருந்தாள்.

'பொலிஸ் நிலையங்கள் 'உஷார்' படுத்தப் பட்டிருக் கும். பொன்ராசாவைப் போல் அவரும் அங்கே அடை பட்ட கைதிபோல் இருக்கவேண்டியதுதான்.'

அவள் மனசு வைராக்கியத்தில் சாந்தியடைந்தது.

அந்தக் கடிதம் தந்தை கையில் சிக்கியிருப்பின் தனது திட்டம் சிதைந்துவிடுமே என்று ஜானகி மலைத்துப் போனாள். என்றாலும், விடிந்தபின் அந்த மலைப்போ. பயமோ, கவலையோ அவளிடமிருக்கவில்லை.

திட்டங்கள், கொள்கைகள் அம்பலமாகியபின் இனி ஒரு நிமிஷங்கூட தாமதிக்கலாகாது. ஆனால், நாடு முழு

தும் யுத்தகளமாகிவிட்ட இந்த வேளையிலே அடுத்து என்ன செய்வது?

'இந்த முடிவுக்கு எப்போ வந்தேனோ அப்பவே நான் கிளம்பியிருக்கவேண்டும். முரண்பட்ட எதிரிகள் தமது விரோதிகளை அழிக்க எப்போதும் சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருப்பார்கள். அவர்களுடன் உறவாடுவது அவர் களையே பலப்படுத்தும். இதைச் சரியாகக் கணிக்காமல் 'சமாளி'த்துக் கொண்டிருந்ததால்தான் இந்தப் 'பாதிப்பு' களுக்கு ஆளானேன். இனி என்ன நேர்ந்தாலும் வீட்டை விட்டுக் கிளம்பிவிடுவதுதான்.'

ஜானகி தனக்குள் கிக்குமுக்காடினாள். நெஞ்சு குமுறி யது என்றாலும், இந்த முடிவுக்கே வந்தாள்.

சிவலிங்கத்துடன் வாழ்ந்த இணைப்பை அவள் இப் படி அறுத்துவிட எத்தனித்தபோது அவர் கட்டிய 'தாலிக் கொடி' அவள் கழுத்தில் ஓர் 'கயிற்றுவடம்' போலவே அவளுக்கு உணர்த்தியது.

'புன்னகை இல்லாத குடும்பத்தில் பொன்னகைக்கு என்ன மதிப்பு?'

கேள்விக் கணையைத் தொடுத்துக் கொண்டே அந்தத் தாலிக்கொடியைத் தலை கவிழ்த்திப் பார்த்தாள்.

அப்போது அவள் மனக்கண்ணில் மனித சமுதாய மாற்றத்தின் பல வரலாற்றுச் சுவடுகள் ஒரு சங்கிலிப் பின்னல் போல் தோன்றி உயிர் பெற்றுத் தெரிந்தன.

பிரபுத்துவ சமுதாயத்திற்கெதிராகப் போராடிய வீரன் ஸ்பாட்டகஸ் ஒரு கணம் ஜானகி மனக் கோலத்தில் தோன்றினான்.

'இங்கே சுரண்டலை ஒழிக்க, தொழிலாளவர்க்கத் துடன் இணைந்து அவ்வீரன்போலவே பொன்ராசாவும் 'வர்க்கப்போரி'ல் குதித்திருக்கிறான்.'

'ஸ்பாட்டகஸ்-பொன்ராசா,'

பிரபுத்துவம் அடிமைகளைக் கொடுமைப்படுத்திய முறைகளும், அவர்களின் சகிக்கமுடியாத வேதனைகளைப்

பிரபுக்கள் வெகு குஷியாகப் பார்த்து இன்பத்திலாழ்ந்த விறுத்தங்களும் சித்திரக் காட்சிகளாக ஜானகி மனசில் திரை நீக்கம் செய்தன.

ஜானகியின் நெஞ்சு கொதித்தது!

'என்ன கோரமான கொடுமைகள்?'

மனம் அகோரித்துக்கொண்டே நெஞ்சில் கை வைத்துத் தாலிக்கொடியைத் தடவினாள்.

'அன்று பிரபுத்துவம் மனிதனுக்கு விலங்கிட்டுச் சாட்டைகளால் 'அடிமை'க் குறியிட்டது, இன்று அதே சாயல் ஆண் வர்க்கம் மாங்கல்யத்தினால் இலட்சியப் பெண்களை அடிமைப் படுத்தப் பார்க்கின்றது. 'குடும்ப வாழ்வையே துறந்து போகும் நான் அன்புப் பிணைப்பில்லாமல் அடிமை விலங்காகக் கருதி அவர் கட்டிய தாலியுடன் எப்படி வெளியே போவது'?

தர்க்கம் மண்டையைக் குடைந்தது.

சம்பிரதாயத்தில் மூழ்கிய ஒரு தமிழ்ப் பெண்ணிற்குப் பத்தாவும் அவர் மாங்கல்யமுமே நெஞ்சில் நிறைந்திருப்பவை. மரணத்திலும் அவள் இதயத்தின் உயிரோவியங்களாய்த் திகழ்ந்து இன்பத்திலாழ்த்துபவையும்இவைதாம் என்பதை ஜானகி மனசார ஒப்பினாள். பின்பு அந்த ஒப்புதலே அவளுக்கு ஆகவும் வேதனையை உண்டாக்கிற்று.

'இந்தப் பேறுள்ள மாங்கல்யதாரியாக இருக்க முடியாமல் போய்விட்டதே?'

அவள் நெஞ்சு குபீரித்தது.

'பொன்ராசன் மட்டும் இந்த மாங்கல்யத்தை என் கழுத்தில் அணிந்திருந்தால்...? எப்படியிருந்தபோதும், ஒருவனுடன் இணைந்துவிட்டு இன்னொருவனிடம் மனசை விடுவதே தூய்மையற்ற வாழ்க்கை.'

ஒரே கொள்கையுடன் வாழ்க்கை அமையுமாயின் அதிலுள்ள பரிசுத்தம், தூய்மை, காதல்—களங்கமற்றவை என்றபோதும், முரண்பட்ட வாழ்க்கையிலே ஆண் பெண்ணுக்குள்ள 'ஒழுக்கம்' உயர்ந்த ஸ்தானத்தை வகிக்காது

என்று ஜானகி உணர்வுபூர்வமாகவும், அறிவுவாயிலாகவும் உணர்ந்தாள்.

இரு முனைப் போராட்ட நினைவுகளில் தவித்துக் கொண்டிருந்த ஜானகி, அறைக்குள் நின்றவாறே ஜன்னற் கதவுகளை நீக்கி வெளியே பார்த்தாள்.

பொழுது சரிந்துவிட்டது; நேரம் சரியாக மூன்று மணி.

'அப்பா வீட்டுக்குத் திரும்ப முன்னம் நான் வெளியேற வேண்டும்.'

அவள் தீர்மானம் எடுத்துவிட்டபோதே கண்கள் கலங்கிவிட்டன.

'வாழ்ந்த வீடு, பழகிய சுற்றம், அயல் மக்கள்-யாவையும் இழந்து, தாலிக்கொடியையும்...'

ஏக்கம் நெஞ்சினில் தாக்கியபோதும், ஏதோ ஓர் ஆன்ம வைராக்கிய வீறுடன்-ஒருவித தன்மான எழுச்சியோடு இரண்டு கரங்களையும் தாலிக் கொடியில் வைத்தாள்.

கழுத்தைத் திருகிப் பார்த்த வீச்சிலே அவள் கண்ணில் ஏதோ 'பளிச்'சிட்டு மின்னிக் கூசிற்று. கன்னம் சரித்து உற்றுப் பார்த்தாள்.

கழுத்து நிறைந்த மாங்கல்யத்தோடு, அவள் தாய் வீற்றிருக்கும் அந்தப் படத்துக் கண்ணாடியின் பிரதிபிம்ப ஒளிக்கதிர் அது.

தாலி வைத்த கரங்களை கழுத்துவரை வைத்துக் கொண்டு, திரும்பி நடந்து போய் தாயின் படத்தை நோக்கினாள்.

'ஜானகி, அந்தத் தாலியை நீ கழற்றினால் குற்ற மிழைத்தவள்போல் தவிப்பாய். ஆனால், அதையிட்டு உன் மனசு கற்பிக்கிற எதையும் பொருட்படுத்தாதே' என்று தாய் கூறுவது போலிருந்தது.

'சடா'ரென்று ஜானகியின் கரங்கள் அந்தப் படத்தில் தாவின.

"ஐயோ, என் தெய்வமே, அம்மா!" என்று முனகி அழுதாள்.

'அம்மா என்று அழைத்ததின் எதிரொலி போலவே அப்போது வெளியே, "அம்மா" என்று திரும்ப அழைத்துக் கேட்டது ஒரு குரல்.

தனது மனப் பிராந்தி அப்படி ஓர் பிரதி ஒலியாக மீள்கிறதென நினைத்து ஜானகி படத்திலேயே கண்வைத்துக் கொண்டிருந்தாள்.

அதே குரல் மீண்டும் அழைத்தது:

"அம்மா, உள்ளே யாருங்க?"

அறைக்குள் நின்றவாறு, ஒருவித மனப்பிராந்தியுடன், ஜன்னலோடு மருவி நின்று வெளியே பார்த்தாள்.

அதிர்ச்சி ஆச்சரியம் ஒருங்குசேர அவளை ஆழ்த்தின. கண்கள் மிரளமிரள விழித்துப் பார்த்தாள். சந்தேகமில்லை. அன்று விரிவுரையாளர் இல்லத்தில் சந்தித்த அதே வெள்ளைச்சாமியும் சலாவுதீனும் தாம்.

நெஞ்சு கமாரிட்டது; வெளியே வர அவள் மனசு தயங்கியது எனினும், அவர்களைக் கண்டபின் அவளை மீறிய குதூகலம் அவளுள் தாண்டவமாடிற்று.

"அம்மா, வூட்ல யாரும் இல்லீங்களா?"

ஜானகி கதவைத் திறந்துகொண்டு சூரியன் போல் வெளியே வந்தாள்.

அவளைக் கண்டதே சலாவுதீனும் வெள்ளைச்சாமியும் அசந்துபோய் நின்றார்கள்.

"அவரு சொன்ன குறிப்போட அவுங்க வூட்டச் சரியாத்தான் தேடிக்கிட்டு வந்திரிக்கோம்"

சலாவுதீன் வெள்ளைசாமிக்குக் கூறியது, ஜானகி காதில் சாடையாக விழுந்தது.

"எவர் சொன்ன குறிப்போடு வந்து வீட்டைக் கண்டு பிடிச்சீங்கள்?" என்று கேட்டாள் ஜானகி.

வெள்ளைச்சாமி சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு இரகஸ்யமாக மெல்லிய குரலில் கூறினார்.

"அவருதான், எங்க பொன்ராசாத் தோழரு......!"

அவளுக்குக் கை கால் ஓடவில்லை. அங்கம் சிலிர்த்துக் குலுங்கியது. மனசு நினைப்பதை மனசே மறந்துவிட்டது. 'எதைக் கேட்பது, எதைப் பேசுவது?' என்று தெரியாமல் அவள் மனம் பேதலித்தது. வாயில் பேச்சே எழுவதாயில்லை. சற்றுவேளை ஒரு சின்னஞ்சிறு குழந்தைபோல் நின்று துவண்டாள்.

நிதானமடைந்தபோது அவர்கள் எதிரில் தான் பரதவித்து அங்கலாய்த்ததை யூகித்த ஜானகி, தன்னில் நாணிக்கொண்டு வாய்திமிறக் கேட்டாள்:

"இப்ப பொன்ராசா எங்கே? காயக்காறருக்கு எப்படி?"

கேட்ட வாயோடு ஒருவித பரபரப்புடன், "உள்ளே வந்து கதிரையில் உட்காருங்கோ" என்று சொல்லிவிட்டு, அவர்களையே ஏறிட்டுப் பார்த்தாள்.

சலாவுதீன் நாலாபக்கமும் கண்ணெறிந்தான். தயங்கிக் கொண்டே கீழ் ஸ்தாயிச் சுருதியில் கேட்டான்:

"ஒங்க அப்பாவும் இன்ஸ்பெக்டர் ஐயாவும் உள்ளே இரிக்காங்களா?"

'இல்லை, ஏன்?"

"நாங்க வந்த சமாச்சாரம் அந்தத் தொரேங்களுக்குத் தெரிஞ்சிரக் கூடாது. இந்த வெசயங்களும் அவுங்க காதில உழுந்திரப்படாது"

"அதெல்லாம் எனக்குத் தெரியும், பயப்டாமல் சொல்லுங்கோ: இப்போ பொன்ராசா எங்கே?"

"அவருமேல பொலிசு பொய்க் கேசு போட்டு மாட்டிக்கத்திட்டம் போட்டப்போ, அதெ அறிஞ்சி, நாங்க இன்னொரு 'பிளான்' போடுக்கிட்டோம். இப்ப அவரு—ஆளே வெளியில வந்திட்டாரு"

"ஓ, எங்கே இருக்கிறார்?"

"தலை மறைவா, ராசியமா' எங்க ஆட்ல இரிக்காரு".

ஒரு மன நிறைவு ஜானகிக்கு உண்டாயிற்று. ஆனால், அவன் கோழைத்தனமாகப் பதுங்கியிருப்பது அவன் இலட்சியத்திற்கே அவமானமாக அவளுக்குப் பட்டது.

''தப்பி ஓடி மறைந்திருப்பது சட்டத்திற்கு விரோதமல்லவா.''

—சிறு குழந்தைபோல் கேட்டாள் ஜானகி.

வெள்ளைச்சாமி சிரித்தான்.

''சட்டங்களப் பத்தி உசத்தியாச் சொல்றவங்களால தான் அது அம்புட்டுக் கேவலமாயிடுத்து. அதான் அவரும் அப்புடிச் செஞ்சாரு''

வெட்டொன்றாகப் பதிலளித்தான் வெள்ளைச்சாமி.

''அதுசரி, இப்ப ஊரடங்குச்சட்டம் இருக்கே, எப்படி வந்தீங்கள்?''

ஜானகி முகத்தில் சாடையான வியப்பின் அம்மல் படர்ந்தது. பதிலை அவதானிக்காமலே அவள் குசினிப் பக்கம் சென்றாள். அதைக்கவனித்த வெள்ளைச்சாமி வினயமாகச் சொன்னான்:

''தேத்தண்ணி ஒண்ணும் வச்சுப்புடாதையுங்க நாங்க இங்கிட்டு வந்த சுவடும் தெரிஞ்சிக்கிடாம இப்பவே போயிடணும். அதெல்லாம் பொறவு பாத்துக்கலாம். இப்ப ஒங்கள நேரில கண்டு ஒரு முக்கிய சமாச்சாரம் சொல்லோணும்'னுதான் வந்தமுங்க''

''என்ன சமாச்சாரம்?''

அங்கலாய்த்துக் கேட்டாள் ஜானகி.

சலாவுதீன் 'சேட் பொக்கற்'றுக்குள் கை விட்டுத் துழாவி ஒரு காகிதத்தை எடுத்து, ''இந்தக் கடதாசிய ஒங்ககிட்ட நேரில் குடுத்துடணும்'னு தோழர் பொன்ராசா தந்தாரு'' என்று கூறி அதை ஜானகியிடம் நீட்டினான்.

'பொன்ராசாவிடமிருந்து கடிதமா? இந்தத் தகவலைச்சொல்ல வந்தவர்களிடம் அதையும் சேர்த்துக்கூறிச்

யிருக்கலாமே? ஒருவேளை அவன் மனசில் சலனம் தோன்றி ஏதும் காதல்.........?'

ஜானகியின் முகம் அருவருத்துக் கோணிற்று.

'அப்படி ஒரு நினைப்பிருந்தால் நான் கல்யாணம் செய்ய முன்பே தெரிவித்திருக்கலாம். இப்போ இதென்ன எடுப்பு? சீ, இதை உலகம் அறிந்தால் என்ன சொல்லும்? ஓர் இலட்சியவாதிக்கு இதெல்லாம் அழகா?'

அவளுக்கு அவனில் உண்மையாக இனம் புரியாத ஓர் வெறுப்புத் தட்டிற்று.

அந்த வெறுப்பைக் கொஞ்சமும் காட்டிக் கொள்ளாமல், ''எனக்கு எதற்காகக் கடிதம் எழுத வேண்டும்; உங்களிடமே சொல்லி அனுப்பியிருக்கலாமே?'' என்று கேட்டாள்.

''அது ஒங்களுக்கு இல்லீங்க. கவரை ஒடைச்சுப் பாருங்க'' என்ருன் வெள்ளைச்சாமி.

அவள் ஆவல் ததும்ப அவர்களுக்கு முன்னே அந்தக் கவரைக் கிழித்துப் பார்த்தாள்.

'என் தந்தைபோன்ற திரு. பொன்னையர் அவர்களுக்கு—'

எதிர்பாராத இந்த வாசகத்தலைப்பே அவள் மனசைக் 'கிளுகிளு'த்திற்று. பரபரப்போடு அடுத்த ஒற்றையைத் தட்டிக் கடைசிப் பந்தியைப் புரட்டிஞள்.

'தங்கள் மைந்தன் போன்ற நா. பொன்ராசா'

கடிதத்தில் செலுத்திய பார்வையை நீக்கி வெள்ளைச்சாமி, சலாவுதீன் இருவரையும் ஆதங்கமாகப் பார்த்த ஜானகியின் முகத்தில் ஆயாசம் தட்டியது.

''இனி நாங்க போயிட்டு வர்ருேமுங்க''

விடைபெற்று இருவரும் வெளியே இறங்கினர்.

''அது சரி, இன்று உங்களால் கண்டிக்கு எப்படித் திரும்பப் போகமுடியும்?'' என்று கேட்டாள் ஜானகி.

''எங்க யாப்பாணத்து யூனியன் கந்தோர்ல தங்கிப் புட்டு நாளைக் காத்தால போயிடலாமுங்க'' என்ருன் வெள்ளைச்சாமி.

'வீடு தேடி வந்தவர்களை முறையாக உபசரிக்கவும் முடியாமல் போய் விட்டதே' என்ற மனத்தாக்கம், அவர்கள் போனபின்னும் அவளை வாட்டிக்கொண்டேயிருந்தது.

இருவரும் மறைந்தபின் கதவைத் தாளிட்டு உள்ளே சென்று மணிக்கூண்டைப் பார்த்தாள். ஐந்து மணி முப்பது நிமிஷம்.

கடிதத்தை ஆவலோடு விரித்தாள். விரிக்கும்போதே வெளியே ஏதோ சந்தடி கேட்டது. கதிரையில் இருந்தபடி கதவை நீக்கி வெளியே பார்த்தாள்.

இன்ஸ்பெக்டர் திடும்பன்மாதிரி அவசரமாக வந்து கொண்டிருந்தார்.

ஜானகியின் நெஞ்சு 'படபட'த்தது. 'சடா'ரென்று கடிதத்தை மடித்து நெஞ்சுச் சட்டைக்குள் செருகிவிட்டு, மேசையில் பரவிக் கிடந்த புத்தகங்களை அடுக்குவதுபோல் அபிநயித்துக்கொண்டு கடைக்கண் தாவினுள்.

உள்ளே வந்த சிவலிங்கம் ஜானகியை அந்தக்கோலத்தில் கண்டதும் சற்றுத் தரித்து நின்று அவளையே ஏறுகண் வைத்துப் பார்த்தார்.

ஜானகி அப்பவும் அவரைக் கவனியாதவளாக, புத்தகங்களை அவசரமாக ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தாள்.

அவர் சற்று விலகிப்போய் தொப்பியைக் கழற்றி 'ஸ்ராண்ட்'டில் கொழுவிவிட்டு, ஜானகி அண்டை வந்து சிரித்தவண்ணம் அன்பு கனியப் பார்த்தார்.

அவரின் கனிவுப் பார்வையும் அந்தச் சிரிப்பும் அவளுக்கே வியப்பினையூட்டிய போதும், அவளின் உள்ளத்தினுள்ளே ஏதோ ஓர் இனம் காணுத குதூகலம் கண்ணும் பூச்சி விளையாடிற்று.

அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவர் எலியை அப்பிய பூனைபோல் 'அவுக்'கென்று ஜானகியின் கரத்தைத் தாவிப் பிடித்து, "ஜானகி, இங்கே வா. சில நாட்களாக உனது மனசு நோக நடந்துவிட்டேன். அதுதான் உன்முகம் இப்படி வாடியிருக்கிறது. அப்படித்தானே?" என்று குழைந்தவர், வாஞ்சையுடன், "அவற்றையெல்லாம் மறந்துவிடு" என்று சிறு குழந்தைபோல் மன்னிப்புக் கோரும் தோரணையில் சொன்னார்.

இரும்பாகப் போயிருந்த அவள் இதயம் அந்தக் க்ஷணமே கரைந்தது. எல்லா வேதனைகளையும் அவரின் ஓர் ஸ்பரிசத்திலே—அவர் வாக்கிலே மறந்து, ஒன்றும் பேசாமல் மௌனமாக அவர் பிடியில் சிக்கி அவள் இதம்கண்டு கொண்டிருந்தாள்.

"என்ன பேசாமல் இருக்கிறாய்; என்னைப் பார்த்தே சொல்லவேண்டும்"

இப்படிக் கேட்டுக் கொண்டே அப்பிப் பிடித்திருந்த அவள் கரத்தை அழுத்தி இழுத்து அவள் நாடியை லாவகமாக நிமிர்த்தி, "என்னைப் பார்த்தே மறுமொழி கூற வேண்டும், தெரிந்ததா?" என்று மீண்டும் கொஞ்சுவது போல கூறியவர், ஆரத் தழுவிக் கொண்டே அவளை நெஞ்சோடு அணைத்தார்.

ஜானகி நெஞ்சில் தேனூறிற்று. அவள் தேகத்தை நுழைந்திக்கொண்டு, "அதெல்லாம் அப்படி இல்லை..." என்று மென் ஒலியில் கிளிக்குரல் வைத்துச்சொல்லிவிட்டு, அவர் நெஞ்சணைத்துத் துவண்டுபோய்க் கிடந்தாள்.

ஊடலின் பின் நிகழும் கூடலில் எழுகின்ற இன்ப வேதனையை அவள் அன்றுபோல் என்றும் அனுபவித்ததேயில்லை. இவற்றையெல்லாம் யோசிக்க, ஏலவே தான் போட்ட திட்டங்களும் நினைவுகளும் எவ்வளவு அபத்தமானவை என்று நினைத்து மனமுருகினாள்.

'நான் முட்டாள்தனமாக நடந்து கொள்ளப் பார்த்தேனே'

சொற்ப நாழிகையாயிற்று.

"ஜானகி, உன்னிடம் நான் ஒரு முக்கிய விஷயம் தெரிந்து கொள்ள வேண்டும். நீதான் அதற்கு ஒத்தாசை புரிய வேண்டும்"

எடுத்தாற்போல் அவள் எதிர்பார்க்காத ஒரு வார்த்தையை மெல்லத் தூக்கிப் போட்டார் இன்ஸ்பெக்டர்.

"நான் உங்களுக்கு ஒத்தாசை புரியாமல் வேறு யார் அதைச் செய்வது?"

"சந்தோஷம். நம்ம விரிவுரையாளர் இருக்கிறரே அவரிடமிருந்து எனக்கு வேண்டிய சில முக்கிய தகவல்களை அறிந்து கூறவேண்டும். அவ்வளவுதான்"

"என்ன தகவல்?"

"பொன்ராசா தப்பி ஓடித் தலைமறைவாயிருக்கிறன். அவன் எங்கே இருக்கிறன் என்று அவருக்குத் தெரியும். அந்தத் தகவல் வேண்டும்"

ஜானகி நெஞ்சு 'திடும்' என்று இடியுண்டு அதிர்ந்தது.

"என்ன பேசாமல் இருக்கிறய்?"

அவள் முழிசிக் கொண்டிருந்தாள். என்ன பதில் சொல்லுவதென்று புரியாமல் திண்டாடிக்கொண்டிருக்கவே, அவர் அடுத்து ஒரு கேள்வியைக் கொழுவினர்:

"சிலவேளை உனக்கே தெரிந்திருக்கும். நீயே சொல்லு"

வந்தவுடன் அவர் புரிந்த சாகஸம் இப்போதுதான் ஜானகிக்குப் புரிந்தது. அமுதமல்ல, விஷம்.

"சொல்லு, உனக்குத் தெரியுமா?"

வாழைப்பழத்தில் ஊசி ஏற்றிய அவரின் உத்திகள் ஜானகியிடம் பலிக்கவில்லை. அவள் ஊமையாட்டம் யோசனையிலாழ்ந்து போயிருந்தாள்.

"என்ன, உனக்குத் தெரியாதா?"

''அதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும்?''

''அதுதான் கேட்கிறேன். சொல்லு?''

''எனக்கு ஒன்றுமே தெரியாது?''

''ஒன்றும் தெரியாது?''

''தெரியாது?''

''உண்மையாகத் தெரியாது!''

''எனக்குத் தெரியவே தெரியாது''

அவள் நெஞ்சுச் சட்டைக்குள்ளிருந்த அந்தக் கடிதம் அப்போது அவளின் இதயக் கொலுவை உலுப்பியது.

சிவலிங்கம் சிரித்தார். அவள், தியங்கிப் போயிருந்தாள்.

''ஏய், உனக்கு எல்லாம் தெரியுமென்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். அதுதான் கேட்டேன். இனி உள்ளதைச் சொல்லு: அவன் எங்கே இருக்கிறான்?''

தனக்குத் தெரியுமென்று 'இவர் எப்படிக் கண்டார்?' என்ற ஆராய்ச்சியில் அவள் மனசு குதித்தது.

''எனக்கு ஒன்றுமே தெரியாது''

''டியே, உள்ளதைக் கக்கு; இல்லாவிட்டால் நான் கக்க வைப்பேன்.''

அட்டகாசித்த சிவலிங்கம் 'சடா'ரென்று எழுந்து நாரிப் பூட்டு வாரைக் கழற்றிக் கைக்குள் திருகி வைத்துக்கொண்டு மறுபடி கேட்டார்.

''டியே கள்ளி, உள்ளதைச் சொல்லடி?''

கேட்டு வாய் ஓயமுன்பே, நாய்க்கு அடித்தமாதிரி மூச்சு வாங்க விளாசி விளாசி அடித்தார்.

அவள் வாய் உண்மை கக்கவில்லை; அவளின் முதுகு வெடித்துச் சிறிய இரத்தமே நுரைத்துக் கொண்டு கக்கியது.

அவள் பெண் கோலமே அழிந்து விட்டது. தன்னாலானமட்டும் குழறியும் அவர் கை ஓயவில்லை.

அழுது தூர்ந்துபோன தொண்டை கேரி விக்கலிட, அவள் மூர்ச்சித்துப் போய் மயங்கிக் கீழே விழுந்தாள். அவள் கண்கள் அப்போது சோபை இழந்து ஒளி செத்துக் கிடந்தன.

அவளின் ஏக்கப் பார்வையில் தந்தையின் அசுமாற்றத்தையே தெரியவில்லை.

## 15

பொழுது கிளம்பி வெகு நேரமாகியும் ஜானகி எழுந்திருக்கவில்லை. இல்லம் வெறிச்சோடி மயானம் போல் கிடந்தது.

பொன்னையர் மனசில் விபரீத நினைவுகள் குடிபுகுந்தன. முற்றத்தில் இறங்கி வேப்பங் குச்சி முறித்துப் பற்களை விளக்கிக்கொண்டு, ஜானகி தூங்கும் அறையைப் பார்த்தபடியே சற்று நின்றார்.

'விடிந்த முகத்தில் பெண்ணானவள் இல்லாவிட்டால் அந்த வீடே சூரிய தரிசனமில்லாத பூமிபோல் இருள் மண்டிவிடும்.'

இதயத்துள் வெதும்பிக்கொண்டு நுழைவு கண் வைத்து வீட்டைப் பார்த்தார். அப்போது அவர் கண்களை இருள் மண்டுவதுபோலிருந்தன.

ஜானகியின் வாழ்க்கை இப்படிக் குமுறலும் துயரமுமாக உருவெடுக்குமென்று அவர் மறந்தும் நினைத்ததில்லை. அவளின் அன்றாடப் போராட்ட வாழ்வும், குடும்பத்திற்குள் அதிகரித்துவிட்ட முரண்பாடுகளும் அவள் வாழ்க்கையை எத்தனை கொடிய சோதனைக்குள்ளாக்கி விட்டன. அவள் வாழ்க்கையே கண்ணீர்க் காவியமாகி விட்டதே.

'நான் ஒரு கறுமக்காறன். இல்லாவிட்டால் என் வயிற்றில் சம்பவித்த ஜானகி தானும் துயரப்பட்டு என்னையும் அதுக்கு ஆளாக்குவாளா?

குமுறிக்கொண்டு கிணற்றடிப்பக்கம் நடந்தார்.

முகம் அலம்பிய பின் திரும்பிவந்து அறைக்குள் சென்று திருநீற்றை எடுத்து நெற்றியில் தடவிவிட்டு சர்வாங்க புலன்களை ஒடுக்கிய பொன்னையர் அபயக் குரல் வைத்தார்:

"முருகா, என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறாய்?"

அவர் கண்கள் கலங்கின. முருக தரிசனத்தின் பின் விறுந்தைக்கு மீண்டு, மூலைப் பக்கத்துச் சார்மனையில் சரிந்தார். மனசு ஏதோ 'ஒரு மாதிரி' அடித்துக்கொண்டது; நெஞ்சு துருத்திற்று. கொஞ்சநேரம் சார்மனையில் ஆறுதலாகவும் அவரால் இருக்கமுடியவில்லை. தலையைத் திருகிக் கண்ணெறிந்து ஜானகியின் அறையை மீண்டும் நோக்கினார்.

ஜானகி எழுந்திருக்கவில்லை; கதவுகளும் பூட்டப்பட்டுக் கிடந்தன. அவர் முகம் சுண்டிக் கறுத்தது.

'நேற்றிரவு இன்ஸ்பெக்டர் வீட்டுக்குத் திரும்புமுன்னமே ஜானகி தூங்கியிருப்பாள். அவரும் அவளை எழுப்பாமல் தானாகவே சமையற்கட்டுக்குச் சென்றுசாப்பிட்டு வந்து உறங்கிவிட்டார்...?

பொன்னையரின் யூகம் சரியோ தப்போ அவர் உறங்கும்போது தான் சமைத்த உணவு பாத்திரங்களில் அப்படியே கிடந்ததைக் கவனித்தார்.

'அவர் 'டியூட்டி'யால் வந்தபின் அவருடன் சாப்பிடலாம் என்று ஜானகியும் உண்ணுமலே தூங்கியிருப்பாள்.' என்று மறுபாட்டம் நினைத்தவராய் அந்தப் பிரச்சினையில் உழலாமல் கிடந்தார். என்றாலும், இந்தச் சீர்கேட்டை நினைக்க அவர் மனசு கொதித்தது.

சார்மனையை விட்டுஎழுந்து குசினிக்குள் சென்று பாத்திரங்களைத் திறந்து பார்த்தார்.

சோறும் கறிகளும் பாத்திரங்களோடு 'சளித்து'ப் போய்க் கிடந்தன.

தன்னைத் தவிர வேறு ஒருவரும் இரவு சாப்பிடவில்லை என்ற உண்மை அப்போது அவருக்குப் புலனாயிற்று.

'மூதேவிப் பெட்டை: கழுதை சாப்பிடாமல் படுத்திட்டுதே.'

பொழுது முகத்தில் 'சுள்'ளிட்டது. நேரம், ஏழு ஏழே காலாகிக்கொண்டிருந்தது.

'விடிந்து பொழுது ஏறிய பின்னும் பெண்ணைப் பிறந்தவளுக்கு ஒரு தூக்கமா?'

புகைந்துகொண்டே விருந்தையில் ஏறிக் கதவோரமாக நின்று, "புள்ள ஜானகி" என்று அனுங்கும் குரலில் அழைத்தார்.

உள்ளே எந்த அசுமாற்றத்தையும் காணவில்லை.

புறங்கை விரல்களை மடக்கி மொழிப் புடங்கால் 'டொக் டொக்'கென்று கதவில் தட்டினார்.

மூச்சுப் பேச்சே இருக்கவில்லை. அவருக்குச் சாடையான சினம் எழுந்தது,

"டியே புள்ள, ஜானகி" என்று குரல் வைத்த வண்ணம் கதவில் அறைவது போல் அறைந்துத் தட்டினார்.

கதவு 'சடா' ரென்று திறபட்டது.

திகிலோடு ஜானகியின் கட்டிலைப் பார்த்தார்.

அவளைக் காணவில்லை!

பொன்னையர் நெஞ்சு கோடை முழக்கமாக இடித்தது; கை கால்கள் உதறி எடுத்தன; நினைக்க வராத நினைவுகள் மண்டைக்குள் பிரளயப்படுத்திப் பூகம்பித்தன'

'ஏதோ விபரீதம் நேர்ந்திருக்கிறது.'

இப்படி நினைத்தபோதே, 'ஐயோ' என்று வாய் விட்டுக் குழறியழவேண்டும்போல் மனம் அந்தகாரித்தது.

'மறுபடியும் இவளுக்கு ஏதாவது சபல மனந்தட்டி அவன் பொன்ராசாவைத் தேடி...?'

சடலம் ஊனிக் குறுக, மனைவியின் படத்தை அவர் கண்கள் துழாவின; கண்ணீர் துளும்பிற்று.

கண்களைத் துடைத்துக்கொண்டு மேசையில் முண்டு கொடுத்துக் கதிரையில் இருந்தபடி கண்களை அறை பூராவும் மேயவிட்டார். ஒரு கடித உறையோடு மேசையில் விரித்த கடதாசி ஒன்று வெளுப்பாக அவர் கண்ணில் பட்டது.

தாவி எடுத்து ஆவலோடு பார்த்தார். இடுக்கி எடுத்த உறையைக் கிழித்துக் கடிதத்தை எடுத்துப் புரட்டினார்.

ஜானகியின் எழுத்தேதான்.

தேகம் ஒரு பாட்டம் உலுப்பிச் சிலிர்த்தது; கை நடுங்கிற்று; நெஞ்சு பதற வாசிக்கலானார்:

என் அன்பான அப்பாவுக்கு,

நீங்கள் என்னைத் தேடவேண்டாம். அந்த முயற்சி வீண் வேலை. என் பிரிவு உங்களை மீளாத் துயரிலாழ்த்தும் என்பதை அறிவேன். கெட்டியாக மனசை அடக்கிக் கொள்ளுங்கள்.

இந்தப் பூமியில் எத்தனையோ உரிமைப் போராட்டங்கள் நிகழ்ந்தமையால் புதிய சமுதாயத்தின் தோற்றங்கள் இதே மண்ணில் தெரிகின்றன.

சமூக வாழ்க்கை தனிமனித இச்சைக்குள் அடங்குவதன்று; அது உலகளாவிய மனித வர்க்கத்துக்குட்பட்டது. எனவே, அந்த உலகளாவிய மாபெரும் வர்க்க இயக்கத்துடன் நான் இணைந்துகொள்ளப்போகிறேன்.

அவருக்கும் இதே செய்தியைத்தான் கூறுங்கள்.

உங்கள் அன்புப் புதல்வி,
ஜானகி.

'அவள் தற்கொலை புரியவில்லை' என்று தெரிந்த போது அவர் நெஞ்சினில் உண்டான புரை காயம் சற்று ஆறியது. ஆயினும், அவரால் விவரிக்கமுடியாத ஏதோ ஒரு தாப உணர்வு—ஒரு த்விப்பு அவரை ஆட்கொண்டது. அவர் மூளையோ சுரணை செத்து மரத்துப்போய்விட்டது. அந்தக் கடிதத்தை மறு தடவை ஊன்றிப் படித்துவிட்டு அடுத்த கடிதத்தை விரித்தார்:

'என் தந்தைபோன்ற திரு. பொன்னையர் அவர்களுக்கு',

இத்துடன் அவர் வாசனை நின்றது. அந்த எழுத்தும் வாசகமும் புதிசாகப்பட்டதால் அவர் மனசு சங்கடத்தில் லாழ்ந்தது.

'என் ஜானகியை விட, நான் வேறு யாருக்கு, எப் போது தந்தைபோலிருந்தேன்?'

இந்தக் கேள்வியுடன் அந்த வாசகத்தைக் கவனித்த பொன்னையர், கடிதத்தின் கையெழுத்தை உற்றுப் பார்த் தார்.

'நா. பொன்ராசா.'

அவர் முகம் வெறுத்துச் சுழித்தார். என்றாலும், தன்னை இவ்வளவு பெரிதாக மதித்து அவன் தனக்கு எழு தியதும், அதன் ஆரம்ப வாசகமும் அவருக்கு உவப் பாயிருந்தன.

'இந்தக்காலத்து வாலிபர்கள் வாழ்க்கையனுபவமற்று எழுந்தமானமாகக் கூச்சலிடும் பூச்சிகள். இல்லாவிட் டால் ஒரு நாள்கூட முகம் ஒட்டிப் பழகாதவன் என்னைத் 'தந்தை' என்று எழுதுவானு?'

கண்களை அகலவிரித்துக் கடிதத்தை வாசித்தார்:

என் தந்தைபோன்ற திரு. பொன்னையர் அவர்க ளுக்கு,

இதில் நான் எழுதுவது உங்களுக்குக் கசப்பாகவும், புதுமையாகவும் இருக்கலாம். பொறுமையோடு நிதான மாக இதை வாசியுங்கள்.

மனித குலத்துள்ளே சுரண்டல், அடிமைத்தனம் என்று தோன்றினவோ, அன்றே இந்த உலகத்தில் வர்க்க பேத முரண்பாடு தோன்றிவிட்டது. இதை எந்த ஒட்டு வேலைசெய்தும் இணைக்கமுடியாது. முரண்பட்ட சமூக அமைப்பிலே போராட்டம் ஒன்றினால்தான் இந்த வர்க்க பேதத்தை ஒழிக்கலாம். இதை நீங்கள் ஒப்புக்கொள்ளா விட்டாலும், உண்மை நியதி இதுதான்.

அடக்கி ஒடுக்கிச் சுரண்டப்படும் சகல மக்களும் இந்தப் போராட்டத்தையே 'தர்மநீதி'யாகக் கொண்டுள்ளார்கள். இந்தத் தர்ம நியாயத்தின் பக்கமே இன்று மாபெரும் விடுதலைப் போராட்ட இயக்கமே அண்டமளாவி நிற்கின்றது. இந்தத் தர்ம யுத்தத்திலே நான் மட்டுமல்ல, எனது வழிகாட்டியான விரிவுரையாளர் இராமசாமியும், அவரால் ஊற்றுக்கண்ணெடுத்த போதத்தில் வளர்ந்த உங்கள் புதல்வி ஜானகியும் சங்கமித்திருப்பதை நீங்கள் புரியாதிருக்கலாம். ஆனால், இன்ஸ்பெக்டர் இதை எப்படியோ சரியாக இனங்கண்டுவிட்டார். இந்த வகையில் விரிவுரையாளர், நான், ஜானகி மூவரும் ஒரு கன்னை. நீங்களும், இன்ஸ்பெக்டரும் மறு கன்னை.

வர்க்க உணர்வு பூண்டு ஓர் இலட்சியத்தில் ஊறிப் போன உங்கள் ஜானகியை நீங்கள் தெரிந்தும், அவளை அவளின் எதிர் முகாமுக்குள் தள்ளி 'குடும்பம்' என்ற கூடாரத்துள் அடைத்துவிட்டீர்கள். அதுதான் நீங்கள் செய்த தவறு. ஆனால், அவள் அந்தக் கூண்டை உடைத்துக்கொண்டு என்றோ ஒரு நாள் சுதந்திரப் பறவையாக வெளியேறுவாள் என்பது மட்டும் நிச்சயம். இதைக் கூறும்போது உங்களுக்குக் கோபம் பொங்கும். தயவு செய்து அதுக்கு இரையாகாமல் ஆழ்ந்து படியுங்கள்.

முட்டைக் கரு கோழிச் சூட்டினால் கலங்கி முரண்பட்டு, அந்த முரண்பாடே கொந்தளித்துப் போராட்ட உருவெடுக்கிறது. புதிய வடிவமெடுத்த குஞ்சு, முட்

டைக்கோதை உடைத்து நிராகரித்துவிட்டு வெளியேறுகிறதல்லவா? இந்த மண்ணில் புதிய உலகங்களும் இப்படித்தான் பழமையை நிராகரித்துத் தோன்றின. நீங்கள் அடைவைத்த 'குடும்பக் கோட்டை'யை உதறிவிட்டு உங்கள் குஞ்சு ஜானகியும் அப்படித்தான் புதுமைப் பெண்ணாக வெளியே வருவாள். இதை எந்த வல்லாதி வல்லனாலும் நிறுத்தமுடியாது. அவளைப் பொறுத்தவரை இது பெரும் உபாதை. ஆனால், நீதியின் நிமித்தம் அவஸ்தையான அவள் ஓர் பாக்கியசாலி. ஏனெனில், இந்த உலகம் நாளைக்கு அவளுடையதாகவே இருக்கும். அவள் இழக்கப்போவது சுதந்திரத்தையல்ல; அடிமை விலங்கை.

நான் சம்பந்தமில்லாத விஷயங்களை எழுதிக் கொண்டிருக்கிறேன் என்று நினைக்கிறீர்களல்லவா? சரி, சலிக்காமல் மேலே படியுங்கள்.

உங்கள் கூற்றின் படி நான் இப்பொழுது ஒரு கைதி. ஜானகி பாஷையில் நான் ஒரு விடுதலைப் போராளி. அப்படிப்பட்ட நான் இவற்றையெல்லாம் கூறும்போது நகைப்பீர்கள் என்று தெரியும். நீங்கள் மட்டுமல்ல; இன்ஸ்பெக்டரும் தனது ஆத்திரங்களை என்னிலும் ஜானகியிலும் கொட்டி, ஓயாத கெடுபிடிகளை நடத்தி வஞ்சம் தீர்த்திருக்கிறார். முதலாளித்துவத்தின் 'மெய்க் காப்பாள'ரான அவர் சட்டத்தின் துணையோடிருந்தும் பேடித்தனமாக என்மீது 'பொய் வழக்கு'ச் சோடிக்கவே முடிந்தது. இதிலிருந்தே அவரின் கையாலாகாத்தனத்தையும், பலவீனத்தையும், முட்டாள்தனத்தையும் புரிந்துகொள்வீர்கள். பாவம், தந்திரம் அறியாத பேதை ஜானகி தான் கொண்ட இலட்சியத்திற்காக எத்தனை தடவைகள் அந்த முரட்டுக் கரங்களால் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறாள் தெரியுமா? அவள் மட்டும் இன்ஸ்பெக்டருக்கு மனைவியாகாதிருந்திருந்தால்......?

ஐயா, வியப்பான இந்தக் கேள்வியை நான்மட்டும் கிளறவில்லை. விரிவுரையாளர், உங்கள் ஜானகி, இன்ஸ்

பெக்டர் எல்லாருமே நெஞ்சுருகிக் கேட்கத் தொடங்கி விட்டார்கள். உங்கள் மனச்சாட்சியைத் தட்டிக் கூறுங்கள். நீங்களும் அப்படி நினைத்து வருந்தவில்லையா? உண்மையாகவே சொல்கிறேன். இன்ஸ்பெக்டரின் தாலி ஜானகி கழுத்தில் ஏறுதிருந்தால்...?

'ஜானகி இன்ஸ்பெக்டரைக் கல்யாணம் செய்யாதிருந்தால் நீ அவளைத் திருமணம் புரிந்திருப்பாயா?' என்று நீங்கள் என்னைக் கேட்கத் தோன்றுகிறதல்லவா? ஆம், ஐயா. நான் அவளை என் வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொள்ள விரும்பியது உண்மைதான்.

நான் மட்டுமா? உங்கள் ஜானகியிடமே கேட்டுப் பாருங்கள். 'இன்ஸ்பெக்டரைக் கல்யாணம் செய்யாதிருந்தால், பொன்ராசாவையே என் வாழ்க்கைத் துணைவராக ஏற்றிருப்பேன்' என்றே அவளும் கூறுவாள்.

'இந்தநோக்கம் அவளிடம்இருந்திருப்பின் அவள் ஏன் இன்ஸ்பெக்டரை விரும்பவேண்டும்; உன்னையே திருமணம் செய்திருக்கலாமல்லவா?' என்று உங்களுக்கு எண்ணத் தோன்றும். அதற்கு விடையளிக்கவே தங்களுக்கு இதை எழுத நினைத்தேன்.

ஐயா, நீங்கள் நம்பாவிட்டாலும் உண்மையைக் கூறுகின்றேன். நான் அவளையோ, அவள் என்னையோ திருமணம் புரிந்து 'குடித்தனம்' நடத்த நினைத்தவர்களல்லர். வர்க்கபேதமற்ற சமுதாயத்திற்காக—உலகளாவிய ஓர் இயக்கத்தில் நாங்கள் கொண்ட காதலுக்காக எமது சுய இச்சைகளைத் தியாகம் செய்துகொண்ட நாங்கள், எங்கள் காதல் உணர்வுகளையே ஓர் இலட்சியப் பித்தாக்கி விடாதது உங்களுக்கு வியப்பாகவிருக்கலாம். எனக்கோ, ஜானகிக்கோ இது வியப்பன்று. காதல் முரண்பாடற்றவர்களிடமே ஜீவாமுதமாகத் திகழும். அந்தக் காதல்கூட ஓர் வர்க்கபேதமற்ற சமுதாயத்தில்தான் பூரணமாகச் சோபிக்கும். இந்த உண்மையை நீங்கள் புரியாதபடியால் தான் 'ஆண்-பெண் உறவுமட்டும் இல்லற வாழ்க்கை'

என்ற தப்பான முடிவெடுத்து அவள் கழுத்தில் அந்தத் தாலியைக் கட்டுவித்தீர்கள்.

நீங்களும் இன்ஸ்பெக்டரும் ஜானகியைப் பற்றித் தவறான அபிப்பிராயம் கொண்டிருப்பதையும் நான் அறிவேன். 'நெருப்பில்லாமல் புகை கிளம்புமா?' என்று நீங்கள் கேட்கலாம். 'புகை கிளம்புவதற்காகவே நெருப்பை மூட்டிவிடும்' நயவஞ்சகர்களை நீங்கள் தெரிந்திருக்கவில்லையே? இலட்சிய தாகத்தோடு திகழ்ந்த உங்கள் பெண் வாழ்க்கை இத்தகைய அலட்சிய வாதிகளால்தான் நெருப்பாகியது. இதுகூடவா உங்களுக்குத் தெரியாது? உங்கள் புத்திரி மனசைத் தெரியாத உங்களுக்கு நானே சொல்கிறேன், இதயத்தில் பதித்துக்கொள்ளுங்கள்.

ஜானகி தூய்மையானவள்; ஒழுக்கமானவள்; நேர்மையானவள்; துணிச்சலுள்ள ஒரு புதுமைப் பெண்.

அவள் உங்கள் புத்திரி என்பதை நினைத்து நீங்கள் நிச்சயம் பெருமைப்படலாம். ஆனால், அந்தப் பாக்கியம் உங்களுக்கோ, இன்ஸ்பெக்டருக்கோ இனிக் கிட்டாது. அவள் இந்த மண்ணில் தோன்றிய விடுதலைப் போராளிகளுடன் ஒன்றிணைந்து, அந்த உலகோடு சங்கமித்துவிட்டவள். உங்கள் ஜானகி என் காதலியல்ல; அவள் என் தோழி; உடன்பிறவாத என் அன்புச் சகோதரி.

தங்கள் மைந்தன் போன்ற,

நா. பொன்ராசா.

SITHY VINAYAGAR
SARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

# 16.

பொன்னையர் உணர்வு செத்து மரக்கட்டையர்க விறைத்துப் போய் நின்றார்.

கடிதம் அவருக்குத் தெரியாமலே கை நழுவிக் கீழே விழுந்தது. கூடவே நெஞ்சு பூகம்பித்து விம்மலானார். கண்களிலிருந்து 'பொலு பொலு'த்துக் கொட்டிய கண்ணீர் முகம் அடங்க வழிந்து தேம்பியது.

சொற்ப நேரம் தன்பாட்டுக்கு நெஞ்சீறல் தீர ஒரு சாவாக அழுது கொண்டிருந்தார். அந்த அழுகையும் தானாகவே அவருள் அடங்கியபோது நாழிகையாயிற்று.

'இனி என்ன செய்வது?'

கடுவலாக யோசிக்கலானார். ஒன்றுமே புலனாகவில்லை. மண்டை அம்மிற்று. சார்மனையிலிருந்து சற்றுவேளை பரதவித்துக்கொண்டிருந்தார். பொழுது ஏறிக்கொண்டிருந்தது.

வெளியே தலைநீட்டிப் பார்த்தார். வெய்யில் நன்றுகப் பிரகாசித்தது. 'நேரம் ஒன்பது மணியிருக்கும்' என்று கணித்துக்கொண்டார்.

'ஜானகி எங்கு போயிருப்பாள்?'

கலங்கிய மண்டையை ஊடுருவிக் கொண்டு இந்தக் கேள்விதான் எழுந்தது.

கை நழுவிய அந்தக் கடிதத்தை 'சடா'ரென்று கண்குத்திப் பார்த்தார்.

அது தெருவில் விடப்பட்ட ஓர் அனாதைக் குழந்தை போல் அவருக்குத் தோன்றிற்று.

நெஞ்சு புரைய அதை வாஞ்சையோடு தாவி எடுத்து கைக்குள் மடக்கி வைத்துக் கொண்டார். ஒரு கணம் மௌனம் ஆட்கொண்டது.

இருந்தாற்போல் அவர் உள்ளம் பொன்ராசாவில் விழுந்தது.

'அவன் நான் பெறாத என் புத்திரன்' என அவர் வாய் 'முணு முணு'த்தது.

'இப்படி ஒரு நற்பண்பானவனைத் தெரிந்து கொள்ளாமல் இத்தனை நாட்களாக நச்சரித்துக்கொண்டிருந்தேனே.'

எப்படியாவது அவனை நேரில் சந்திக்க வேண்டும் என்ற ஓர் ஆவல் அவர் மனசில் கருக் கூட்டிற்று.

உடனே கடிதத்தை விரித்து அதன் தலைப்பைப் பல் லியமாகப் பார்த்தார்.

அதில் முகவரியோ, வசிக்கின்ற இருப்பிடமோ, ஊரோ எதுவுமே குறிப்பிட்டிருக்கவில்லை.

தொட்டாற் சுருங்கி போல் அவர் முகம் சுருங்கிக் கறுத்தது. 'எங்கே தேடுவது, யாருக்கு எழுதுவது?' என்று தனக்குள்ளே முனகித் திணறினார்.

'ஜானகி நிச்சயமாக விரிவுரையாளர் வீட்டுக்குத்தான் சென்றிருப்பாள். அங்கு போனால் எல்லா விபரத்தையும் அறிந்து விடலாம். ஆனால், கொந்தளிப்பும், கெடுபிடிகளும் நாடடங்க நிகழும் போது ஜானகி அங்கே போயிருப்பாளா?'

இப்போது அவரிடம் உள்ள கடிதம் ஒன்றுதான் அவருக்கு ஆதங்கமாகத் தோன்றியது. கடிதத்தையே மறு தடவை விரித்து வரிக்கு வரி விட்டு மனசுள்ளே தெட்டந் தெறியனாக வாசித்தார்.

'உங்கள் அபிப்பிராயத்தின்படி நான் இப்பொழுது ஒரு கைதி. ஜானகி பார்வையில் ஓர் விடுதலைப் போராளி'

இந்த வாக்கியத்தை அவர் அழுத்தி வாசித்தார்.

'அவள் கூற்று உண்மை. அவன் உண்மையாக ஓர் போராளிதான்' என்று தானும் அருக்கூட்டி விட்டு தொடர்ந்து வாசிக்கலானார்.

'...நான் ஜானகியை என் வாழ்க்கைத் துணைவியாக்க விரும்பினேன்...'

இந்த வாக்கியம் இப்போது அவர் மனதில் பதிந்தது.

'எவ்வளவு அந்தரங்க சுத்தியோடு சொல்லியிருக்கிறான். இதில் என்ன தவறுண்டு? இப்படிப் பட்டவன் ஏலவே எனக்கு ஒரு வார்த்தை சொல்லியிருக்கக்கூடாதா? ம்... என்ன செய்வது; இருவருக்கும் பொசிப்பில்லை.'

இப்படி ஒரு 'சப்பு'க் கட்டி விட்டுக் கடிதத்தில் கண்ணோட்டம் விட்டார்.

'ஜானகி தூய்மையானவள்; ஒழுக்கமானவள்; நேர்மையானவள்; துணிச்சலுள்ள ஓர் புதுமைப் பெண்......'

'உங்கள் ஜானகி என் காதலியல்ல, அவள் என் தோழி; உடன் பிறவாத அன்புச் சகோதரி...'

கடைசி வாக்கியங்களை அவர் வாசித்தபோது சின்னஞ் சிறு குழந்தைபோல் நெஞ்சு கேவப் பரதவித்துக் கொண்டு கடிதத்தை ஒருசாவாக மடித்து எடுத்துக் கொஞ்சியேவிட்டார்.

'நான் பெறாவிட்டாலும் அவன் என் ஜானகியைப் போல் எனக்கோர் புத்திரன்.'

மனம் உருக, நாக்குத் திணற, இரு தடவை இவ்வாறு அழுத்திக் கூறிக்கொண்டே கண்ணீர் விட்டார் பொன்னையர்.

'கண்ணின் மணி போல் உயிரோவியச் சித்திரமாகக் காத்து வளர்த்த என் செல்வக் குமாரத்திக்கு படுபாவி இன்ஸ்பெக்டரோடு சேர்ந்து கொடுமை செய்தேனே. நான் பெரும் பாவி.'

அவர் நெஞ்சு குமுறி அவருள் அலை அடித்தது.

'இப்போ என் ஜானகி எங்கே இருக்கிறாள் என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். எதற்கும் விரிவுரையாளர் இராமசாமிக்கு ஒரு தந்தி கொடுத்துப் பார்ப்போம்.'

எழுந்து வெளியே கிளம்ப ஆயத்தமானார்.

வெளிக்கிட அடுக்குப் பண்ணியவர் எதுவுமே செய்யாமல் அறை ஏகலும் ஒரு பாட்டம் சுற்றிக்கொண்டிருந்தார். அறைக்குள் நிலவிய அமைதியைக்கலைத்துக்கொண்டு தற்போது 'கேற்' பக்கம் 'சைக்கிள் பெல்' சத்தம் அவர் காதில் ஓயாமல் விழுந்தது.

அடித்து விழுந்து கொண்டு வெளியே வந்தார்.

'தந்தி'

நெஞ்சு சுரீரித்தது. 'தந்தி' கொடுக்க வேண்டுமென்று க்ஷண வேளைக்கு முன்புதான் நினைத்தார். அவருக்கே தந்தியென்றால்?

ஓட்டமும் நடையுமாக விரைந்து தந்தியை வேண்டி 'கேற்' வாசலடியிலேயே நின்று பிரித்துப் பார்த்தார்.

'ஜானகி இங்கே வந்திருக்கிறாள். விரும்பினால் வரவும் — இராமசாமி.'

புயல் அடித்து ஓய்ந்தது போல் அவர் மனசு உறைந்தது.

'அவர்தான் அவளுக்குச் சித்தாந்தத்தை ஊட்டி அவளை ஓர் இலட்சியவாதியாக்கியவர். ஒரு வகையில் அவரும் ஜானகிக்குத் தந்தைதான்.'

இன்ஸ்பெக்டரை நினைக்க அவர் முகம் சுண்டிக் கறுத்தது.

'இந்தச் சம்பவம் இன்ஸ்பெக்டருக்குத் தெரியாது. இதை அவர் அறிந்தால் என்ன விபரீதம் நடக்குமோ?'

பொன்னையர் இப்படி ஏங்கிய போதும் 'இப்படியெல்லாம் முரண்பட்டு இடிந்த கோபுரமாகிவிட்ட குடும்பத்தை இனி எவராலுமே கட்டி எழுப்ப முடியாது' என்ற முடிவிற்கே வந்தார்.

ஆனால், ஜானகியின் இளமை, எதிர்கால வாழ்க்கை இரண்டையும் நினைத்தபோது, தனது சகல சொத்துச்

சுகங்களையும் இழந்துவிட்ட ஓர் உணர்வே அவருக்கு மேலிட்டது.

'இன்றே கண்டிக்குச் சென்று ஜானகியைப் பார்க்க வேண்டும்.'

மனசில் திட்டம் போட்டுக்கொண்டே வீட்டைத்தேடி நடந்தார்.

பொன்னையர் விருந்தையில் காலெடுத்து வைக்க வில்லை. இருந்தாற்போல் இடியோசையாக வீதியடங்க ஜனநடமாட்டமும், குரலொலியும் கேட்டன. குந்துக் காலில் நின்று உற்றுக் கவனித்தார்.

'மறுபடியும் ஏதேன் தொழிலாளர் போராட்டம் நடக்கிறதோ?'

அவர் கண்களுக்கு அப்படியும் தெரியவில்லை. பெரும் ஆர்ப்பாட்டங்களோ, கோஷங்களோ இருப்பதாயுமில்லை. ஒரே ஆரவாரமாகவே தெரிந்தது.

ஜனத்திரளும் ஆர்ப்பரிப்பும் நின்றபாடாய்க் காண வில்லை. வரவர ஜனக் கூட்டம் வீதியை அடைத்துப்பிடித் துப் பெருகிக்கொண்டு வந்தது.

தான் கண்டிக்குப் புறப்பட எடுத்த தீர்மானத்திற்கு இது ஊறு விளைவிக்குமோ என்று ஒரு கணம் சஞ்சலப்பட் டார்.

ஜனக்கூட்டம் சற்று வேகமாகக் கொந்தளித்துக் கத் துகின்ற தொனியும் இப்போது அவர் காதில் கேட்டது.

விருந்தையிலிருந்து இறங்கி பிறங்கை கட்டிக் கொண்டு வாசல் பக்கம் நின்று வீதியைப் பார்த்த வண் ணம், மெதுவாகச் சென்று 'கேற்'றைத் திறந்தார்.

தூரத்தே முண்டியடித்துக் கொண்டு கும்பலாகத் திணறி வரும், ஜனத்திரளும், ஏந்திப் பிடித்து முன்னேறி வருகின்ற செங்கொடிகளும் அவர் கண்களில் தோன்றின.

'ஊர்வலம் போல் இருக்கிறது' என்று யூகித்துக் கொண்டார் பொன்னையர்.

காலை வேளையில் பத்து மணிக்கெல்லாம் ஊர்வலங்கள் நிகழ்வதை அவர் கேள்விப்பட்டதேயில்லை.

'அரசாங்கம் கெடுபிடிச் சட்டம் போட்டிருக்கும் வேளையில், இப்படிப் பகிரங்க ஊர்வலம் நடத்த முடியுமா?'

எல்லாம் அவருக்கு வியப்பாகவே இருந்தன. மதிற் சுவர் ஓரமாக நின்று காது கொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்தார்.

இருவர் உற்சாகத்தோடு பேசிக் கொண்டு போன வார்த்தைகள் காதில் விழுந்தன.

"உணவு விலையைக் கூட்டிச் சனங்களின் வயித்தில் அடிச்சவேக்குக் கடைசியில் நாசம் வந்து புடிச்சிட்டுது."

"மக்கள் போராட்டம் முழு வெற்றி"

"ஏழைகள் வயிற்றில் விழுந்த அடி, ஆட்சி அதிகாரத்தையே கலக்கி விழுத்தி விட்டது."

பொன்னையருக்குச் 'சங்கதி' வெளித்தது.

'பெருஞ் சொத்துச் சுகவாசிகளைப் பாதுகாக்கப் போய் ஏழை மக்களின் வயிற்றில் அடித்ததால் வந்த வினை இது.'

அந்தக் கூட்டத்தில் சொல்லிக்கொண்டுபோன அபிப்பிராயத்தை அவர் மனசும் 'ஆமாம்' என்று ஒப்புக் கொண்டது.

ஊர்வலம் அண்மி விட்டது. கூர்ந்து கவனித்தார். ஊர்வலம் நெருங்க நெருங்க அதில் எழுந்த கோஷக்குரல்களும் அண்டதிக்கதிர ஒலிக்கத் தொடங்கின.

"மக்கள் போராட்டம்?"

"கலக்கி விட்டது!"

"தொழிலாளர் வெற்றி?"

"தேசத்தின் வெற்றி?"

"சுரண்டும் வர்க்கத்தை?"

"பூண்டோடு அழிப்போம்!"

''தொழிலாளர் ஒற்றுமை?''

''ஓங்கி வளர்க!''

''தோழர் பொன்ராசாவுக்கு?''

''ஜே! ஜே!!''

மின்சாரம் இடுக்கி அடித்தமாதிரி பொன்னையர் பிரமிப்பில் ஆழ்ந்தார். தான் கனவுலகில் நிற்பதாக ஒரு கணம் அவருக்குத் தோன்றியது.

தொழிலாளர்கள், விவசாயிகள், பெண்கள், இளைஞர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஆசிரியர்கள் ஒருமித்து ஆவேசித்துப் போய்க்கொண்டிருக்கிற காட்சி, பொன்னையர் நிலையை அடியோடு குலைத்தது.

அவர்கள் கரங்களில் 'படபட'த்துக் கம்பீரித்துக் கொண்டிருக்கிற கொடிகள் வெற்றி முரசம் கொட்டுவது போல் அவருக்குப் பட்டன.

பொன்னையர் தன்னையும் தனது நிலையையும் மறந்தவராய் வீதிக்கு வந்து கண்ணுானப் பார்த்தபடி நிற்கலானார்.

தொழிலாளர் புடைசூழ, ஊர்வலத்தின் ஒரு பகுதிக்குத் தலைமை தாங்கி வந்துகொண்டிருந்தான் பொன்ராசா.

பெண்கள் ஊர்வலத்தை உடனே அவர் கண்கள் மேய்ந்தன.

அவர் ஊகித்தது போல் அந்தக் குழாமில் அவரின் ஜானகியைக் காணவில்லை.

ஊர்வலம் எக்காளித்து ஜெயபேரிகையுடன் முன்னேறிக்கொண்டிருந்தது.

அணிவகுப்பின் முக்காற் பகுதி 'கேற்'றடியைத் தாண்டிக்கொண்டிருக்கும் போது 'திடீ'ரென்று கணக்கற்ற உக்ர கோஷத் தொனிகள் கமாரிட்டன.

''சதிகாரரை?''

''நீருக்குவோம்!''

''தோழர் பொன்ராசாவுக்கு?''

''ஜே! ஜே!''

மூன்றுவது படையாக அணிவகுத்துக்கொண்ட மக்கள் கூட்டம், அவர் நின்ற கேற்றண்டையைப் பார்த்தே குரல் வைத்தது.

''விரிவுரையாளர் இராமசாமிக்கு?''

''ஜே! ஜே!''

''தோழி ஜானகிக்கு?''

''ஜே! ஜே!''

பொன்னையா அங்கம் சிலிர்க்க, ஆவலோடு அவர்களை இமை வெட்டாமல் பார்த்துக்கொண்டே பூரித்து விம்மிய நெஞ்சினராய் நின்றார்.

ஆனந்த பரவசத்தில் அக்களித்துப்போன அவர் இதயம் அவருள் கேவியது. அக்களிப்பு வேதனை அவர் கண்களில் ஊனித்துக்கொண்டிருந்தது.

அவர் கண்கள் கரைந்து கண்ணீர் உகுத்தன.

தன் கண்ணில் மறையும் வரை, பொன்னையர் அந்தத் தோற்றத்தை, மனம் பொங்க, ஆசுவாசமாகப் பார்த்துக்கொண்டே நின்றார்.

அப்போது அவர் நெஞ்சூறி ஒரு பெருமூச்சுக் கிளம்பி அவர் ஆத்மராகமாக மாறியது.

'நான் பெற்ற செல்வமே. எனக்கே வழிகாட்டி விட்டாய். இது எனக்குப் போதுமடி.'

(முற்றும்)

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களின் தரமான படைப்புக்கள் மாதா மாதம் வீரகேசரி பிரசுரமாக நூலுருவில் வெளிவருகின்றன.

தவருமல் இவைகளைப் பெற்று உங்கள் இல்லத்தில் ஓர் 'குடும்ப நூல் நிலையத்தை' ஆரம்பியுங்கள்.

ஆறு புத்தகங்களை அடுத்து நீங்கள் வாங்கிஞல், ஏழாவது புத்தகம் இஞமாக அனுப்பி வைக்கப்படும். இப் பரிசுத் திட்டத்தில் ஏற்கனவே ஆயிரத்துக்கு மேற்பட்ட வாசகர்கள் இஞமாக நூல்களைப் பெற்றுள்ளனர்.

புத்தகங்களைக் கிரமமாகப் பெறுவதில் சிரமமிருந்தால் நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

விநியோக நிர்வாகி,
வீரகேசரி,
த. பெ. 160,
கொழும்பு.

# விற்பனைக்குள்ள புத்தகங்களின்

## விபரம்

| புத்தகத்தின் பெயர் | எழுதியவர் | விலை |
|---|---|---|
| குமாரபுரம் | ஏ. பாலமனோகரன் | —3.40 |
| புதிய தலைமுறைகள் | வை. அஹ்மத் | —3.60 |
| அந்தரங்க கீதம் | உ. தயணன் | —3.60 |
| உலகங்கள் வெல்லப்படுகின்றன | கே. டானியல் | —3.60 |
| பிரளயம் | செங்கை ஆழியான் | —3.40 |
| வரலாறு அவளைத் தோற்றுவிட்டது | கே. ஆர். டேவிட் | —3.60 |
| கிரௌஞ்சப்பறவைகள் | வ. அ. இராசரத்தினம் | —3.90 |
| நெஞ்சக்கனல் | கே. வி. எஸ். வாஸ் | —3.40 |
| உமையாள்புரத்துஉமா | புரட்சிபாலன் | —4.40 |
| நெஞ்சில் ஓர் இரகசியம் | கருணசேன ஜயலத் | —4.90 |
| யாத்திரை | பொ. பத்மநாதன் | —3.90 |
| கனவுகள் வாழ்கின்றன | இந்திராதேவி சுப்பிரமணியம் | —3.90 |
| நான் கெடமாட்டேன் | க. அருள்சுப்பிரமணியம் | —3.60 |
| இரவின் முடிவு | செங்கை ஆழியான் | —3.90 |
| விடிவுகால நட்சத்திரம் | கே. விஜயன் | —4.90 |
| போடியார் மாப்பிள்ளை | எஸ். ஸ்ரீ ஜோன்ராஜன் | —3.60 |
| போராளிகள் காத்திருக்கின்றனர் | கே. டானியல் | —3.40 |
| காலங்கள் சாவதில்லை | தெளிவத்தைஜோசப் | —3.90 |
| ஊமை உள்ளங்கள் | ஞானரதன் | —3:60 |
| காட்டாறு | செங்கை ஆழியான் | —4.90 |

097148

[illegible] — EE/61

7/11 [illegible] A031

8/8/86 [illegible] A076

15/11/86 [illegible] A089

2/12/86 [illegible] A049

12/2/87 [illegible] 87/A010

13/2/87 [illegible] 87/A052

28/11/87 [illegible] D006

12/12/87 [illegible] A037

13.11.89 [illegible] B232

18.5.90 [illegible] D015

2.9.90 [illegible] B215

12.9.90 [illegible] B225

22.9.90 [illegible] B243

14.1. [illegible] B266

8.4. [illegible] B209

13.4. [illegible] B245

15.4. [illegible] B254

20.7.91 [illegible] B247

3.8. [illegible] B233

4.4.94 [illegible] 270

16.4 [illegible] B247

"கொள்கையா. . .?"

"கடமையா. . .?"

"[illegible]லட்[illegible]யமா. . .?"

"சுகபோகமா. . .?"

இரண்டும் இரு துருவங்களாக ஒன்றோடொன்று மோதிய [illegible]து அந்தப் பெண் — ஒரு [illegible]லீஸ் உயர் அதிகாரியின் [illegible]ாமி, எவ்வாறு தன் சூழ் நிலையை வென்று, "மானிடம்" என்ற உ[illegible]ாவிய தத்துவத் திற்கா[illegible] தன் சுகபோகங்களையும் அந்தஸ்து, அதிகாரங்களையும் தியாகம் செய்தாள். . . . என்று கூறுவது இந்நாவல்!

---

*வீரகே[illegible] பிரசுரம் — 63*

---